




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 2 | Issue: 284 | 26-04-2025 | சனிக்கிழமை | Free E- Paper | ●சென்னை ●மதுரை ●கோவை ●திருச்சி







# போலீஸ் மிரட்டியதால் மாநாட்டுக்கு துணைவேந்தர்கள் வரவில்லை

**ஊட்டி, ஏப்.26:** நீலகிரி மாவட்டம் ஊட்டி ராஜ்பவன் மாளிகையில் இன்று காலை துணைவேந்தர்கள் மாநாடு தொடங்கியது. மாநாட்டுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமை வகித்தார். குடியரசுத் துணை தலைவர் ஜெகதீப் தன்கர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். இந்நிலையில், இந்த மாநாட்டில் மாநில பல்கலைக்கழக துணைவேந்தர்களின் பெரும்பாலானவர்கள் பங்கேற்காதது பெரும்சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, "இந்த மாநாட்டில் மாநில பல்கலைக்கழக துணைவேந்தர்கள் பங்கேற்கவில்லை. சிலர் ஊட்டி வந்தடைந்தனர். ஆனால் அவர்கள் மிரட்டப்பட்டனர். மாநில அரசின் போலீஸார் அவர்கள் தங்கியிருந்த பகுதிகளுக்கு சென்று கதவை தட்டி, நீங்கள் வீடு திரும்ப முடியாது என மிரட்டியுள்ளனர்.

மேலும், மாநில பாடத்திட்டத்தில் படித்தவர்கள் முனைவர் பட்டம் பெற்றிருந்தாலும் எதுவும் தெரிவதில்லை. ஆண்டுக்கு 6,500 பேர் முனைவர் பட்டம் பெறுகின்றனர். இவர்கள் ரூ.15,000 சம்பளத்துக்கு தினக் கூலிகளாக பணிபுரிகின்றனர். இவர்கள் அரசு துறைகளில் ஏதாவது பணியில் சேருவதே இலக்காக இருக்கிறது. ஆனால், தனியார் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்கள் சிறந்து விளங்குகின்றனர். இந்தியாவிலேயே சிறந்து விளங்கிய தமிழ்நாடு பல்கலைக்கழகங்களின் நிலை தற்போது கவலைக்குரியதாக உள்ளது. பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலையுள்ளது" என்று காட்டமாக கூறினார்.

பின்னணி என்ன? - தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற முறையில், ஆளுநர் ஆர்.என்.ரவி கடந்த 2022 முதல் ஆண்டுதோறும் துணைவேந்தர்கள் மாநாட்டை ஊட்டியில் நடத்தி வருகிறார். இந்த மாநாட்டில் மாநிலம் முழுவதும் உள்ள 48 மத்திய, மாநில அரசுப் பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் பங்கேற்று வந்தனர்.

இதற்கிடையே, சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் ரவி கிடப்பில் போட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பப்பட்ட 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிட்டது. பல்கலைக்கழக வேந்தர் பொறுப்பில் இருந்து ஆளுநரை நீக்கும் மசோதாவும் அதில் ஒன்றாகும்.

இதைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்டதாக கூறி 10 மசோதாக்களும் சட்டமானதாக அரசிதழில் தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டது. தொடர்ந்து, துணைவேந்தர்கள், பதிவாளர்கள் கூட்டத்தை முதல்வர் ஸ்டாலின் கடந்த 16-ம் தேதி சென்னையில் நடத்தினார்.

பல்கலைக்கழக வேந்தர் பொறுப்பு இன்னமும் ஆளுநர் வசம் உள்ளதா அல்லது முதல்வர் கைக்கு மாறிவிட்டதா என்பதில் இன்னும் குழப்பம் நிலவிய பின்புலத்தில்தான் ஆளுநர் மாளிகை சார்பில் துணைவேந்தர்கள் வருடாந்திர மாநாடு ஊட்டியில் இன்று தொடங்கியது. இந்த மாநாட்டுக்கு 49 பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதில் பல்வேறு தனியார் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த துணைவேந்தர்கள் 32 பேர் கலந்து கொண்டனர்.

அதேசமயம் அரசு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த துணைவேந்தர்கள் பெரும்பாலானவர்கள் கலந்து கொள்ளவில்லை. பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் மட்டும் பங்கேற்றார். பெரும்பாலான பல்கலைக்கழகங்களின் இயக்குநர்கள், டீன் மற்றும் பிரதிநிதிகள் மட்டுமே பங்கேற்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

## யாரும் எங்களை மிரட்டவில்லை

துணை வேந்தர்களை, சிறப்பு குழுவின் மூலம் மிரட்டி திருப்பி அனுப்பப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இதனை எதிர்த்து கூறிய சில துணை வேந்தர்கள், தமிழ்நாடு அரசின் எந்த அதிகாரிகளாலும் நாங்கள் மிரட்டப்படவில்லை என விளக்கினர். மேலும், 'ஆளுநரின் அழைப்பில் நடைபெறும் மாநாட்டிற்கு நாங்கள் செல்ல விரும்பவில்லை' என தெரிவித்தனர்.

மகளின் திருமண காரணமாக காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் ரவி, மாநாட்டில் பங்கேற்கவில்லை. சேலம் பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் ஜெநாதன், வழக்கு விசாரணைக்கு ஆஜராகும் காரணமாக, அவர் மாநாட்டில் பங்கேற்க முடியவில்லை என தெரிவித்தனர்.

# சிக்கிம் நிலச்சரிவு: 1000 சுற்றுலாப் பயணிகள் சிக்கித் தவிப்பு!



**சிக்கிம், ஏப்.26:** வடக்கு சிக்கிமில் உள்ள இரண்டு உயரமான மலைப் பகுதியான லாச்சென் மற்றும் லாச்சுங்கில் சுமார் 1,000 சுற்றுலாப் பயணிகள் வியாழக்கிழமை முதல் நிலச்சரிவுகள் காரணமாக தொடர்ந்து சிக்கித் தவிப்பதாக மாவட்ட மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

நிலச்சரிவு காரணமாக சாலையில் சிக்கித் தவித்த சுமார் 1,500 சுற்றுலாப் பயணிகள் நேற்றிரவு அருகிலுள்ள கிராமங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

அவர்கள் காவல் நிலையம், குருத்வாரா, இந்தோ - திபெத்திய எல்லை காவல் முகாம் போன்ற இடங்களில் இரவைக் கழித்த நிலையில் அவர்களுக்கு அங்குள்ள கிராமவாசிகள் உணவளித்தனர்.

நேற்றைய முன்தினம் இரவு முதல் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவுகள், சுங்தாங்கிலிருந்து லாச்சென் செல்லும் வழியில் முன்ஷிதாங்கிற்கு அருகிலும், சுங்தாங்கிலிருந்து லாச்சுங்கிற்கு செல்லும் வழியில் லிமாவிற்கு அருகிலும் பல இடங்களில் சாலைகள் சேதமடைந்துள்ளது.

இதனால், பல்வேறு சாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் மாவட்ட காவல்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## ஆளுநர் ரவி குற்றச்சாட்டுக்கு அமைச்சர் கோவி. செழியன் பதில்...!!!



ஆளுநர் ரவி தமிழக அரசு சட்டசபையில் தாக்கல் செய்யும் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போட்டு வைப்பதாக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது என்றும் அவர் பத்து மசோதாக்களை ஜனாதிபதிக்கு அனுப்பியது சட்டவிரோதம் என்றும் தீர்ப்பு வழங்கியது. அதன் பிறகு ஆளுநர் ஜனாதிபதிக்கு அனுப்பிய பத்து மசோதாக்களுக்கும் உச்சநீதிமன்றம் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி ஒப்புதல் வழங்கியது.


இதனால் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தராக முதலமைச்சரானார். உச்ச நீதிமன்றம் மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கியதால் முதலமைச்சர் பல்கலைக்கழகங்களில்ன் வேந்தரான நிலையில் ஆளுநர் மாளிகை இன்னும் ஆளுநர் தான் பல்கலைக்கழகங்களில் வேந்தராக தொடர்கிறார் என்று அறிக்கை வெளியிட்டது. இது கடும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் கண்டங்களை தெரிவித்து வருகிறார்கள்.

இந்நிலையில் இன்று உதகையில் ஆளுநர் ரவி தலைமையில் பல்கலைக்கழக வேந்தர்கள் மாநாடு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. அதன்படி இன்று உதகையில் ஆளுநர் ஆர்.என் ரவி தலைமையில் துணைவேந்தர்கள் மாநாடு தொடங்கப்பட்டது. இதில் குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாநாட்டை தொடங்கி வைத்தார். இந்த மாநாட்டில் 9 பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மட்டுமே பங்கேற்றுள்ளனர். அப்போது குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் உச்ச நீதிமன்ற தீர்ப்பை விமர்சித்தார். இந்நிலையில் இதற்கு அமைச்சர் கோவி. செழியன் பதிலளித்துள்ளார்.



அதாவது முதலமைச்சர் மு க ஸ்டாலின் போட்ட வழக்கு ராஜ்பவனைத் தாண்டி ராஷ்ட்ரபதி பவன் வரை பதம் பார்த்து விட்டதே என அடிவயிறு எரிந்ததால், உச்ச நீதிமன்ற தீர்ப்பை குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் விமர்சித்துள்ளார்.

அதோடு ஆளுநர் ரவி துணைவேந்தர்கள் மாநாட்டில் பேசும் போது தமிழக அரசு நள்ளிரவில் துணை வேந்தர்களை மிரட்டியுள்ளது. இதனால்தான் மாநாட்டில் கலந்து கொள்ள வந்தவர்கள் கூட பாதியில் திரும்பி சென்று விட்டதாக பரபரப்பு குற்றச்சாட்டினை முன் வைத்துள்ளார். அவர் மேற்கு வங்க ஆளுநராக இருந்தபோது முதலமைச்சர் மம்தா பானர்ஜி அரசுக்கு எதிராக நடத்திய அடாவடிகளை நாடு பார்த்தது. அந்த வழியில் நடக்கும் ஆளுநர் ரவி ஜெகதீப் தன்கரை அழைத்து வந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை என்று விமர்சித்தார்.



## இன்றைய பஞ்சாங்கம்

26.04.2025 (சித்திரை 13)
சனிக்கிழமை

திதி:
இன்று காலை 6.13 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.

---

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 4.17 வரை உத்திரட்டாதி பின்பு ரேவதி.

---

யோகம்:
இன்று காலை 6.50 வரை வைதிருதி பின்பு விஷ்கம்பம்.

கரணம்:
இன்று காலை 6.13 வரை வணிசை பின்பு மாலை 4.57 வரை பத்திரை பின்பு சகுனி.

---

அமிர்தாதி யோகம்:
இன்று அதிகாலை 4.17 வரை சித்த யோகம் பின்பு அதிகாலை 5.58 வரை அமிர்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

---

சூரிய உதயம் : 5.59

---

சந்திராஷ்டமம் :
இன்று அதிகாலை 4.17 வரை மகம் பின்பு பூரம்.

---

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# பாகிஸ்தானியரை உடனே திருப்பி அனுப்ப நடவடிக்கை: முதல்வர்களுக்கு அமித் ஷா

**புதுதில்லி, ஏப்.26:** நாட்டில் தங்கியுள்ள அனைத்து பாகிஸ்தானியர்களையும் அடையாளம் காணவேண்டும் என்று அனைத்து மாநில முதல்வர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உத்தரவிட்டுள்ளார்.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் சுற்றுலாவுக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் மீது கடந்த 22-ம் தேதி தீவிரவாத கும்பல் தாக்குதல் நடத்தியது. இதில் 26 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த காலங்களில் இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் நடந்துள்ள போதிலும், அப்பாவி மக்களைக் குறிவைத்து இதுபோல தாக்குதல் நடத்தப்பட்டது இதுவே முதல்முறை என்பதால் கட்சி பேதமின்றி அனைத்து அரசியல் தலைவர்களும் இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத அமைப்பு இந்த கொடூர செயலில் ஈடுபட்டுள்ளது தெரியவந்துள்ளதால், பாகிஸ்தான் மீது பல்வேறு தடை நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது. இதன்படி சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்தி வைப்பு, இந்தியா - பாகிஸ்தான் எல்லையாக பஞ்சாபில் அமைந்துள்ள அட்டாரி - வாஹா சோதனைச் சாவடி மூடல் என்பது போன்ற முடிவுகளை மத்திய அரசு எடுத்துள்ளது.

இதைத் தொடர்ந்து, சிம்லா ஒப்பந்தத்தை ரத்து செய்த பாகிஸ்தான், இந்த செயலை போர் தொடுத்ததாகவே கருதுவோம் என தெரிவித்துள்ளது. மேலும் இந்தியாவுக்கான வான்பரப்பு மூடப்படுவதாக தெரிவித்த பாகிஸ்தான், இந்தியாவுடனான வணிக நடவடிக்கைகளையும் நிறுத்தியுள்ளது.



இந்நிலையில் டெல்லியில் நேற்று முன்தினம் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பஹல்காம் தாக்குதல் சம்பவம் பற்றி மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்த கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டன. அதில், தாக்குதல் சம்பவம் நடந்த பைசரன் புல்வெளியைத் திறக்க அனுமதி இல்லை என்றும் போலீஸார் அனுமதியின்றி சுற்றுலாப்பயணிகள் புல்வெளிக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அனைத்து மாநில முதல்வர்களுடன், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று தொலைபேசியில் உரையாடினார். அப்போது, தங்களது மாநிலங்களில் வசிக்கும் பாகிஸ்தானியர்களை அடையாளம் கண்டறிந்து அவர்களை உடனடியாக திருப்பி அனுப்புமாறு அறிவுறுத்தியதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களது விசாக்களை ரத்து செய்து திருப்பி அனுப்புமாறு மத்திய அமைச்சர் அமித் ஷா, முதல்வர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் சார்க் நாடுகள் விசா மூலம் விலக்கு திட்ட (எஸ்விஇஎஸ்) விசா மூலம் பாகிஸ்தான் நாட்டு மக்கள் இந்தியாவுக்கு வர அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அதேபோல், எஸ்விஇஎஸ் விசா பெற்று இந்தியாவில் இருக்கும் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் அடுத்த 48 மணி நேரத்துக்குள் வெளியேற வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மருத்துவ சிகிச்சைக்காக விசா பெற்றுள்ள பாகிஸ்தான் நாட்டவர்க்கு வரும் 29-ம் தேதி வரை மட்டுமே நாட்டில் தங்கியிருக்க அனுமதி தரப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அனுமதிக்கப்பட்ட தினங்களுக்குள் அவர்கள் வெளியேறவேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## இன்றைய கேள்வி

ரயிலை கவிழ்க்க சதியா..?: திருவள்ளூர் அருகே தண்டவாளத்தின் போல்ட்நட்டுகள் அகற்றம்!

இந்த செய்தி எந்த பக்கத்தில் இடம்பெற்றுள்ளது என கண்டுபிடிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து தக்க சன்மானம் வழங்கப்படும்.

நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய WhatsApp no.8122664699



நேற்றைய இதழில் கேட்கப்பட்ட கேள்விக்கு சரியான விடை அளித்த வாசகர்
**அ.ராஜாரகுமான்**
7,பெரியபள்ளிவாசல் தெரு,கம்பம்625516

# திருக்குறள் குறள்-241

அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம்
பொருட்செல்வம் பூரியார் கண்ணு முள



பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன; (உயர்ந்தவரிடத்தில் மட்டுமே உள்ள) அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வமாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



கோடாரி வலுவானது
முடியை வெட்டாது.
பிளேடு கூர்மையானது
ஆனால்
மரத்தை வெட்டாது.
எல்லோரிடமும் ஒரு
திறமை இருக்கும் ஒரே
திறமை இருக்காது.

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## நிமிர் என்ற பெயரில் போக்சோ விழிப்புணர்வு பிரச்சார இயக்கத்தை எஸ்பி தொடங்கிவைத்தார்



போக்சோ உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுப்பதற்காக மாவட்ட எஸ் .பி ஸ்டாலின் நேற்று நிமிர் என்ற பெயரில் போக்சோ விழிப்புணர்வு பிரச்சார இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

## மஞ்சள் வைத்து அழைப்பிதழ் வழங்கும் நிகழ்ச்சி



சுசீந்திரம் தாணுமாலயன் சுவாமி கோவில் சித்திரை தெப்ப திருவிழாவுக்காக மஞ்சள் வைத்து அழைப்பிதழ் வழங்கும் நிகழ்ச்சி குமரி மாவட்ட திருக்கோயில்கள் நிர்வாக அறங்காவலர் குழுத் தலைவர் பிரபா ஜி. ராமகிருஷ்ணன் தலைமையில் நடந்தது.

## ஜல்லிக்கட்டில் உயிரிழந்த மாடுபிடி வீரர் நவீன்குமாரின் தங்கைக்கு மாநகாட்சியில் பணி நியமன உத்தரவு



மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் உயிரிழந்த மாடுபிடி வீரர் நவீன்குமாரின் தங்கைக்கு மாநகாட்சியில் பணி நியமன உத்தரவை மேயர் இந்திராணி, ஆணையர் சித்ரா ஆகியோர் வழங்கினர்.

## சனிஸ்வர பகவான் ஆலய பிரம்மோற்சவ விழாவிற்கான பந்தக்கால் முகூர்த்தம்



புதுச்சேரி மாநிலம் திருநள்ளாறில் சனிஸ்வர பகவான் ஆலய பிரம்மோற்சவ விழாவிற்கான பந்தக்கால் முகூர்த்தம் நேற்று நடந்தது.

## திருவத்திமலை கோவில் பத்தாம் ஆண்டு கல்யாண வைபோக விழா



**விழுப்புரம்,ஏப்.26:** திருவத்திமலை கோவில் பத்தாம் ஆண்டு கல்யாண வைபோக விழா நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் மேல்தாங்கல் அடுத்த திருவத்தி மலை வெங்கடாஜலபதி திருக் கோவில் பத்தாம் ஆண்டு திருக்கல்யாண வைபோகம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

வந்தவாசி வட்டம் மாம்பட்டு மகா சக்தி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆதிசக்தி ஸ்ரீசர்வ மங்கள காளி சக்தி பீடம் அருள்திரு லட்சுமண சாமிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார் அதனைத் தொடர்ந்து ஸ்ரீ பெருமாள் சுவாமிக்கு திருக்கல்யாண வைபோகம் நடைபெற்றது பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

**அகரம் ராமதாஸ்**
**செய்தியாளர்**

## தமிழக முற்போக்கு கட்சியின் மாநில துணைத் தலைவராக வழக்கறிஞர் நியமனம்



**கோவை, ஏப்.26:** தமிழ்நாடு முற்போக்கு கட்சியின் மாநில துணைத் தலைவராக வழக்கறிஞர் புஷ்பானந்தம் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இவரை மாநிலத் தலைவர் சக்திவேல் நியமனம் செய்துள்ளார்.

கோவை தடாகம் இடையர்பாளையம் பகுதியில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேல் அனைத்து சமூக மக்களுக்கு உதவும் இந்நி லையில் கடந்த தேர்தலில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பில் பாராளுமன்ற தொகுதியில் போட்டியிட்டவர்.

இக்கட்சியில் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் தொடர்ந்து நல் ஆதரவும் நற்பணிகளையும் செய்ய வேண்டுமென மாநிலத் தலைவர் சக்திவேல் தனது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்..

## நேர்முக வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 25 இளைஞர்களுக்கு பணிபுரிவதற்கான ஆணை




**திருப்பத்தூர்,ஏப்.26:** திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தில் சிறிய அளவில் பல்வேறு தனியார் நிறுவனங்கள் பங்கேற்புடன் நேர்முக வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 25 இளைஞர்களுக்கு அந் நிறுவனங்களில் பணிபுரிவதற்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் சிவசௌந்தரவல்லி இ. ஆ. ப .வழங்கினார் உடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கஸ்தூரி மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

## நாச்சியார் திருக்கோலத்தில் சுவாமி ஊர்வலம்



சென்னை மயிலாப்பூர் மாதவ பெருமாள் கோவிலில், 5ம் நாள் காலை நாச்சியார் திருக்கோலத்தில் சுவாமி ஊர்வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

## வந்தவாசி பகுதியில் பிரதோஷ வழிபாடு



**வந்தவாசி , ஏப் 26:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நேற்று பிரதோஷம் முன்னிட்டு நந்தி பகவானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

மேலும் விஷேச திருமஞ்சனம் நடந்தேறியது. உற்சவ மூர்த்திகளுக்கு மலர் மாலைகள் சாற்றப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது. இதே போல் வந்தவாசி ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற பிரதோஷ வழிபாட்டில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். உற்சவ மூர்த்தி மேளதாளத்துடன் கோவில் பிரகாரத்தில் வீதியுலா வந்தார்.

## "உயிரிழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி ஒரு நிமிடம் மௌன அஞ்சலி"



**சென்னை, ஏப்.26:** "உயிரிழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி ஒரு நிமிடம் மௌன அஞ்சலி" செலுத்தப்பட்டது.

ராகவி சினி ஆர்ட்ஸ் சார்பிலும், லியானா குரூப்ஸ் சார்பிலும் இணைந்து திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர் தலைமையில் பஹல்கம் பயங்கரவாத தாக்குதலால் உயிரிழந்தோருக்கு மெழுகுவர்த்தி ஏற்றி ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்த பட்டது.

நிகழ்வில் நடிகர் மீசை மனோகரன், வசன கர்த்தாவும், நடிகருமான அப்பா பாலாஜி, நடிகர் மீசை அழகப்பன், எழுத்தாளர் விவேக் ராஜ், மேக்கப் ஆர்ட்டிஸ்டும், நடிகையுமான அங்கிதா, நடிகை புனிதா மன்மதன், நடிகை முனீஸ்வரி, ஆர்த்தி லட்சுமி, பிரியதர்ஷினி, ரிஷிதா, நடிகர்கள், நடிகைகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## உலக புத்தக தினம் அனுசரிப்பு.



தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் ஒன்றியம் செங்கனூர் ஊராட்சிக்குட்பட்ட சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உலக புத்தக தினம் அனுசரிப்பு.

## காட்பாடி ஸ்ரீவரசக்தி விநாயகர் ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலிப்பு!



**வேலூர், ஏப். 26:** வேலூர் மாவட்டம், காட்பாடி வள்ளிமலை கூட்டுரோடு அருகில் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

வள்ளிமலை கூட்டுரோடு அருகில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்காரத்தில் ஸ்ரீ வரசித்தி விநாயகர் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார். இந்நிலையில் ராஜ அலங்காரத்தில் ஸ்ரீவரசித்தி விநாயகர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இந்த அலங்காரம் மற்றும் சிறப்பு பூஜைகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பிரம்மபுரம் ஸ்ரீஜெயக்குமார் அர்ச்சகர் வெகுவிமரிசையாக செய்திருந்தார்.

பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு ஸ்ரீ வரசித்தி விநாயகரின் அருளுக்கு பாத்திரமாயினர்.

இந்த சிறப்பு பூஜையில் கலந்து கொண்டவர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது.

## கரம்பக்குடி சிட்டி ரோட்டரி சங்கம் கரம்பக்குடி காவல் நிலையத்திற்கு சாலையோர தடுப்பு பலகை




**புதுக்கோட்டை, ஏப்.26:** கரம்பக்குடி சிட்டி ரோட்டரி சங்கம் கரம்பக்குடி காவல் நிலையத்திற்கு சாலையோர தடுப்பு பலகை வழங்கப்பட்டது.

ரோட்டரி சங்கத்தின் மாவட்ட ஆளுநர் ராஜா கோவிந்தசாமி அவர்களும் துணை ஆளுநர் கணேஷ் குமார் அவர்களும் சாந்தாராம் அவர்களும் பட்டைய தலைவர் பாண்டியன் அவர்களும் தலைவர் விநாயகா ரமேஷ் அவர்களும் செயலாளர் பொருளாளர் முன்னாள் தலைவர்கள் வருங்கால தலைவர்கள் முன்னாள் செயலாளர்கள் வருங்கால செயலாளர்கள் பொருளாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## வானொலி சிறுவர் சோலை நிகழ்ச்சி



**காரைக்கால்,ஏப்.26:** காரைக்கால் வானொலி பண்பலையில் (100.3) சிறுவர் சோலை நிகழ்ச்சியில் மல்லபுரம் அரசு உதவி பெரும் தொடக்கப் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். மே 10.5.25 2.30 மணிக்கு நிகழ்ச்சி ஒலி பரப்பாகிறது என்று நிலைய இயக்குநர் தெரி வித்தார்.

**செய்தி : குடந்தை பரிபூரணன்.**

# அரசு நிலத்தில் அனுமதியின்றி மணல் எடுத்தவர்கள் மீது நடவடிக்கை; அமைச்சர் துரைமுருகன்



சென்னை, ஏப்.26:

தமிழக சட்டப்பேரவையில் நேரமில்லா நேரத்தில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பேசிய அதிமுக கொறடா எஸ் பி வேலுமணி, கோவையில் பட்டா நிலம் மற்றும் அரசு நிலங்களில் அனுமதியின்றி மணல் எடுப்பது தொடரபாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழு கனிமவள கடத்தலில் ஈடுபட்டவர்களை விட்டுவிட்டு சிறு விவசாயிகளை விசாரணைக்கு அழைத்ததோடு அதிகளவிலான அபராதத்தையும் விதித்திருப்பதாக கூறினார்.

தன் சொந்த நிலத்தில் மேடு பள்ளங்களை சரி செய்ய மண் வெட்டி எடுத்த விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத்தை ரத்து செய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதற்கு பதிலளித்து பேசிய நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கோவையில் 16 வழித்தடங்கள் மட்டும் சட்டத்திற்கு புறம்பாக இயங்கும் செங்கள் சூளைகளை மூடக்கோரி தொடரப்பட்ட வழக்கில் அரசு அனுமதியின்றி மணல் எடுப்போர் விவரங்களை தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என கூறினார்.

விசாரணையில் கோவையில் போரூர், இக்கறை, ஆலந்துரர், வெள்ளிமலை என பல்வேறு பகுதிகளில் உள்ள அரசு நிலங்களில் 4 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை மணல் வெட்டி எடுக்கப்பட்டிருப்பதும், செங்கல் சூளைகளில் அதிகளவில் மணல் எடுக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன் அடிப்படையில் சட்டவிதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என கனிமவளத்துறைக்கு உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும் துரைமுருகன் தெரிவித்தார்.

எனவே, விவசாய நிலங்களை சமன் செய்வதற்காக கிராவல் மண் எடுத்ததாக கூறுவது ஏற்புடையது அல்ல எனவும் அரசு நிலத்தில் கள்ளத்தனமாக கனிமங்களை வெட்டி எடுத்தவர்கள் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் துரைமுருகன் கூறினார்.

# சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைப்பு; பாகிஸ்தானுக்கு அதிகாரப்பூர்வ கடிதம் அனுப்பிய இந்தியா



டெல்லி, ஏப்.26:

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசம் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதியில் உள்ள பிரபல சுற்றுலா தலத்தில் கடந்த 22ம் தேதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் உள்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டஸ் பிரண்ட் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்த தாக்குதலை தொடர்ந்து இந்தியா , பாகிஸ்தான் இடையே போர் மூளும் சூழ்நிலையும் உருவாகியுள்ளது. பாகிஸ்தானியர்கள் இந்தியாவை விட்டு வெளியேற மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், பல்வேறு அதிரடி நடவடிக்கையிலும் மத்திய அரசு இறங்கியுள்ளது.

அதன்படி, ஜம்மு-காஷ்மீரில் இருந்து பாகிஸ்தானுக்கு பாயும் சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை மத்திய அரசு நிறுத்தியுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் இருந்து பாகிஸ்தானுக்கு செல்லும் நதிநீர் நிறுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் பல்வேறு மாகாணங்கள் சிந்து நதி நீரை நம்பியே உள்ளன. இந்தியாவின் இந்த நடவடிக்கை போர் அறிவிப்பிற்கு சமம் என்று பாகிஸ்தான் தெரிவித்து வருகிறது.

இந்நிலையில், சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக பாகிஸ்தானுக்கு இந்தியா அதிகாரப்பூர்வ கடிதம் அனுப்பியது. பாகிஸ்தான் நீர்வளத்துறைக்கு இந்திய ஜல் சக்தி துறை செயலாளர் தேபாஸ்ரீ முகர்ஜி கடிதம் அனுப்பியுள்ளார். பாகிஸ்தானின் தொடர்ச்சியான எல்லை தாண்டிய பயங்கரவாத செயல்பாடுகள் இந்த ஒப்பந்தத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
8122664699



## நலம் தரும் மருத்துவம்

# கண் பார்வையை மேம்படுத்தும் சொட்டு மருந்து

## இந்தியாவில் அனுமதி ரத்து!



கண் பார்வையை மேம்படுத்தும், படிப்பதற்காக மட்டும் அணியும் கண்ணாடி தேவைப்படாது என்ற விளம்பரத்துடன் அறிமுகம்செய்யப்பட்ட புதிய கண் சொட்டு மருந்து தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு இந்தியாவின் மருந்து தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் அனுமதி ரத்து செய்துள்ளது.

இது ப்ரெஸ்பியோபியா போன்ற கண் பார்வை குறைபாடு உள்ளவர்கள், படிக்கும்போது கண்ணாடி அணிவதைக் குறைக்கும், மிக அருகில் உள்ள பொருள்களை பார்க்கும்போது ஏற்படும் கண் மங்கலைத் தடுக்கும் என கூறப்பட்டிருந்த நிலையில், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை காரணமாக, வழங்கப்பட்ட அனுமதியை ரத்து செய்திருக்கிறது.

மேலும், மருந்து தயாரிப்பு நிறுவனமானது, இந்த கண் சொட்டு மருந்தை, மக்கள் யார் வேண்டுமானாலும், மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு இல்லாமல் வாங்கிப் பயன்படுத்தலாம் என்பது போன்ற அறிவிப்புகளை வெளியிட்டிருப்பது கவலையை ஏற்படுத்தியதாகவும் ஆனால், இந்த மருந்துக்கு மத்திய அரசு, மருத்துவரின் பரிந்துரையின்பேரில் மட்டுமே விற்பனை செய்யக் கூடிய மருந்தாக அனுமதி வழங்கியிருந்ததையும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இது குறித்து மத்திய அரசு தரப்பில் கூறப்பட்டிருப்பதாவது, என்டோட் மருந்து தயாரிப்பு நிறுவனம் அறிமுகப்படுத்தியிருந்த 'பிரெஸ்வு' (PRESVU) என்ற கண் சொட்டு மருந்துகளைப் பற்றி அதிகாரப்பூர்வமற்ற தகவல்களைக் கூறி விளம்பரம் செய்வது, மருந்தின் பாதுகாப்பு குறித்த சந்தேகங்களை எழுப்புவதால், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மருந்துக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**► மருந்து தயாரிப்பு நிறுவனம் என்ன சொல்கிறது?**

ஆனால், என்டோட் மருந்து தயாரிப்பு நிறுவனம் அளித்த விளக்கத்தில், பிரெஸ்வு கண் சொட்டு மருந்து தொடர்பாக நிரூபிக்கப்படாத அல்லது தவறான எந்த தகவலையும் நாங்கள் தெரிவிக்கவில்லை, அனுமதி ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து நீதிமன்றம் சென்று நியாயம் பெறுவோம் என்று தெரிவித்துள்ளது.

எங்களது மருந்துக்கு, 234 நோயாளிகளிடம் பரிசோதனை செய்து, அதில் வெற்றி பெற்ற பிறகே, அதனை அடிப்படையாக வைத்து இந்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் அனுமதி வழங்கியிருந்தது, இந்த மருந்தைப் பயன்படுத்தியவர்களின் கண்பார்வை மேம்பட்டது, படிக்கும்போது கண்ணாடி அணிவது குறைந்தது என்று நிரூபிக்கப்பட்டது என நிறுவனம் அளித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதே உள்பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கண் மருந்துக்கு, அமெரிக்க மருந்து தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் அனுமதி வழங்கி, அமெரிக்காவில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது, இதுவரை எந்த பெரிய பாதிப்புகளும் ஏற்படவில்லை.

இதே மருந்து தயாரிப்பு நிறுவனத்துக்கு எதிராக அமெரிக்காவில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறது. நடுத்தர வயதில், இயற்கையாகவே கண் பார்வை குறைபாடு ஏற்படுவோர் மற்றும் ப்ரெஸ்பியோபியா போன்ற குறைபாடுகளை புதிய கண் சொட்டு மருந்து சரி செய்வதாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று பிரெஸ்வு மருந்து அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. என்டோட் மருந்து தயாரிப்பு நிறுவனம் அறிமுகப்படுத்தியிருந்த 'பிரெஸ்வு' (PRESVU) என்ற கண் சொட்டு மருந்துகளைப் பயன்படுத்துவதால், படிக்கும்போது மட்டும் சிறு எழுத்துகள் தெரியாததால் கண்ணாடி அணிபவர்கள், பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இது இந்தியாவில் வரும் அக்டோபர் மாதத்தில் இருந்து விற்பனைக்கு வரும் என்றும், இதன் விலை ரூ.350 என்றும் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதன் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு இந்திய மருந்துத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் அனுமதியை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

# இபிஎஸ் மீதான அவதூறு வழக்கு விசாரணைக்கு தடை



சென்னை, ஏப்.26:

அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ்-க்கு எதிரான அவதூறு வழக்கு விசாரணைக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. கோவை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவதற்கும் அவருக்கு விலக்கு அளித்து உத்தரவிட்டுள்ளது.

கோவை விமான நிலையத்தில் கடந்த 2024 ஜூன் மாதத்தில் செய்தியாளர்களை சந்தித்த அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ் தனக்கு எதிராக அவதூறு கருத்துகளை தெரிவித்ததாக கூறி, அதிமுக முன்னாள் எம்.பி.யான கே.சி.பழனிசாமி, கோவை நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார். இதை விசாரித்த நீதிமன்றம், விசாரணைக்கு ஆஜராகுமாறு இபிஎஸ்-க்கு சம்மன் அனுப்பியது.

இந்த வழக்கை ரத்து செய்ய கோரியும், விசாரணைக்கு நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்க கோரியும் இபிஎஸ் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ்-க்கு எதிரான அவதூறு வழக்கின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தும், வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராவதில் இருந்தும் அவருக்கு விலக்கு அளித்தும் உத்தரவிட்டார். இந்த வழக்கில் 4 வாரத்துக்குள் பதில் அளிக்குமாறு கே.சி. பழனிசாமிக்கு உத்தரவிட்டு விசாரணையை நீதிபதி தள்ளிவைத்தார்.

# சொத்துக்குவிப்பு வழக்கில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுவிப்பு ரத்து



சென்னை, ஏப்.26:

கடந்த 2006-2011ம் ஆண்டுகளில் அமைச்சராக பதவி வகித்த எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், மற்றும் அவரது மனைவி, மகன் மீது வருமானத்துக்கு அதிகமாக 3 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு பதிவு செய்தது. இந்த வழக்கை விசாரித்த கடலூர் நீதிமன்றம், எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் உள்பட 3 பேரையும் வழக்கில் இருந்து விடுவித்து உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை எதிர்த்து லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதி பி.வேல்முருகன் முன்பாக நடந்தது. அப்போது லஞ்சஒழிப்புத் துறை தரப்பில் இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிகையை மேற்கோள்காட்டி குற்றச்சாட்டுகளுக்கு முகாந்திரம் இருப்பதாகவும், அதை கீழமை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டதாகவும் வாதிடப்பட்டது.

பதிலுக்கு எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தரப்பில் குடும்ப சொத்துக்களையும், அறக்கட்டளை சொத்துக்களையும் வருமானத்துக்கு அதிகமான சொத்து என லஞ்சஒழிப்புத் துறை தவறுதலாக கணக்கிட்டுள்ளது. இந்த வழக்கில் கடலூர் நீதிமன்றம் சரியான உத்தரவைத்தான் பிறப்பித்துள்ளது. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி இந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தார்.

இந்த நிலையில், இந்த வழக்கில் இன்று தீர்ப்பு வெளியானது. அதில், சொத்துக்குவிப்பு வழக்கில் இருந்து அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் விடுவிப்பு ரத்து செய்யப்படுவதாக சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், குற்றச்சாட்டுகளை பதிவு செய்து 6 மாதங்களுக்கு விசாரணையை முடிக்க வேண்டும் எனவும் போலீசுக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது.

# உள்ளாட்சிகளில் பதவிநீக்கம் செய்யப்பட்ட இடங்களுக்கு தேர்தல் நடத்தப்படாது: தமிழக அரசு உத்தரவாதம்

சென்னை, ஏப்.26:

பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள சென்னை தாம்பரம் மாநகராட்சி கவுன்சிலர்கள் மற்றும் உசிலம்பட்டி நகராட்சித் தலைவர் பதவிக்கு இப்போதைக்கு தேர்தல் நடத்த வேண்டாம் என மாநில தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக தமிழக அரசு உயர் நீதிமன்றத்தில் தகவல் தெரிவித்துள்ளது.

அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகக் கூறி சென்னை மாநகராட்சி 189-வது வார்டு கவுன்சிலர் பாபு, 5-வது வார்டு கவுன்சிலர் கே.பி.சொக்கலிங்கம், தாம்பரம் மாநகராட்சி 40-வது வார்டு கவுன்சிலரும், மண்டலத் தலைவருமான ஜெயபிரதீப், உசிலம்பட்டி நகராட்சித் தலைவரும், 11-வது வார்டு கவுன்சிலருமான சகுந்தலா ஆகியோரை பதவிநீக்கம் செய்து நகராட்சி நிர்வாகத்துறை செயலர் கடந்த மார்ச் 27-ம் தேதி உத்தரவிட்டார்.

தங்களை பதவி நீக்கம் செய்தது செல்லாது என அறிவிக்கக்கோரி இந்த உத்தரவை எதிர்த்து 4 பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்குகள் நீதிபதி ஜெ.சத்யநாராயண பிரசாத் முன்பாக நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது சென்னை, தாம்பரம் கவுன்சிலர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் எஸ்.ஆர். ராஜகோபால், டி.மோகன் ஆகியோரும், உசிலம்பட்டி நகராட்சித் தலைவர் சார்பில் வழக்கறிஞர் டி. செல்வமும் ஆஜராகி, 'இந்த 4 பேரையும் பதவி நீக்கம் செய்தது சட்டப்பூர்வமான விதிமுறைகளுக்கு எதிரானது. அவர்கள் தரப்பு விளக்கத்தைக் கோராமல் ஒருதலைபட்சமாக பதவியில் இருந்து நீக்கியுள்ளனர். இது சட்டவிரோதம். எனவே பதவி நீக்க உத்தரவுக்கு தடை விதித்து அதை ரத்து செய்ய வேண்டும்' என வாதிட்டனர்.

ஜூன் 9-க்கு தள்ளி வைப்பு: அப்போது அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் எம்.சுரேஷ்குமார் ஆஜராகி, இந்த வழக்குகள் முடிவுக்கு வரும் வரை நான்கு பதவிகளுக்கும் தேர்தல் நடத்தக் கூடாது என நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர், மாநில தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும், எனவே அதுவரை தேர்தல் நடத்தப்படாது என்றும் தெரிவித்தார். அதைப் பதிவு செய்து கொண்ட நீதிபதி, இந்த வழக்கு விசாரணையை வரும் ஜூன் 9-க்கு தள்ளிவைத்துள்ளார்.

# கள்ளக்காதலை கண்டித்த மனைவி கொலை



தெலுங்கானா மாநிலம், அடிலாபாத் மாவட்டம், குடிஹட்னூரை சேர்ந்தவர் மாருதி. பால் வியாபாரி. இவரது மனைவி கீர்த்தி (வயது 30). தம்பதிக்கு மகேஸ்வரி, காயத்ரி என 2 மகள்களும் பத்ரி என்ற ஒரு மகனும் உள்ளனர்.

இந்த நிலையில் மாருதிக்கு அதே பகுதியை சேர்ந்த திருமணமான பெண்ணுடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டது. இதனால் வீட்டிற்கு எந்த செலவும் செய்யாமல் கள்ளக்காதலிக்கு ஆடம்பரமாக செலவு செய்து வந்தார். இவர்களது காதல் விவகாரம் கீர்த்திக்கு தெரிய வந்தது.

கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு நடந்தது. கணவர் கள்ளக்காதலை கைவிடாததால் ஊர் பெரியவர்களை கூட்டி பஞ்சாயத்து வைத்தார்.

பஞ்சாயத்தில் மாருதி கள்ளக்காதலை கைவிட்டு தனது குடும்பத்தை நல்லபடியாக கவனித்துக் கொள்கிறேன் என உறுதி அளித்தார். இருப்பினும் பஞ்சாயத்தில் வைத்து தன்னை அசிங்கப்படுத்திய மனைவியை கொலை செய்ய வேண்டும் என மனதில் வஞ்சகம் வைத்தார்.

கடந்த வாரம் மனைவி மற்றும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு மாமியார் வீட்டிற்கு சென்றார். மாருதியும் மாமியார் வீட்டிலேயே தங்கியிருந்தார். நேற்று மாமனார், மாமியார் வேலைக்கு சென்றனர். அப்போது வீட்டில் யாரும் இல்லை. கீர்த்தி தெரு குழாயில் தண்ணீர் பிடிக்க சென்றார்.

கத்தியுடன் மனைவியை பின் தொடர்ந்து சென்ற மாருதி நடுரோட்டில் அவரை கீழே தள்ளி கத்தியால் கழுத்தை அறுத்தார். கீர்த்தி வலியால் அலறி துடித்தார். கீர்த்தியின் கழுத்தில் இருந்து ரத்தம் பீறிட்டு கொட்டியது. அவரது அலறல் சத்தம் கேட்ட அக்கம்பக்கத்தினர் ஓடி வந்தனர். பொதுமக்கள் வருவதை கண்ட மாருதி அங்கிருந்து தப்பிச் சென்றார்.

அங்கிருந்தவர்கள் கீர்த்தியை மீட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் கீர்த்தி ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து தலைமறைவாக உள்ள மாருதியை தேடி வருகின்றனர்.

# குரூப் 4 பணியிடங்களுக்கான தேர்வு தேதி அறிவிப்பு!




ஆண்டுக்கு ரூ.11 லட்சம் சம்பளத்தில் பொதுத்துறை நிறுவனமான என்டிபிசி கிரீன் எனர்ஜி லிமிடெட் நிறுவனத்தில் நிரப்பப்பட உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் மே 1 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விளம்பர எண்.01/25

பணி: ENGINEER(CIVIL)

காலியிடங்கள்: 40

தகுதி: பொறியியல் துறையில் சிவில் பிரிவில் 60 சதவிகித மதிப்பெண்களுடன் பிஇ அல்லது பி.டெக் முடித்திருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.

பணி: ENGINEER(ELECTRICAL)

காலியிடங்கள்: 80

தகுதி: பொறியியல் துறையில் எலக்ட்ரிக்கல் பிரிவில் 60 சதவிகித மதிப்பெண்களுடன் பிஇ அல்லது பி.டெக் முடித்திருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.

பணி: ENGINEER(IT)

காலியிடங்கள்: 4

தகுதி: பொறியியல் துறையில் ஐடி பிரிவில் 60 சதவிகித மதிப்பெண்களுடன் பிஇ அல்லது பி.டெக் முடித்திருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.

பணி: ENGINEER (MATERIAL)

காலியிடங்கள்: 10

தகுதி: பொறியியல் துறையில் ஏதாவதொரு பிரிவில் பிஇ அல்லது பி.டெக் முடித்திருக்க வேண்டும். மெட்டீரியல் மேலாண்மை பாடத்தில் முதுகலை டிப்ளமோ அல்லது முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: ENGINEER(MECHANICAL)

காலியிடங்கள்: 15

தகுதி: பொறியியல் துறையில் மெக்கானிக்கல் பிரிவில் 60 சதவிகித மதிப்பெண்களுடன் பிஇ அல்லது பி.டெக் முடித்திருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.

பணி: EXECUTIVE(HR)

காலியிடங்கள்: 7

தகுதி: ஏதொவதொரு துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றிருப்பதுடன் மேலாண்மை, மனிதவள மேலாண்மை(எச்ஆர்), தொழிலக தொடர்பியல் போன்ற ஏதாவதொரு பிரிவில் முதுகலை அல்லது முதுகலை டிப்ளமோ முடித்திருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.

பணி: EXECUTIVE(FINANCE)

காலியிடங்கள்: 26

தகுதி: சிஏ, சிஎம்ஏ பட்டம் பெற்று ஒரு ஆண்டு பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 30-க்குள் இருக்க வேண்டும்.


# சுற்றுலா சென்ற சென்னை மருத்துவ மாணவர்கள் 3 பேர் ஆற்றில் மூழ்கி உயிரிழப்பு

பொள்ளாச்சி, ஏப்.26:

சென்னையை சேர்ந்தவர் தருண். இவரது நண்பர்கள் ரேவந்த், ஆண்டோ ஜெனிப். இவர்கள் 3 பேரும் சென்னை பூந்தமல்லியில் தனியார் பிசியோதெரபி கல்லூரியில் 4-ம் ஆண்டு படித்து வந்தனர். இந்த நிலையில் தருண் மற்றும் அவரது நண்பர்கள் அனைவரும் சுற்றுலா செல்ல முடிவு செய்தனர். இதையடுத்து தருண், ரேவந்த், ஆண்டோ ஜெனிப் மற்றும் அவர்களது நண்பர்கள், தோழிகள் என மொத்தம் 25 பேர் சென்னையில் இருந்து கோவை மாவட்டம் பொள்ளாச்சிக்கு வந்தனர்.

பின்னர் ஆழியார் அணை பகுதிக்கு நண்பர்கள் அனைவரும் சென்றனர். அங்கு அவர்கள் ஆழியார் அணையையொட்டி உள்ள பூங்கா பகுதியை சுற்றி பார்த்தனர். தொடர்ந்து அவர்கள் ஆழியார் அணைக்கு சென்று அதனை பார்வையிட்டனர்.

பின்னர் மாணவர்கள் அனைவரும், அணையையொட்டி உள்ள ஆழியார் ஆற்றுக்கு சென்றனர். அங்கு சென்றதும், மாணவர்கள் அனைவரும் ஆழியார் ஆற்றில் இறங்கி குளித்தனர். அப்போது, ரேவந்த், தருண், ஆண்டோ ஜெனிப் ஆகியோர் ஆற்றில் ஆழமான பகுதிக்கு சென்றதாக



தெரிகிறது. எதிர்பாராத விதமாக 3 பேரும் தண்ணீரில் மூழ்கினர். இதைப்பார்த்த மற்ற நண்பர்கள் காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள் என சத்தம் போட்டனர்.

அவர்களது சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடி வந்தனர். மேலும் இதுதொடர்பாக ஆழியார் போலீசாருக்கும், பொள்ளாச்சி தீயணைப்பு நிலையத்துக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

தகவல் அறிந்ததும் ஆழியார் போலீசார் தீயணைப்பு வீரர்களுடன் ஆற்றில் இறங்கி தேடினர். நீண்ட நேர போராட்டத்திற்கு ஆற்றில் மூழ்கிய 3 பேரும் பிணமாக மீட்கப்பட்டனர். அவர்களின் உடல்களை போலீசார் பிரேத பரிசோதனைக்கா பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக விசாரணை நடந்து வருகிறது.

# ரயிலை கவிழ்க்க சதியா..?: திருவள்ளூர் அருகே தண்டவாளத்தின் போல்ட்நட்டுகள் அகற்றம்!

திருவள்ளூர், ஏப்.26:

திருவள்ளூர் அடுத்த திருவாலங்காடு ரயில் நிலையம் அருகே ரயில் தண்டவாளத்தின் இணைப்புப் பகுதியில் போல்ட்நட்டுகள் அகற்றப்பட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து ரயில்வே போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், திருவலாங்காடு ரயில் நிலையம் அருகே அரிச்சந்திராபுரம் பகுதியில் சென்னை செல்லும் ரயில் தண்டவாளத்தின் இணைப்புப் பகுதியில் போல்ட் நட்டுகள் அகற்றப்பட்டிருப்பதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தண்டவாளத்தின்



இணைப்புப் பகுதியில் போல்ட்நட்டுகள் அகற்றப்பட்டிருப்பதை லைன்மேன் உரிய நேரத்தில் கண்டு சிக்னல் கட் செய்ததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

ரயில் தண்டாவள இணைப்புப் பகுதியில் போல்ட்நட்டுகளை அகற்றியவர் குறித்து ரயில்வே போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ரயில்வே அதிகாரிகள் தண்டாவள இணைப்புப் பகுதியில் போல்ட்நட்டுகளை அகற்றி ரயிலை கவிழ்க்க சதியா? என்ற கோணத்தில் விசாரணை மேற்கொண்டனர். சம்பவ இடத்திற்கு மோப்ப நாய் நான்சி வரவழைக்கப்பட்டு ரயில்வே போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அரசியல்.in

# தமிழக அமைச்சரவையில் விரைவில் மாற்றம்?

சென்னை, ஏப்.26:

தமிழகத்தில் அமைச்சரவையில் விரைவில் மாற்றம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனவும் சொல்லப்படுகிறது. அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜனுக்கு மின்சாரத்துறை வழங்கப்படலாம் என்று தகவல்கள் கூறுகின்றன.

வனத்துறை அமைச்சராக இருக்கும் பொன்முடி அண்மையில் பேசிய பேச்சுக்கள் பெரும் சர்ச்சையாக உருவெடுத்தன. பொன்முடியின் பேச்சையடுத்து அவரது கட்சி பதவி பறிக்கப்பட்டது. எனினும், அவரை அமைச்சர் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. அதேபோல, சட்டவிரோத பண பரிமாற்ற வழக்கில் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டு ஜாமீனில் இருக்கும் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு அமைச்சர் பதவியை தொடர்வதில் சிக்கல் எழுந்துள்ளது.

அதாவது, அரசு போக்குவரத்து கழகத்தில் வேலை வாங்கி தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டதாக அமைச்சர் செந்தில் பாலாஜியை சட்ட விரோத பணப் பரிமாற்ற தடை சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த 2023 ஜூன் மாதம் கைது செய்தனர். நீண்ட இடைவெளிக்கு பிறகு, கடந்த 2024 செப்டம்பர் 26-ம் தேதி செந்தில் பாலாஜிக்கு சுப்ரீம் கோர்ட்டு ஜாமீன் வழங்கியது. ஒருநாள் இடைவெளியில் மீண்டும் அமைச்சராகவும் பதவியேற்றார். இதனால், செந்தில் பாலாஜி ஜாமீனை ரத்து செய்யக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனு



தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு,செந்தில் பாலாஜிக்கு மெரிட் அடிப்படையில் ஜாமீன் வழங்கவில்லை. அரசமைப்பு சட்டத்தின் 21-வது பிரிவை மீறியதால் அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டது. ஜாமீன் வழங்கப்பட்ட இரண்டு நாட்களுக்குள் அவர் அமைச்சரானதை ஏற்க முடியாது. அமைச்சராக இல்லை என்பதால்தான் அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டது. எனவே, அவருக்கு ஜாமீன் வேண்டுமா? அல்லது அமைச்சர் பதவி வேண்டுமா?' என்று கேள்வி எழுப்பினர். மேலும், அமைச்சர் செந்தில் பாலாஜியின் கருத்தை தெரிவிக்க 28 வரை கால அவகாசம் வழங்கி, விசாரணையை நீதிபதிகள் ஒத்திவைத்தனர். இதனால், செந்தில் பாலாஜி தனது அமைச்சர் பொறுப்பில் இருந்து விலகலாம் என்று சொல்லப்படுகிறது.

அமைச்சர் செந்தில் பாலாஜி வசம் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்த தீர்வைத்துறை பொறுப்பு, அமைச்சர் முத்துசாமியிடம் வழங்கப்படலாம் எனக்கூறப்படுகிறது. தமிழக அமைச்சரவையில் தற்போது 34 பேர் இடம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆளுநர் மாநாட்டை புறக்கணித்த துணைவேந்தர்கள்!

உதகை, ஏப்.26:

உதகை ராஜ்பவன் மாளிகையில் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாடு வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை (ஏப். 25, 26) ஆகிய இரு நாள்கள் நடைபெறுகிறது.



இந்த மாநாட்டை காலை 11.30 மணிக்கு தொடங்கிவைத்து குடியரசு துணைத் தலைவா் ஜகதீப் தன்கர் துவக்க உரையாற்றவுள்ளார். இதற்காக தில்லியில் இருந்து கோவை வரும் தன்கர், ஹெலிகாப்டர் மூலம் உதகை செல்லவுள்ளார்.

இந்த நிலையில், தமிழக அரசு பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளனர்.

மதுரை பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துணைவேந்தர்கள் இன்னும் உதகை ராஜ்பவனுக்கு வரவில்லை.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக திருநெல்வேலியிலிருந்து வந்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணைவேந்தர் சந்திரசேகர், பாதிவழியில் முடிவைமாற்றிக் கொண்டு திரும்பியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஞாயிற்றுக்கிழமை குடியரசுத் துணைத் தலைவர் பங்கேற்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டு பணிகளில் இருப்பதால், மாநாட்டில் பங்கேற்கவில்லை என்று கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் விளக்கம் அளித்துள்ளார்.

இந்த நிலையில், அழைப்பு விடுக்கப்பட்ட 52 பல்கலைக்கழகங்களில் 34 பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மாநாட்டில் பங்கேற்றுள்ளதாக ஆளுநர் மாளிகை தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, தமிழக பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பில் இருந்து ஆளுநரை நீக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதாவுக்கு சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்தது.

இதனைத் தொடர்ந்து, அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பதிவாளர்கள் கூட்டத்தை கூட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆலோசனை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

# 2½ வயது பெண்குழந்தை கொலை: வாயில் மதுவை ஊற்றிய கொடூரம்-தாய்-3 வாலிபர்கள் கைது

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள துவரம்பாடு கிராமத்தை சேர்ந்தவர் சரத். இவரது மனைவி பிருந்தா (வயது 25). இவர்கள் 2 பேரும் காதலித்து வந்த நிலையில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு தர்ஷினி என்ற 2½ வயது பெண் குழந்தை உள்ளது சரத் கோவையில் உள்ள ஒரு பொம்மை கடையில் வேலை பார்த்து வருகிறார். இதனால் பிருந்தா தனது குழந்தையுடன் திசையன்விளை அருகே உள்ள மகாதேவன் குளத்தில் வசித்து வருகிறார்.

இந் நிலையில் நேற்று காலை பிருந்தா நடுவக்குறிச்சியில் உள்ள தனது தாய் வீட்டுக்கு சென்றுள்ளார். அப்போது கையில் வைத்திருந்த தனது குழந்தை தர்ஷினி இறந்துவிட்டதாக கூறினார். அவரது பேச்சில் சந்தேகம் அடைந்த பெற்றோர், உடனே குழந்தையை திசையன்விளை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு சிறுமியை பரிசோதனை செய்த டாக்டர்கள் குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். அதேநேரத்தில் சிறுமியின் உதடு, கை உள்ளிட்ட இடங்களில் காயங்கள் இருந்ததால் டாக்டர்கள் சந்தேகம் அடைந்து திசையன்விளை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசார் விரைந்து வந்து சிறுமி உடலை பிரேத பரிசோதனைக்காக நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து பிருந்தாவை போலீஸ் நிலையத்துக்கு அழைத்து சென்று நடத்திய விசாரணையில் சில வாலிபர்களுடன் உல்லாசமாக இருந்தபோது இடையூறாக இருந்ததால் சிறுமி அடித்துக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தெரியவந்தது. காதல் திருமணம் செய்து கொண்ட போதிலும், பிருந்தாவுக்கு பல வாலிபர்களுடன் தொடர்பு இருந்து வந்துள்ளது. அவ்வப்போது அவர்களுடன் தனிமையான இடங்களுக்கு சென்று

அங்கிருந்து குழந்தையுடன் பிருந்தாவை 3 பேரும் அழைத்துச்சென்றுள்ளனர். பின்னர் திசையன்விளையை அடுத்த வாழைத்தோட்டம் கிராமத்தில் இருட்டு நிறைந்த பகுதியில் அந்த வாலிபர்களுடன் உல்லாசமாக இருந்துள்ளார். அப்போது சிறுமி தர்ஷினி அழுதுள்ளார். உடனே அவர்களில் 2 வாலிபர்கள் தர்ஷினியை சற்று தூரத்திற்கு அழைத்து சென்று தின்பண்டம் கொடுத்துள்ளனர். மேலும் அவர்கள் 2 பேரும் அங்கிருந்தபடி மது குடித்துக்கொண்டு இருந்தனர். சிறுமி தின்பண்டம் சாப்பிட்டதும் குடிக்க தண்ணீர் கேட்டுள்ளார். போதையில் இருந்த வாலிபர்கள், சிறுமி என்றும் பாராமல் குளிர்பானத்தில் மதுவை கலந்து சிறுமிக்கு கொடுத்துள்ளனர். அதனை குடித்த சிறுமி அழுதுள்ளார்.

இதனால் ஆத்திரம் அடைந்த வாலிபர்கள் சிறுமியின் மூக்கை பொத்தியும், தாக்கியும் கொலை செய்துள்ளனர். இதனால் மூச்சு பேச்சு இல்லாமல் போன சிறுமியை வாலிபர்கள் 3 பேரும் சேர்ந்து பிருந்தாவிடம் ஒப்படைத்து விட்டு சென்றுவிட்டனர். என்ன செய்வதென்று தெரியாமல் தனது குழந்தை கட்டிலில் இருந்து தவறி விழுந்து இறந்துவிட்டதாக பெற்றோரிடம் பிருந்தா நாடகமாடியது தெரியவந்தது.

இதையடுத்து பிருந்தாவை கைது செய்த போலீசார், கள்ளக்காதலில் ஈடுபட்டு சிறுமியையும் கொலை செய்த லிங்க செல்வன், முத்து சுடர், பெஞ்சமின் உள்ளிட்டவர்களையும் கைது செய்தனர்.

# நீலமேகம் வந்தார்!



செல்போன் மணியடித்தது. போனையெடுத்தேன். "நான் நீலமேகம் பேசுகிறேன்" என்றார். நான் ஒரு பொழுதுபோக்கு வாட்ஸ் அப் குழுவில் உறுப்பினராக இருக்கிறேன். அவரும் அந்த குருப்பில் உறுப்பினராக இருக்கிறார். நேரில் அறிமுகம் இல்லாவிட்டாலும், வாட்ஸ் அப்பில் சந்தித்துக்கொள்வதோடு சரி.

"வணக்கம். நலமாக இருக்கிங்களா? நான் நீலமேகம் பேசுகிறேன். விழுப்புரத்திலிருந்து உங்க கடலூர் வழியாகதான் எங்க ஊருக்கு காரில் போகிறேன். இப்போது கடலூர் அருகே வந்து விட்டேன். இன்னும் அரைமணி நேரத்தில் கடலூர் வந்து விடுவேன். ஒரு கால்மணி நேரம் சந்தித்து பேசலாமா?" என்றார்.

நானும், "பேசலாமே, வருகிறேன்!" என்றேன்.

அவர், "ஹோட்டல் ஆரியபவன் அருகே நில்லுங்கள். வந்து விடுகிறேன்" என்றார்.

எனது வீட்டிலிருந்து அந்த ஹோட்டல் ஸ்கூட்டரில் சென்றால் பத்து நிமிட நேரம்தான். நான் எனது ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு அங்கே சென்றேன்.



நான் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு அந்த ஹோட்டல் வாசலில் நின்றுக்கொண்டிருந்தபோது ஒரு கால் மணி நேரத்தில் நீலமேகம், அவருடைய இரண்டு மகள்களுடன் காரில் வந்தார். சொந்த கார்தான்.

என்னைப் பார்த்து, "வணக்கம் சார்" என்றவர், "ஹோட்டலில் காபி சாப்பிட்டுக்கொண்டே பேசுவோம்" என்றார்.

என்னிடம் ஏ டி எம் கார்டோ, என் போனில் ஜி பேயோ இல்லாவிட்டாலும் என் பையில் இருநூறு ரூபாய் இருந்தது. நானும் ஒரு காபிதானே என்று நினைத்தபடி சென்றேன்.

ஹோட்டலில் நுழைந்த நீலமேகமும் அவருடைய மகள்களும், நானும் ஒரு டேபிள் அருகே உட்கார்ந்தோம்.

"போண்டா நல்லா இருக்கும் போலிருக்கே!" என்றபடி ஆளுக்கொரு போண்டா ஆர்டர் செய்தார். "கிச்சடி சாப்பிடுவோம்" என்றபடி கிச்சடி கொண்டு வரச்சொன்னார். அப்புறம் சர்வரிடம், "ஆளுக்கொரு மசால் தோசை" என்றார். அதன் பிறகு சின்னதாக ஒரு ஏப்பம் விட்டபடி, "எல்லோருக்கும் காபி" என்றார். அதன்பிறகு "வீட்டில் மனைவி மட்டும்தான் இருக்காங்க. வீட்டுக்குப்போக இரவாகி விடும்!" என்று சொல்லியபடி பார்சல் ஒன்றும் வாங்கிக்கொண்டார்!

ஹோட்டல் பில் ரூபாய் 800 வந்தது. நான் உள்ளூர் என்பதால் அந்த ஹோட்டல் சர்வர் பில்லை என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார்.

அதற்குள் நீலமேகமும் அவரது மகள்களும் கையை கழுவிக்கொண்டு, "சார், நாங்கள் வருகிறோம்! மறுபடியும் சந்திப்போம்!" என்றபடி 'டாட்டா" காட்டியபடி காரில் ஏறி போய்விட்டார்கள்!

நான் திகைத்து நின்றேன். கேஷியரிடம் சென்று விஷயத்தைசொல்லி, "என்னிடம் ரூபாய் 200தான் இருக்கிறது. இதோ வீட்டுக்குப்போய் பாக்கி பணத்தை எடுத்து வருகிறேன்!" என்றேன்.

அந்த கேஷியர் நன்கு தெரிந்தவர் என்பதால் தப்பித்தேன் . " என்ன நாமம் போட்டுட்டு போயிட்டாரா!" என்றபடி அவர் சிரித்தார்.

"ஆமாம், அவர் நாமம் போடுறவர்தான்!" என்றபடி பாக்கி பணத்தை எடுத்துவர ஸ்கூட்டரில் வீட்டை நோக்கி விரைந்துக் கொண்டிருகக்கிறேன்!



- சின்னஞ்சிறுகோபு,
சிகாகோ.

# இரத்தக் கண்ணீர்



இந்த வெயில் நேரத்தில் தர்பூசணி வியாபாரம் படு ஜோராக இருக்கும்.
ஆனால் சில நாட்களாக தர்பூசணியில் செயற்கையாக சிவப்பு நிறம் ஏற்றப்படுகிறது என்கிற வதந்தியால் அதிக அளவில் தர்பூசணி வாங்கும் மொத்த வியாபாரிகள் வாங்குவதைக் குறைக்க ஆரம்பித்தனர்.
போன வருடத்தைக் காட்டிலும் இந்த வருடம் அதிக அளவு விளைச்சல் செய்தோரும், இதை நம்பி குத்தகைக்கு எடுத்தவர் களுக்கும் பெரிய அளவில் வியாபாரம் ஆக வில்லை.
இதனால் ஏற்பட்ட பாதிப்பு நடைபாதையில் தர்பூசணி விற்ற அன்றாடங்காச்சிகளின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது.
இந்த சூழ்நிலை மேல் நாட்டு குளிர்பானங்களின் வியாபாரத்தை அதிகரித்தது.
தடை செய்யப்பட்ட பல கார்பரேட் கம்பெனிகள் நுழைந்து சுகாதாரம் இல்லாமல் குளிர்பானங்களை இறக்குமதி செய்து அதிகார வர்க்கத்தின் ஆதரவோடு கோலோச்சியது.
மக்கள் அனைவரும் பழங்கள் மற்றும் மோர், இளநீர் போன்ற இயற்கை புத்துணர்ச்சி நிறைந்தவைகளை மறந்து மேல் நாட்டு கலர் கலரான குளிர்பானங்களை அதிகம் விரும்பி குடித்தால் நீர்ச்சத்து, நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
சாதாரண சளி, காய்ச்சல் வைரஸ் தொற்று, விஷக் காய்ச்சல் இவற்றால் பாதிக்கப்பட்டனர் பலர்.
இன்னொரு புறம் விளைந்து விலைபோகாத எத்தனையோ டன் தர்பூசணிகள் அப்படியே கிட்டங்கியில் தேங்கி எலிகளால் சேதமடைய ஆரம்பித்தது.
நிலைமை கட்டுக்குள் இல்லாததை உணர்ந்த விவசாயிகள் போராட்டம் நடத்தி புரிய வைக்க முடியாது. எனவே முதலில் ஃபேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் இவை இரண்டிலும் தர்பூசணி பற்றிய வதந்தியை விளக்க ஆரம்பித்தனர்.
ஏனெனில் தொலைக்காட்சியில் சொன்னால் மக்களுக்கு போய் சேருமா என்பது சந்தேகமே! ஆளும் அதிகார வர்க்கத்தை மீறி தொலைக்காட்சியில் வருவது கடினம். யூடியூப் சேனல்களில் பேசினால் சம்பந்தப்பட்டவர்கள் புதிய கட்சி ஆரம்பித்த நடிகர் ஒருவரை இப்படித்தான் நல்லதை எல்லாம் விட்டு விட்டு அவர் சொல்லாததை எடிட் பண்ணச் சொல்லி மிரட்டி அவருடைய அரசியல் வாழ்க்கையையே இழுத்து மூடியவர்கள்.
விவசாயிகளில் இந்த விபரத்தைத் தெளிவாகச் சொல்லக்கூடிய வெள்ளையன் என்பவர், பேச ஆரம்பித்தார்.
" பொதுமக்களுக்கு விவசாயிகள் சார்பில் எங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமீப காலமாக உங்களிடம் தர்பூசணி செயற்கையாக சிவப்பு நிறம் ஏற்றப்படுகிறது என்கிற கருத்து நிலவுகிறது. அது முற்றிலும் தவறு!
தர்பூசணி அறுபது நாளிலிருந்து எழுபது நாட்களுக்குள் பருவத்திற்கு வரும். பிறகு அது நிறைய பேர் கை மாறி கடைசியாக மக்களாகிய உங்கள் கைக்கு கிடைக்கிறது. ஒருவேளை சாயம் நாங்கள் செய்தால் சின்ன வெடிப்பு அல்லது துளை இருந்தாலே பழம் கெட்டு விடும். பிறகு உங்கள் கைக்கு வரும் போது மிகவும் சேதமடைந்து போய்விடும். அதனால் விவசாயிகள் அப்படி செயற்கையாக சிவப்பு நிறம் ஏற்ற வாய்ப்பு இல்லை.
அடுத்ததாக வியாபாரிகள் யாரும் இதைச் செய்ய முடியாது. சரக்குகள் டன் கணக்கில் ஏற்றப்பட்டு அடுத்தடுத்த இடங்களுக்கு விரைவாக சப்ளை செய்யும் போது நிறைய டேமேஜ் ஆகுமே தவிர செயற்கையாக இதைப் பண்ண நேரம் இருக்காது.
அடுத்து ஊசி மூலம் நிறம் ஏற்றும்போது எந்த இடத்தில் ஊசி இறங்கியதோ அந்த இடம் மட்டும் சிவப்பாகும் மற்ற இடமெல்லாம் சாதாரண நிறத்தில் இருக்கும்.
கார்பரேட் குளிர்பானங்களில் ஒவ்வொரு நிறமாக மாற்றி கொடுக்கிறார்கள். இது எல்லாமே உடலுக்குத் தீங்கானது. இப்போது நிறைய பதிவு செய்யாத எத்தனையோ குளிர் பானங்கள் உள்ளே கால் பதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.
இதனால் எவ்வளவு உடலுக்கு தீமை என்பதை நீங்களே உணர்ந்தீர்கள்.
ஒரு தாயின் பிரசவம் போல தான் நாங்கள் பாடுபட்டு அறுவடை செய்து தரும் பொருட்கள். அது வளர்ந்து பெரியவனாகி எங்களுக்கு சோறு போடும் போது எங்கள் கண்ணில் வந்தது ஆனந்த கண்ணீர்! அப்படி எங்களுக்குப் பிரசவ வலி என்று ஒன்று உண்டென்றால் அது குறைப் பிரசவமாய்ப் பிறந்து பிஞ்சாக இருக்கும் போதே வெம்பி பயன் இல்லாமல் நிறைய வேஸ்ட் ஆகும். அந்த வேதனை சொல்லில் அடங்காது. ஆனால் அதையும் தாண்டி எங்கள் மீது இப்போது வந்திருக்கிற இந்த வீண் பழியைத் தாங்க முடியாமல் எங்கள் கண்களில் வருவது இரத்தக் கண்ணீர்!
யாரோ எந்தக் காரணத்திற்காகவோ எதையாவது சொன்னாலும் நீங்கள் நம்பி விடக் கூடாது. தெளிவாக இருக்க வேண்டும். ஓட்டுப் போடும் போதும் சரி! சந்தையில் ஒரு பொருள் வாங்கும் போதும் சரி! யோசித்துச் செய்ய வேண்டும். தவறு எங்கே என்று உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். தவறைத் திருத்துங்கள்!
அந்நிய முதலீட்டாளருக்குக் கூழை கும்பிடு போடும் அதிகார வர்க்கத்தை மாற்றுவோம்! இதுவரை வராத புதிய தலைமைக்கு ஒருமுறை வாய்ப்பளிப்போம்!" என்று வெள்ளையன் பேசியது அனைவர் கைகளிலும் தவழ்ந்த செல்போனில் உடனே பரப்பப்பட்டது.
அடுத்த சில நாட்களிலேயே மக்களிடம் மாற்றம் தெரிந்தது கண்டு சிரித்தபடி முச்சந்தியில் விழுந்து திருஷ்டி கழித்துக் கொண்டிருந்தது தர்பூசணி!!!



- பிரபாகர்சுப்பையா,
மதுரை-625012.

# வாழ்ந்தே தீருவோம்

# புதிரப் பயணம்...

அத்தியாயம் -4

(புதிய தொடர்கதை)



■முனைவர்
க. அன்பழகன்
(ஹரணி)
கரந்தை.தஞ்சாவூர்

இறங்கவேண்டிய இடத்தில் இறங்கும்போது சரவணனைக் கண்டாள். கையில் இரண்டு தோல் பைகள் வைத்திருந்தாள். கணத்துக் கிடந்தன பைகள். மனமும்தாம்.

அருகே போனாள்.. என்னது இத்தனைப் பை? என்றாள்.

அதுக்குத்தான் உன்னை எதுவும் எடுத்திட்டு வரவேண்டாம்னு சொல்லிட்டேன். நம்ப ரெண்டுபேருக்கும் வேண்டியது எல்லாம் இருக்கு. வா.. போகலாம் என்று வண்டியில் ஏறிக்கொள்ளச் சொன்னான்.

வண்டியிலேயா.. என்றாள்.

இல்லை. பஸ்ஸ்டாண்ட் வரைக்கும்தான் வண்டி. போனார்கள். பெரிய பேருந்து நிலையம் வந்து வண்டியை வண்டி ஸ்டாண்டில் வைத்துவிட்டு ஸ்டாண்ட் உரிமையாளரிடம்.. அண்ணே.. என்னோட பிரெண்ட் வேலு வந்தா இந்த வண்டிச் சாவியக் கொடுத்துடுங்க.. நான் வெளியூரு போறேன் வர ரெண்டு மூணு நாளாகும்.

சரி..

சரவணா.. கொடு.. நாங் கொடுத்துடறேன்.. என்றபடி வாங்கிக்கொண்டார்.

வெளியே வந்தான்.

இருவரும் சேர்ந்து நடந்தார்கள்.

போகும்போது கேட்டாள்.. எங்கே போறோம்?

கெட்டுப் போனவனுக்கும் கெதியத்தவனுக்கும் பட்டணம் தானே புகலிடம்.. எப்படியும் பொழச்சுக்கலாம்னு நம்பிக்கை தர்றது பட்டணம்தானே?

சென்னைக்கா? என்றாள்.

ஆமாம்.. என்றான்.

வேலைக்கு லீவு போட்டிருக்கியா?

வேலய விட்டு ஒரு வாரம் ஆச்சு.

ஒரு வாரம் ஆச்சா?

ஆமாம்.



எல்லாத்தையும் முன்கூட்டியே செஞ்சாச்சு.. இனிமே புது வேலை.. புது வாழ்க்கை.. அதுக்கு முன்னாடி நம்ப கல்யாணம் நடக்கணும்.. சென்னையில என்னோட நண்பர்கள் இருக்காங்க.. சொல்லி வச்சுட்டேன்.. அவங்க எல்லா ஏற்பாடும் செஞ்சு வச்சிருக்காங்க... நாளைக்குக் காலையிலே கல்யாணம்.

என்னது இவ்வளவு வேகமாக நடக்குது என்றாள்.

வேகமா இல்லை வள்ளியம்மை.. காலத்துல நடக்குது. கல்யாணம் நடந்தாதான் எல்லாத்தையும் ஒழுங்குப்படுத்த முடியும். நாளைக்கு உங்க வீட்டுலேர்ந்து வந்தாக்க பிரச்சனையைச் சமாளிக்கக் கல்யாணம்தான் சரி.. எனக்குத்தான் நாதி கிடையாது. எனக்குன்னு நண்பர்கள்தாம் எல்லா உறவுக்கும்.

சரவணன் கைவிரல்களோடு தன் கைவிரல்களைக் கோர்த்துக்கொண்டு நன்றிங்க.. என்றாள்.

என்ன வள்ளியம்மை நன்றி எல்லாம் சொல்றே..நாளைக்கு மதியத்துலேர்ந்து என்னோட மனைவி நீ.. உனக்காகத்தான் எல்லாமும்.. நான் உள்பட என்றான்.

அவனைப் பார்த்து ஒரு சிரிப்பு மலர்த்தினாள் வள்ளியம்மை.

பதிலுக்கு அவனும் அதே மலர்ந்து சிரிப்பைப் பதிலாக்கினான் அவளுக்கு.

பேருந்தில் ஏறி மையமாகப் பார்த்து இருக்கையில் அமர்ந்தார்கள். பேருந்து புறப்பட்டது. இருவரும் ஒருவரைப் பார்த்து கைவிரல்களைக் கோர்த்து இறுக்கிக்கொண்டார்கள். வள்ளியம்மை இன்னும் நெருக்கி உட்கார்ந்து அவன் தோளின்மேல் தலையைச் சாய்த்துக்கொண்டாள். சன்னல் வழி வந்த காற்று இருவரையும் தடவி வாழ்த்துச் சொல்லிவிட்டுப்போனது.

(வாழ்வோம்)

# மறந்து போன பாத்திரங்களா? அல்லது கண்டுகொள்ளப் படாமல் விட்ட பாத்திரங்களா?

அனுமனின் வேறு சில பெயர்கள் நாம் அறிந்ததே. ஆஞ்சநேயர், அஞ்சனையின் மகன் என்பதால், மாருதி வாயுவின் மகன் என்பதால் , வலிமையானவன் என்பதால் பஜரங்கபலிஎன்றும் அழைக்கப்படுகிறார். இந்து மதத்தில் ஒரு தெய்வீகமான தெய்வம். மற்றும் தெய்வமான ஸ்ரீ ராமரின் பக்தியுள்ள துணை. இவர் சிவபெருமானின் ருத்ர அவதாரம் என்றும் சொல்லப்படுகிறார்.

இப்போது வருவோம் அனுமானை பற்றி ஏன் நிறைய விஷயங்கள் சிலாகிக்கப்படவில்லை என்று.

அனுமன் ஒரு முறை இலங்கைக்கு கடலை கடக்க வேண்டும் என்று சொன்ன பொழுது எதுவும் பேசாமல் அப்படியே நின்றான். அப்போது ஜாம்பவான் வந்து அனுமான் உன்னுடைய சக்திகளை பற்றி உனக்கு தெரியாது உன்னால் பறக்க முடியும் அது தெரியுமா என்று கேட்டது எல்லோருக்கும் தெரியும்.

பிறகு ஏன் தன்னால் பறக்க முடியாது என்ற கதை ஜாம்பவானால் சொல்லப்பட்ட போது அனுமனுக்கு ஒரே ஆச்சரியம் உன்னால் முடியும் என்று சொன்னால் தான் அனுமானால் எதுவும் செய்ய முடியும். அதன் பிறகு அவர் இலங்கைக்கு பறந்து சென்று சீதா தேவியை பார்த்தது "கண்டேன் சீதையை" என்று சொன்னதெல்லாம் நாம் அறிந்தது.

அனுமன் இலங்கைக்கு பறந்து சென்றதால் தான் ராமாயணத்தில் அடுத்த பகுதியை ஆரம்பித்ததும், ராவணவதம் முடிந்தது என்றும் பெரிதாக எங்கேயும் சிலாகிக்கப்படவில்லை. வானர சேனையுடன் இலங்கைக்கு பாலம் கட்டுவதும், எப்படி போரில் ஜெயிப்பது என்பது தான் அதன் பிறகு ராமாயணத்தில் வந்தது. எல்லாவற்றிற்கும் பின்னும் அனுமன் ஒவ்வொன்றிலும் இருந்தார் என்பது பெரிதாக எங்கும் சொல்லப் படவில்லை.

தனக்கு இவ்வளவு எல்லாம் சக்தி இருக்கும் என்று தெரிந்த பிறகும் கூட ராமாயணத்தில் கடைசிவரை தன்னுடைய அத்தனை சக்திகளையும் மறைத்துக் கொண்டு வாழ்ந்தான் அனுமன். கடைசி வரையில் ராமனுடைய பக்தனாகவே வாழ்ந்தான் தன்னுடைய பெருமையை தன் வாயால் ஒருபோதும் பேச மாட்டான் அனுமனுக்கு தற்பெருமை என்பது சுத்தமாக பிடிக்காது.

தேவையின்றி தன்னுடைய சக்தியை வேறு யாருக்காகவும் பயன்படுத்தியது கிடையாது ராமரைத் தவிர. ராமர் ஒன்றை சொல்லிவிட்டால் அதற்காகவே அவனுடைய சக்தி வெளிப்படும். தன்னுடைய சுயநலத்துக்காக ஒரு பொழுதும் அவர் தன்னுடைய சக்தியை உபயோகித்ததாய் சரித்திரமே இல்லை.

அப்படி என்ன சக்தி அனுமன் இடத்தில் இருந்தது என்பதை நாம் பார்ப்போம்.

இராமர் இராவணனை எதிர்த்துப் போரில் வென்ற பிறகு, அனுமன் ஒரு மலைக்குச் சென்று தனது நகங்களால் ராமாயணத்தை எழுதத் தொடங்கினான். இது எங்குமே வெளியில் பகிரங்கமாக சொல்லப்படவில்லை. வால்மீகி அனுமனிடம் கேட்டார் நீ என்ன செய்கிறாய் என்று. வால்மீகியை அனுமன் தன் தோளில் சுமந்து தான் எழுதியதை காட்டி வால்மீகியிடம் அதைப் பற்றிக் கேட்டார். அது ராமாயணம். அதைப் படித்து வால்மீகியின் கண்களில் கண்ணீர் வழிந்தது, காரணம் என்னவெனில் அனுமன் எழுதிய அந்த ராமாயணம் மிகவும் உண்மையானது சரியானது ஏனெனில் ராமாயணத்தில் அனுமனின் பங்கு தான் நிறைய. அனுமானால்தான் கதையே. அது மிகவும் உயர்ந்ததாகவும் இருந்தது என்பதில் மிகை ஏதும் இல்லை.

வால்மீகி கவலையுடன் என்ன சொன்னார் தெரியுமா? தான் எழுதப் போகும் ராமாயணத்தை பற்றி இனி யார் கவலைப்படுவார்கள் என்பதாக. இதைக் கேட்ட அனுமன் இரண்டாவது யோசனையின்றி தான் எழுதியதை அழித்துவிட்டார். இப்பொழுது சொல்லுங்கள் அனுமனை பற்றி இவை எல்லாமே மறைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல அனுமனுக்கு எந்த தற்பெருமையும் பிடிக்காது என்பது உறுதியாகிறது.



நாம் ராமாயணத்தை பற்றி படிக்கும்போது அதைத் திரையில் பார்க்கும் பொழுதும் அனுமார் பெரியவராவதும், சிறியவர் ஆவதும் அதை விளையாட்டாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் குழந்தைகள் ஏன் பெரியோர்களும் கூட அப்படித்தான். ஆனால் அந்த அஷ்டமா சித்தியைப் பற்றியும் யாரேனும் அறிவோமா?

அவருடைய அஷ்டமாசித்திகள் என்றால் என்ன? திடீரென உருவத்தை சிறியதாக்கிக்கொள்வார் ( இலங்கை செல்லும் பொழுது கடல் அரக்கியின் காதினுள் உருவத்தை சிறியதாகிக் கொண்டு நுழைந்து வெளியில் வருவார்) திடீரென பெரியதாக்கி கொள்வார் ( உருவத்தை பெரியதாகிக் கொண்டு பூமியை அதிரச் செய்வார்) ஆனால் அது எல்லாம் அனுமனின் அஷ்டமா சித்தி.

இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால் ராமருடைய பட்டாபிஷேகத்தின் போது ஒருமுறை ஸ்ரீ ராமர் அனுமரிடம் கேட்டார். இலங்கை தூது சென்றாயே அங்கு நிகழ்த்திய சாகசங்களை சொல்லவே இல்லையே "கண்டேன் சீதையை" என்று மட்டும் தானே சொன்னாய் அதற்கு முன்னால் நடந்தது என்ன என்று கேட்ட பொழுது அதற்கு சீதாதேவி சொன்னார். இது எல்லாம் நீங்கள் அறிய வேண்டுமா நான் அசோகவனத்தில் இருந்த பொழுது என்னுடைய தோழிகள் திரிசடையும் மற்றும் சிலரும் அனுமனின் சாகசங்களை கூற நான் கேட்டிருக்கிறேன். ஏன் அதை நானே கண்ணால் பார்த்து ஆச்சரியப்பட்டு இருக்கிறேன். அவற்றை நான் உங்களுக்கு கூறுகிறேன் இப்பொழுது வேண்டாம் என்றார்.

இன்னொரு முறை சந்தர்ப்பம் வந்த போது அனுமன் எப்படி எல்லோரையும் எப்படி எதிர்கொண்டார் என்று கூறு இன்று என்று ஸ்ரீராமர் கேட்க, ஸ்ரீ ராமர் லட்சுமணர் எல்லாரும் சீதா தேவி கூறியவற்றை கேட்டுக் கொண்டிருந்தனர், கூடவே அனுமனும்.

அஷ்டமா சித்திகளில் அனுமன் தன்னுடைய தேகத்தை அணுவைப் போல் சிறிதாக செய்து கொள்ளுதல், பிறகு மலையை போன்று பெரிதாக்குதல், காற்றை போல் லேசாக்கி இருத்தல், ஒரே நேரத்தில் பல இடங்களில் தோன்றுதல், அனைத்து இடங்களிலும் ஆணையை செலுத்துதல், எல்லாவற்றையும் வசப்படுத்துதல், உடல் எடையை அதிகரித்தல், பார்த்த இடங்களில் எல்லாம் எளிதாக ஊடுருவுதல் இதைப்போன்ற அஷ்டமா சித்திகள் அனுமனுக்கு உண்டு என்று எத்தனை பேருக்கு தெரியும்.

சீதாதேவி அனுமனை பற்றி இப்படி எல்லாம் சொல்லும் போது அனுமன் கைகூப்பி கேட்டுக் கொண்டிருக்கிறார். அப்பொழுது ஸ்ரீ ராமர் கூறினார், உனக்கு தான் தற்பெருமையே பிடிக்காதே, இப்பொழுது எதற்காக உன்னுடைய பெருமையை கேட்க வந்துவிட்டாய் என்று கேட்டதற்கு, அனுமனுடைய பதிலைப் பாருங்கள். எனக்கு எல்லா சித்திகளும் கிடைத்தது உங்களாலேயே ஆகும். உங்கள் பெருமைகளை பேசும் இடத்தில் அதாவது ராம நாமம் எங்கெங்கு இருக்குமோ அங்கு நான் இருப்பேன் இல்லாமல் இருப்பேனா என அதற்கும் பதில் உரைத்தான் அனுமன். இது பலருக்கு தெரியாது ஸ்ரீ ராமரை நாம் ஜெபித்தால் அனுமான் அங்கு உடனே ஏன் வருகிறார் என்பதன் பின்னணி கதை இதுதான்.

கோவிலில் செந்தூரம் ஏன் பிரபலம் ஆனது? சீதாதேவி ஒரு முறை சிந்துரத்தை நெற்றியில் வைத்துக் கொண்டபோது எதற்காக இதை இட்டுக் கொள்கிறீர்கள் என்று அனுமன் கேட்டதும், ராமனின் ஆயுள் கூடுவதற்காக என்று சீதாதேவியும் சொன்னதும் உடல் முழுவதும் குழந்தையைப் போல் செந்தூரத்தை பூசிக்கொண்டு வந்த அனுமனின் பக்தி எத்தனை பேருக்கு தெரியும்? பெண்கள் தங்கள் நெற்றியில் செந்தூரத்தை இட்டுக் கொள்ளும் போது தன் கணவனுடைய ஆயுள் கூடும் என்கிற பின்னணி தான் இந்த கதை.

சீதாதேவி இப்படி கூறியிருக்கிறார் அனுமனைப் பற்றி எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் வால்மீகி அவர்கள் எழுதும் ராமாயணத்தை நீங்கள் படிக்க வேண்டும் என்று சீதாதேவி சொன்னார். ஆனால் வால்மீகி அனுமனை பற்றி எழுதியது, அதை தெரிய வைத்தது, எல்லாம் சொன்னது அனுமன் தான் என்பது நிறைய பேருக்கு தெரியாது. ஏனெனில் வால்மீகி ராமாயணத்தை எழுதுவதற்கு முன்னமே அனுமான் தன் நகங்களால் ராமாயணத்தை எழுதியதை படித்து புரிந்து கொள்ள வால்மீகி போன்ற அறிவாளிகளுக்கு க்ஷண நேரம் போதுமே.

தன் நெஞ்சை பிளந்து காட்டிய அனுமனுக்கு ராமனின் சரித்திரத்தை தான் எழுதுவதை விட வால்மீகி எழுதட்டும் என்று விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஏன் இருந்தது? தற்பெருமை அடித்துக் கொள்ளாதவர்கலால் மட்டும்தான் அது முடியும். தனக்கு ராம நாமமே போதும், தனக்கு ராமரும் சீதையும் தான் எல்லாம் என்று நினைக்கும் அனுமன் போன்ற பக்தர்களுக்கு வேறு என்ன வேண்டும் சொல்லுங்கள்.

இன்னுமே அனுமன் பற்றிய மறைக்கப்பட்ட உண்மைகள் இருக்கின்றன. ஆனால் அதை எழுதினால் அது முரண்பாடாகிவிடும் என்பதால் நான் அதை எழுதவில்லை.
முரண்பாடு நமக்கு தேவை இல்லை பக்தி தான் வேண்டும்.

ஸ்ரீ ராம ஜெய ராம ஜெய ஜெய ராம


**ஜெயந்தி சுந்தரம்**

# தினம் ஒரு தலைவர்கள்

# பெ.தூரன் வரலாறு

பெ. தூரன் என்கிற பத்மபூஷன் ம. ப. பெரியசாமித்தூரன் (செப்டம்பர் 26, 1908 - சனவரி 20, 1987) ஒரு சிறந்த எழுத்தாளரும் தமிழில் கலைக்களஞ்சியம் தொகுத்த அறிஞரும் ஆவார். பெ. தூரன் ஒரு நாட்டுப்பற்றாளராகவும் தமிழ்ப் புலவராகவும் கருநாடக இசை வல்லுநராகவும் அறியப்படுகிறார்; நாடகங்களும் இசைப்பாடல்களும் சிறுகதைகளும் சிறுவர் இலக்கியங்களும் எழுதியுள்ளார்; மொழிபெயர்ப்புக்களை மேற்கொண்டுள்ளார்; பதிப்புப் பணிகளும் செய்துள்ளார். இவரின் நூல்கள் சில நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

வாழ்க்கைச் சுருக்கம்
பழனிவேலப்பக் கவுண்டர்-பாவாத்தாள் ஆகியோருக்கு மகனாக 1908 ஆம் ஆண்டு தமிழ் நாடு, ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சிக்கு அருகிலுள்ள மஞ்சக்காட்டு வலசு என்ற ஊரில் பிறந்தார். கொங்கு நாட்டவரின் வரலாற்று நாயகர்களான அண்ணன்மார், பொன்னர் - சங்கர் இருவரும் பெரியசாமி, சின்னச்சாமி என்று அழைக்கப்பட்டனர். மேழிப்பள்ளி பொன்னர் நினைவால் இவருக்குப் பெரியசாமி என்று பெயர் வைத்தனர். இவர், கொங்கு வேளாளரில் "தூரன்" குலத்தைச் சார்ந்தவர் என்பதால் தன் பெயரோடு "தூரன்" என்று சேர்த்துக் கொண்டார். "மஞ்சக்காட்டு வலசு பழனிவேலப்ப கவுண்டர் மகன் பெரியசாமித்தூரன்" என்பதன் சுருக்கமே ம. ப. பெரியசாமித்தூரன் ஆகும். இவர் தனது பள்ளி, கல்லூரிப் படிப்பை முடித்து 1929இல் ஆசிரியப்பணி ஆற்றினார். மே 1, 1939இல் காளியம்மாளைத் திருமணம் செய்து கொண்ட தூரனுக்கு, சாரதாமணி, வசந்தா, விஜயலட்சுமி என்ற மகள்களும், சுதந்திரக்குமார் என்ற மகனும் உள்ளனர். மருமகள் செண்பகத்திலகம் ஆவார்.



கல்வி இளம் வயதிலேயே தாயை இழந்த தூரன் செம்மாண்டம்பாளையத்தில் உள்ள தனது பாட்டி வீட்டில் வளர்ந்தார். மொடக்குறிச்சியில் தொடக்கக்கல்வி முடித்து ஈரோடு மாகாசன உயர்நிலைப்பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பவரை படித்தார். அங்கு பணியாற்றிய தமிழாசிரியர் திருமலைசாமி ஐயங்கார் பாடம் கற்பிக்கும் நேரம் அல்லாமல் மற்ற நேரமும் மாணவர்களுக்குத் தமிழ் அறிவை ஊட்டுபவர். "அவரால் எனக்குத் தமிழில் பற்றும் கவிதை எழுத வேண்டும் என்ற ஆர்வமும் ஏற்பட்டது," என்று கூறியுள்ளார் தூரன்.

தான் படித்த பள்ளியில் விடுதி வசதி இல்லாததால் ஒரு கன்னடிய நாயக்கர் வீட்டில் தங்கி உணவுண்டு படித்தார். மாணவப் பருவத்தில் ஈரோடு கருங்கல்பாளையம் நூலகம் சென்று ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் முதலியோர் எழுதிய புதினங்களைப் படிப்பதை வழக்கமாகக் கொண்டார். 1926 - 27இல் சென்னை மாநிலக் கல்லூரியில், கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களை இடைநிலை (இன்டர்மீடியட்) வகுப்பில் பயின்றார். 1929 இல் இல் இளங்கலை (பி. ஏ) கணித பட்ட வகுப்பில் சேர்ந்தார். 1931 இல் பட்ட வகுப்புத் தேர்வு எழுதாத போதும் கோபி செட்டி பாளையம் வைரவிழாப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார்.

பெரியசாமித்தூரனை தமது கல்லூரி மாணவப் பருவம் முதலான நண்பராகவும், பாரதி பாடல்களில் ஈடுபடுத்தியவராகவும், தமிழ்ப்பற்றை மேலும் தூண்டி வளர்த்தவராகவும் பத்மஸ்ரீ முனைவர் நெ. து. சுந்தரவடிவேலு குறிப்பிடுகின்றார்.
நாட்டுப்பற்று
தூரனின் பாட்டி அவரது மாணவப் பருவத்திலேயே இராட்டை ஒன்றை அளித்து அதில் நூல் நூற்கவும் கற்றுத் தந்தார். அந்த இராட்டையில் நூல் நூற்று, பெரியார் தம் வீட்டிலேயே நடத்திய கதர்க் கடையில் நூல் சிட்டங்களைக் கொடுத்து கதர் வாங்கி அணிவதை வழக்கமாக்கிக் கொண்டார். சென்னையில் கல்லூரிக் கல்வி கற்கும்போதே உடன் பயின்ற மாணவர்களுடன் இணைந்து "வனமலர்ச் சங்கம்" என்ற அமைப்பைத் தோற்றுவித்து பாரதி பாடல்களைப் பரவலாக்கி, தேசியப் போராட்டத்துக்கு வலு சேர்த்தார். "பித்தன்" என்ற மாத இதழை நடத்தவும் தூரன் காரணமாக இருந்தார்.

ஆசிரியப் பணி
1929 முதல் நான்காண்டுகள் கோபிசெட்டிபாளையம் வைரவிழா உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றினார். பிறகு போத்தனூரிலும், அதன் பின்னர் பெரியநாயக்கன்பாளையத்தில் இயங்கிய இராமகிருஷ்ணா வித்யாலயத்தில் சேர்ந்து ஆசிரியராகவும், தலைமையாசிரியராகவும் 1948 வரை பணியாற்றினார். அப்போது சிலரிடம் நேரடியாக இசைப்பயிற்சி பெற்றார்.

கலைக்களஞ்சியம் வெளியிடல்
அப்போதைய தமிழகக் கல்வியமைச்சர் தி. சு. அவிநாசலிங்கத்தின் முயற்சியால் தமிழ் வளர்ச்சிக்காக தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது. தன்னாட்சி உரிமை உடைய இக்கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட கலைக்களஞ்சியத்தின் ஆசிரியராக 1948 இல் பொறுப்பேற்று 1968 வரை 750க்கு மேற்பட்ட பக்கங்களையுடைய பத்து தொகுதிகளை வெளியிட்டார். பிறகு 100 பக்கங்களையுடைய குழந்தைகள் கலைக்களஞ்சியம் பத்து தொகுதிகளையும் 1976 வரை வெளியிட்டார்.

இசை ஆர்வம்
இளம்வயதில் சிற்றப்பா அருணாசலக்கவுண்டர் கூறிய கதைகளும், மற்றொரு உறவினர் அருணாசலக்கவுண்டர் கற்றுக் கொடுத்த இசைப்பாடல்களும் தூரனுக்குக் கதையிலும் இசையிலும் ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தது. பிறவியிலேயே கவி உள்ளம் படைத்த தூரன் தமிழில் பாடல்கள் (கீர்த்தனைகள்) புனையத் தொடங்கினார். பிற்காலத்தில் இவரது கீர்த்தனைகள், சுர, தாள இசைக் குறிப்புகளுடன் தொகுதிகளாக வந்துள்ளன. தமிழகத்தின் மிகப்பெரிய இசைவாணர்கள் பலரும் தூரனின் பாடல்களை மேடையில் பாடியுள்ளனர். இசைக் கல்லூரிகளில் இவரது பாடல்கள் சிலவற்றைப் பாடமாக வைத்துள்ளனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்





# கடுமையான உடல்நிலை பிரச்சினையை எதிர்கொண்டு வருகிறேன்

தான் கடுமையான உடல்நிலை பிரச்சினையை எதிர்கொண்டு இருப்பதாக நடிகை பவித்ரா லட்சுமி தெரிவித்துள்ளார். மேலும், தனது வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் கடினமாக்க வேண்டாம் என்று அவர் உருக்கமாக கேட்டுக்கொண்டுள்ளார்.

'குக் வித் கோமாளி' நிகழ்ச்சி மூலம் பிரபலமானவர் பவித்ரா லட்சுமி. சில படங்களிலும் நாயகியாக நடித்துள்ளார். சில மாதங்களாகவே இவர் பிளாஸ்டிக் சர்ஜரி செய்துக் கொண்டுள்ளார் என்று செய்திகள் பரவியது. இது தொடர்பாக சில விளக்கங்கள் கொடுத்திருந்தார் பவித்ரா லட்சுமி. மேலும், அவரது சமீபத்திய சமூக வலைதள புகைப்படங்கள் பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. மிகவும் உடல் மெலிந்து காணப்பட்டார்.

இதனால் மீண்டும் வதந்திகள் பரவ தொடங்கியது. இது தொடர்பாக நீண்ட விளக்கம் ஒன்றை வெளியிட்டுள்ளார் பவித்ரா லட்சுமி. அதில் "என் தோற்றம் மற்றும் எடை குறித்து என்னைப் பற்றி நிறைய ஊகங்கள் பரவி வருகின்றன. என் தரப்பில் இருந்து அதற்கு விளக்கங்கள் கொடுத்த பிறகும், அவை நிறுத்தப்படவில்லை. நான் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டேன் என்று சொல்வது மற்றும் பல்வேறு ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்புவது மிகவும் தேவையற்றவை. சில கருத்துகள் எல்லாம் என்னவென்று கூட நான் குறிப்பிட விரும்பவில்லை.

நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன், நான் கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளேன், அதற்காக சிகிச்சை பெற்று வருகிறேன், நான் நல்ல கரங்களிலும் சரியான பராமரிப்பிலும் இருக்கிறேன். உண்மையான அக்கறையுடனும் அன்புடனும் இதைக் கேட்ட அனைவருக்கும் நன்றி. இந்த தருணத்தில் அது மிகவும் முக்கியமானது.

அனைத்து ஊடகங்களையும் மக்களையும் கேட்டுக்கொள்கிறேன், என் பெயரையும் நல்லெண்ணத்தையும் பணயம் வைத்து உங்கள் பொழுதுபோக்குக்காக வதந்திகளைப் பரப்ப வேண்டாம். எனக்கு ஒரு வாழ்க்கை மற்றும் எதிர்காலம் உள்ளது, ஏற்கெனவே இருப்பதை மீண்டும் கடினமாக்க வேண்டாம். மேலும் தயவுசெய்து உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்தினருக்கோ நீங்கள் செய்ய அனுமதிக்கும் எதையும் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டாம்.

நான் உங்களிடம் கேட்பது கொஞ்சம் மரியாதை மற்றும் அன்பு மட்டுமே. இவ்வளவு நாள் நீங்கள் எனக்குக் கொடுத்தது அவ்வளவுதான், தயவுசெய்து இப்போதும் அதை மாற்றாதீர்கள். உங்கள் பவித்ரா சீக்கிரமே திரும்பி வருவாள்" என்று தெரிவித்துள்ளார் பவித்ரா லட்சுமி.



மெட்ராஸ் படம் மூலம் பாப்புலர் ஆனவர் கேத்ரின் தெரசா. தற்போது ரிலீஸ் ஆகி இருக்கும் கேங்கர்ஸ் படத்தில் அவர் நடித்து இருக்கிறார். அவரது லேட்டஸ்ட் ஹாட் போட்டோஷூட் இதோ.

# காதல் மனைவிக்கு கார் பரிசளித்த இயக்குநர் எஸ். ஏ. சந்திரசேகர்



இயக்குநர் எஸ் .ஏ .சந்திரசேகர் தனது காதல் மனைவி ஷோபா சந்திரசேகருக்கு ஒரு பிஎம் டபிள்யூ கார் திருமண நாள் பரிசாக அன்பளிப்பாக வழங்கி இருக்கிறார்.

அது குறித்து அவர் பேசும் போது, "எனக்குத் திருமணம் ஆகி 52 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த 52 ஆண்டுகளாக எவ்வளவோ பிரச்சினைகள் இருந்துள்ளன.நான் அவளை எவ்வளவோ தொந்தரவுகள் செய்து இருக்கிறேன். தொல்லைகள் கொடுத்திருக்கிறேன். இவை அனைத்தையும் தாங்கிக் கொண்டு ஒரு பெண் என்னுடன் இத்தனை ஆண்டு காலம் வாழ்ந்திருக்கிறாள் மகிழ்ச்சியாக.

அதை நினைக்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது. திருமணம் ஆன புதிதில் மனைவிக்குப் பரிசு கொடுப்பது எல்லாம் சாதாரணமான விஷயம் . ஆனால் இந்த 52 ஆண்டு கால வாழ்க்கையை நினைத்து என் மனைவிக்கு நான் ஒரு பிஎம்டபிள்யூ கார் பரிசளித்திருக்கிறேன்,அவளது மகிழ்ச்சிக்காக. இதை நினைத்து நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்"என்று கூறியிருக்கிறார்.

# அனிருத் குரலில் ஹிட் 3 படத்தின் செகண்ட் சிங்கிள் நாளை ரிலீஸ்




தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நானி. கடைசியாக இவர் நடிப்பில் வெளியான படம் 'சூர்யாவின் சனிக்கிழமை' படம் வசூல் மற்றும் விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்றது.

இதைத் தொடர்ந்து 'ஹிட் 3 படத்தில் நானி நடித்துள்ளார். ஹிட் 3 படத்தை பிரபல இயக்குநர் சைலேஷ் கொலானு இயக்கியுள்ளார்.

பிரசாந்தி திபிர்னேனி தயாரிப்பில் உருவாகியுள்ள இப்படம் வரும் மே மாதம் 1 ஆம் தேதி திரைக்கு வருகிறது. ரத்தம் தெறிக்கும் கிரிமினல் ஜானரில் உருவாகியுள்ள ஹிட் 3 படத்தில் நானி போலீஸ் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

படத்தில் நடிகர் கார்த்தி கௌரவ வேடத்தில் நடித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியாகி மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது.

திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் இந்தி மொழிகளில் வெளியாகிறது. திரைப்படம் வெளியாக இன்னும் 7 நாட்கள் மட்டும் இருக்க நிலையில் படத்தின் ப்ரோமோஷன் பணிகள் தீவிரமாக நடைப்பெற்று வருகிறது. படத்தின் முதல் பாடலான ப்ரேம வெல்லுவா பாடல் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்ற நிலையில் படத்தின் அடுத்த பாடலான 'தனு' பாடலை நாளை மாலை படக்குழு வெளியிட இருக்கிறது. இப்பாடலை ராகவ் வரிகளில் அனிருத் பாடியுள்ளார்.

# படப்பிடிப்பில் நடந்த சுவாரஸ்யங்கள்



நீண்ட இடைவேளைக்குப் பிறகு இயக்குனர் சுந்தர் சி மற்றும் காமெடி நடிகர் வடிவேலு கேங்கர்ஸ் என்ற திரைப்படத்தின் மூலம் இணைந்துள்ளனர்.

15 வருடங்களுக்குப் பிறகு இணையும் சுந்தர் சி மற்றும் வடிவேலு காமெடி கூட்டணி ரசிகர்கள் ரசிக்கும் வகையில் இருக்கும் என்றும் கைப்புள்ள, வீரபாகு மாதிரி சிங்காரம் என்ற கேரக்டரில் கேங்கர்ஸ் படத்தில் வடிவேலு நடித்துள்ளார்.

கேங்கர்ஸ் திரைப்படம் ஏப்ரல் 24ம் தேதி வெளியாக இருக்கிறது. படத்தின் டிரெய்லரை படக்குழு சமீபத்தில் வெளியிட்டு மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. வடிவேலு இப்படத்தில் பல கெட்டப்புகளில் நடித்துள்ளார். படத்தின் பாடல்கள் வரவேற்பை பெற்று வருகின்றன.

இந்நிலையில் படப்பிடிப்பில் நடந்த விஷயங்களின் நிகழ்வுகளின் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. அவை ரசிக்கும்படியாக உள்ளதால் ரசிகர்களில் கவனத்தை வெகுவாக ஈர்த்து வருகிறது.

# 'நரிவேட்டை' படத்தின் டிரெய்லர் வெளியீடு




மலையாள சினிமாவின் முன்னணி நடிகரான டொவினோ தாமஸ் அடுத்ததாக நரி வேட்டை என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார்.

திரைப்படம் வரும் மே 16 ஆம் தேதி வெளியாகவுள்ளது. இப்படத்தை அனுராஜ் மனோகர் இயக்கியுள்ளார். இதற்கு முன் இவர் ஷேன் நிகாம் நடிப்பில் இஷ்க் திரைப்படத்தை இயக்கியது குறிப்பிடத்தக்கது.இப்படமே சேரன் நடிக்கும் முதல் மலையாள திரைப்படமாக அமைந்துள்ளது. இவர்களுடன் சுராஜ் வெஞ்சரமூடு மற்றும் பிரியம்வட கிருஷ்ணன் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். திரைப்படம் தமிழ் மற்றும் மலையாள மொழியில் வெளியாக இருக்கிறது.

உண்மையான சம்பவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட திரைப்படம் என்பதால் படத்தின் மீது ரசிகர்களுக்கு மிகப்பெரிய எதிர்ப்பார்ப்பு உருவாகியுள்ளது. படத்தின் இசையை ஜேக்ஸ் பிஜாய் மேற்கொள்ள படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிளான மின்னல்வாலா பாடலின் வீடியோவை படக்குழு சமீபத்தில் வெளியிட்டது.

இந்நிலையில் படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது. டிரெய்லர் காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# தமிழ் சினிமாவில் முதன் முதலில் 'சிக்ஸ் பேக்' வைத்தது தனுஷ்



நடிகர் சூர்யாவின் 44ஆவது படம் ரெட்ரோ. இப்படத்தை கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ளார். பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடித்துள்ளார்.

இந்த படத்தை சூர்யாவின் 2டி மற்றும் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன் பெஞ்ச் நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளன. இந்தப் படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். ரெட்ரோ படம் வருகிற மே 1-ம் தேதி வெளியாகவுள்ளது.

படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைப்பெற்றது. அதில் நடிகரான சிவக்குமார் நடிகர் சூர்யாவின் வலர்ச்சி மற்றும் தொடக்க காலத்தில் பணியாற்றிய படத்தை பற்றியும். பிறகு தமிழ் சினிமாவில் உடலை மெருகேற்றி 6 பேக் கொண்டு வந்த முதல் நடிகர் சூர்யாவை பற்றி மிகவும் பெருமையாக பேசினார்.

அதைத்தொடர்ந்து நெட்டிசன்கள் உண்மையில் சூர்யா தான் தமிழ் சினிமாவில் முதன்முறையாக 6 பேக் கொண்டு வந்தாரா என கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளிக்கு வகையில் சமீபத்தில் நடந்த நேர்காணல் ஒன்றில் நடிகர் விஷால் பதிலளித்துள்ளார். அதில் " 2007 ஆம் ஆண்டு வெற்றிமாறன் இயக்கத்தில் வெளியான பொல்லாதவன் திரைப்படத்தில் நடிகர் தனுஷ் தான் முதன் முதலில் சிக்ஸ் பேக் கொண்டு வந்தார். அதை தொடர்ந்து மத கஜ ராஜா மற்றும் சத்யா திரைப்படத்தில் நான் 6 பேக் வைத்தேன். மக்கள் மறந்து விட்டார்கள் என நினைக்கிறேன்" என கூறினார்.


வாரணம் ஆயிரம் மற்றும் சத்யா திரைப்படம் 2008 ஆம் ஆண்டு வெளியானது குறிப்பிடத்தக்கது.





















# வட்டத்திற்குள் வார்த்தை

**போட்டி எண் : 37**

விடைகள் அனுப்ப வேண்டிய வாட்ஸ்அப் நம்பர் 8122664699

சரியான விடை அளித்தவர்களிலிருந்து குலுக்கல் முறையில் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு தலா ரூபாய் 100 சன்மானம் அளிக்கப்படும்



## குறிப்புகள்

இங்கே ஒன்று முதல் ஆறு வரை வரிசை எண்களில் கட்டங்களும், அதற்குரிய குறிப்புகளும் தரப்பட்டுள்ளது. கட்டங்களில் சிலவற்றில் வட்டம் செய்யப்பட்டுள்ளது. குறிப்புகளுக்கு ஏற்ப கட்டங்களை சரியான எழுத்துக்களால் நிரப்ப வேண்டும். வட்டங்களில் உள்ள எழுத்துக்களை மட்டும் எடுத்து ஒழுங்கு படுத்தினால் "வட்டத்திற்குள் வார்த்தை" என்ற குறிப்புக்கான விடை கிடைக்கும்.

கட்டங்களுக்கான குறிப்பு:

1. பிறந்தநாள், பண்டிகை தினங்களில் பெரியோர்களின் காலில் விழுந்து "__"வாங்குவது வழக்கம்.

2. மகாவிஷ்ணுவின் படுக்கையாக இருப்பது இவர்தான்.

3. ஸ்ரீ ஐயப்பன் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் மலை.

4. நீ எனக்கு "_"மூன்றும் தா.

5 .பூலோக வைகுண்டம்...

6. பீஷ்மருக்கு இப்படி சிறப்பு பெயர் உண்டு.

குறிப்பு:

அத்வைத தத்துவத்தை நிறுவிய, காலடியில் அவதரித்த மகான், குரு.

**விடைகள் அனுப்ப கடைசி நாள் 28.04.2025**



த.சிவக்குமார், ஸ்ரீரங்கம்

## போட்டி எண் 36 வட்டத்திற்குள் வார்த்தை போட்டிக்கான விடைகள்

**விடை: த்வஜாரோஹணம்**

போட்டியில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்



J.பட்டாபிராமன்
மதுரை

கி.சௌமியா
புதுச்சேரி








## நான் யார் ?என்னைக் கண்டுப் பிடி

நானோ முற்கள் நிரைந்தக் காடு
என் வீடோ அழகானக் கூடு
முக்கனியில் நான் ஒன்று
என்னைப் பிடிக்காதவர்கள் இவ்வுலகில் யார்?இன்று
உள்ளே வந்து பார்த்தால் மஞ்சள் வண்ண மேனி
அதிலோ புதைந்தப் பல முத்துக்கள்

என்னுடன் சேர்த்து இணைப்பிரியா நூல்கள்
என்னை வெட்டினாலோ வந்திடுமோ வெள்ளை
இரத்தம் நாவில் எச்சில் ஊறிடுமே என்னைக்
கண்டால் . நோய் எதிர்ப்பு சக்தியும் என்னிடம்
இருக்கிறது...

சுமதி முருகன், தாம்பரம்

## ஒரு பாதை

தேர்ந்தெடுத்துவிட்டால்
அதே பாதையில்

பயணம் செய்....
குண்டு குழிகளை

சரி செய்து பிறர்
பயன்படுத்த வழி செய்!

பூமிக்கு வந்த உன்னால்
ஒரு சாலை உருவாகட்டும்

கவிஞர் பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

## நட்பு,,,

நட்பு என்பது கருவறை
தாங்காத புது உயிர்,,

நட்பு என்ற உயிர்
எல்லோரிடத்திலும்
வளர்ந்தாலும்,,,

சிலரிடம் மட்டுமே வாழ்ந்து
வளர்ந்து சிறக்கிறது,,,
என்றும் நட்புடன்

மாணிக்கம்

## நீர் இரண்டு... கவி ஒன்று...

கோடை காலம்
உச்சி நேரம்...

சாலையில் நின்றிருந்தது...
இரு சக்கர மிதி வண்டி
ஒன்று...

அதன் அருகே நின்றிருந்தது
மூன்று சக்கர தள்ளுவண்டி...

இரு சக்கர மிதி வண்டியில்
சுட சுட தேநீர் விற்பனை...

மூன்று சக்கர தள்ளு
வண்டியில் குளு குளு
இளநீர் விற்பனை...

நிலமகள் தந்த
கொடைகளில் ஒன்று
இளநீர்...

மலை மகள் தந்த
கொடைகளில் ஒன்று
தேநீர்...
உடல் வெட்கை தனிக்க
மன சூட்டை இறக்க...

இளநீர் குடித்தான்
தேநீர் விற்பவன்...

உடல் தளர்வை நீக்க
மன சோர்வை போக்க...
தேநீர் குடித்தான்
இளநீர் விற்பவன்...

எதிரும் புதிருமான
காட்சி...

ஓவியன் கண்டிருந்தால்
அழகோவியம் ஒன்றை
படைத்திருப்பான்...

கவிஞன் ஒருவன்
கண்டதனால்
கவிதைஒன்றை
படைத்திருக்கான்...

ஆறுமுகம்
நாகப்பன்

## "தேடல்"

கடற்கரையில் யாரை
தேடுகிறது அலை?

பூந்தோட்டத்தில் யாரை
தேடுகிறது தென்றல்?

வளைந்து நெளிந்து யாரை
தேடுகிறது புதுவெள்ளம்?

வானில் மிதந்து கொண்டே
யாரை தேடுகின்றன
மேகங்கள்?

உறக்கத்தில் யாரை
தேடுகிறது என் மனம்?

தேன்ராஜா, நெய்வேலி'

## செல்லுக்குள்ளே. இருக்கிற பிள்ளைகளா

செல்லுல இருக்குறப்
பிள்ளைகளே.. சிந்திச்சு
வெளியில வாருங்களே!

துள்ளுற வயசுலே
பிள்ளைகளே.. தூண்டிலில்
விழுந்த மீனுகளே..

தொட்டா விடாது செல்லு..
தம்பி தொடாம தூரமாய்
நில்லு..

கெட்டால் இயங்காது
செல்லு.. கெடாமல்
கொஞ்சம் நீ தள்ளு..

வலைக்குள்ளே வக்ர
விளையாட்டு.. ஆடாதே
அதுக்குள்ளே போடாதே
துட்டு..

உலைவைத்துப் பிழைக்கின்ற
பிழைப்பு அதுதானே
செல்போனின் அழைப்பு

குழிக்குள்ளே விழுந்தது
போதும் .. இன்றே கையூன்றி
எழ வேண்டும் நீயும்..

அறிவியல் எரிகின்ற தீபம்..
திருக்குறளை அதில்
படித்தால் போதும்..

கைப்பேசி அதுதாண்டா
செல்லு.. கையாளு
நல்லதற்கே பயன்படுத்து
வெல்லு.!

வே.கல்யாண்குமார்

எல்லாம் தொலைத்த பிறகும்
கடக்க நினைக்கும் மனது
உன்னை தொலைத்த பிறகு
என்ன இந்த அற்ப
வாழ்வென
எண்ண தோன்றுகிறது!

லி.நெளஷாத் கான்-

## ஏக்கம்...

அருகினில் நீ. இருந்தும்...
காணாத கண்களுக்கு..


எப்படி சமரசம் செய்வது...
நான்....?
சிரமங்களையே சிறகாக்கிக்
கொண்டாய்..நீ..

ஆடுகளம் தான்...
உனக்கு... தட்பவெப்ப
ம் எதுவாயினும்....
வானத்திலும்....
வாழ்க்கையிலும்...

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி

நான் மட்டும் உன்னை
பார்ப்பது இயற்பியல்
நீயும் என்னை பார்ப்பது
வேதியியல்
பரஸ்பரமாய் நட்போடு
கைகுலுக்கி கொள்வது
தாவரவியல்
இதழோடு இதழ் வைத்து
இம்சைகள் செய்ய
துவங்குவது விலங்கியல்
மொத்தத்தில் நான் படிக்க
விரும்பும் அறிவியலே
நீ தானடி!

இப்படி பார்த்து
தொலைக்காதே
பாவம் நான் இன்னும்
சில காலம் வாழ
ஆசைப்படுகிறேன்
விழி வீச்சு வேண்டாமடி
கால் பிடித்து கேட்கிறேன்
என்னை விட்டு விடு!



அவள் வெட்கப்பட்டு
சிலாகித்த கவிதையெல்லாம்
அவனுக்கு மொக்கையாக
தெரிகிறது ஏனோ
அவள் எனை விட்டு போன
பிறகு அந்த வார்த்தையும்
என்னோடு வர மறுக்குது
மாலையில் சூரியன்
வேண்டுமானால்
மறையலாம்–ஆனால்
விடியும் பொழுதில்
மீண்டும் நிச்சயம்
உற்சாகமாய் உதிக்கும்–என்
கவிதைச்சூரியன்!

லி.நெளஷாத் கான்-

## சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா...

வாழும் காலம்
வளமாய் நலமாய்

பகுத்தறிவும் பண்பும்
பெற்று வாழ்ந்து

சிந்தனையை சீராக்கி
செயலில் இறங்கி

சாதிமத பேதமின்றி
நட்புடன் உறவாடி

பெரியோர்கள் வழியில்
போற்றும்படி நடந்து

ஏற்றமுடன் முன்னேற
முயற்சி செய்து

அனைத்துத் துறைகளிலும்
கால் பதித்து

நல்வழிப் பாதையில்
வீறுநடைப் போட்டு

அஞ்சாத நெஞ்சம்
கொண்டு சிங்கமாய்

நாடென்ன செய்தது
நமக்கென நினையாமல்

நாமென்ன செய்தோமென
நினைத்து உதவினால்

நாடும் வீடும் நமக்கென
வசமாகும்

நம்பிக்கைத் துணையுடன்
கால் பதித்தால்

வானமும் பூமியும்
செழித்து சிறக்கும்

பாரத பூமியைக்
காக்கும் அரணாய்

சத்தியமே லட்சியமாய்க்
கொள்ளடா
மகிழ்வுடன்

தலை நிமிர்ந்து
நில்லடா
பெருமையுடன்.

தாராமதன்

ஒரு பாதை
தேர்ந்தெடுத்துவிட்டால்
அதே பாதையில்

பயணம் செய்....
குண்டு குழிகளை
சரி செய்து
பிறர் பயன்படுத்த
வழி செய்!

பூமிக்கு வந்த உன்னால்
ஒரு சாலை
உருவாகட்டும்

கவிஞர் பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

பிள்ளையார் சதுர்த்தியில்
பிள்ளையின் ஞாபகம்
பிள்ளையின் பிரிவு!

கிழிந்த மெத்தையில்
படுத்துக் கிடக்கிறது
நினைவுச் சுமைகள்!

பதவி மோகத்தில்
விளைந்தன புதிய கட்சிகள்
பாவம் பொது மக்கள் !

பெயரோ ஆறு
குளிக்க முடியவில்லை
கூவம் ஆறு!

என்றோ மண்ணில்

வீசி எறிந்த
விதை
இன்று
நிழல்தரும்
மரம்!

பூ.சுப்ரமணியன்
சென்னை

வலிமையானவர்களென்று
இங்கு யாருமில்லை
தனிமையான இரவு
ஒன்றில்
அவர்கள் அழுத
கதையெல்லாம்
உங்களுக்கு தெரிய
வாய்ப்பில்லை
இந்த மனித பிறவிகள்
எல்லாம் பயந்தவர்கள்!
பலகீனமானவர்கள்!!

திட்டி தீர்க்காதே
கொட்டி தீர்க்கும்
மழையில் நனையடி
உன் பேரழகை

நானும்–அந்த
மழையும்
இரசித்து
தான்
போகட்டுமே!

லி.நெளஷாத் கான்-

## உலகெங்கும் உலவுகின்ற தெள்ளுதமிழ்ப் பனுவல்!

உலகப் பொதுமறையாம் திருக்குறளின் மேன்மை
தொல்லுலகில் இமையமென உயர்ந்து நிற்கிறது !
அறம் பொருள் இன்பமென முப்பாலில்
திறன்மிகு வாழ்வியலை வகுத்துக் கொடுக்கிறது !

இரண்டாயிரம் ஆண்டுக்கு முந்திய காலத்தே
ஈரடி வடிவத்தில் இணையிலா நூல் !
வள்ளுவப் பெருந்தகை வடித்த சுவடி
உலகெங்கும் உலவுகின்ற தெள்ளுதமிழ்ப் பனுவல் !

அயல்மொழிகள் பலவற்றில் தமிழ் மரபை
அள்ளித்தெளித்த அருந்தமிழ் ஏடு !
அலையாடும் குமரிக் கடல் பரப்பில்
சிலையாகி நிற்கின்ற ஐயனின் புகழ்ப்பாடு !



மத நல்லிணக்க மாமணியாய் உயர்ந்தே
மாநிலத்தில் திருக்குறள் சொல்லாட்சி புரியுது !
தேசியம் போற்றும் திருக்குறள் என்றென்றும்
தகைசால் மணிவிளக்காய் ஒளிபரப்பி வாழுது !

முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம்

பகலவன் வரவுக்கு பயந்தேதான்
பனிப்போர்வையில் மறைந்தாயோ மரமே நீ!

பொழுது விடியும் வரை போர்த்திக் கொண்டிரு
பொருமையாய் காத்திரு

ஆதவன் வந்ததும் மெல்ல மெல்ல உன் மேல் வீழ்ந்ததும்
வெண்போர்வைகள் வெட்கத்தில் உருகி வழிந்தோடி விடும்

பச்சை பசேலென பளிச்சென தெரியும் நீ
புதுப்பொலிவு பெறுவாய்
நகர முடியாத நீ நடுப்பகலிலும் நகரத்தார்க்கு நிழலாவாய்

ஸ்டார்ச் தயாரித்து ஸ்ட்ராங்காவாய் சிலிர்க்க வைக்கிறாய்
இடம் பெயராமலேயே இன்முகம் காட்டும் உன்னை
நேசிக்கிறேன்


இயற்கை கொடுத்த வரம் நீ
தென்றல் காற்றும் காயும் கனியும் தரும் மரம் நீ விரகாய்

சமைந்து சமைக்க செய்வாய்

உன்னை வணங்குகிறேன்
உன்மேல் விழுந்த பனித்துளி உன் வேர்
நனைக்கட்டும். உன் உயரம் வான் தொடட்டும்.

வி.பிரபாவதி
மடிப்பாக்கம்




# புத்தக விமர்சனம்

'ரகசியம்'என்ற ஒரு புத்தகத்தை படிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த ரகசியம் பெற்றோர்களும், ஆசிரியர்களும் தெரிந்து கொள்ள வேண்டிய ரகசியம். குழந்தைகளின் உளவியலை சார்ந்து எழுதப் பட்ட கதைகள்.

பல குழந்தைகளின் உள்ளத்தில் உள்ள பல ரகசியங்களை ஆசிரியர் வெளிக் கொணர்ந்து உள்ளார். அதன் முக்கிய காரணம் விழிப்புணர்வு ஏற்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சி.

குழந்தைகளுக்கு கற்றல் குறைபாடு உள்ளது என்பதையோ, 'ஆட்டிசம்' பாதிப்பு உள்ளது என்பதையோ உணராதவர்கள் பலர் உள்ளனர். இதில் உள்ள கதைகள் அனைத்தும் உளவியல் சார்ந்தவை.

என் மனம் கவர்ந்த சில கதைகளைப் பார்ப்போம். 'வடிகால் வழியே கரைந்த நட்சத்திரம்' என்ற கதை தலைப்புக்கு ஏற்றதாக உள்ளது. கதையின் நாயகன் சித்தார்த் தன் உடலில் ஏற்படும் மாற்றத்தை புரிந்து கொள்ள முடியாத வயது. பெற்றோர்கள் ஏன் ஏற்க மறுக்கின்றனர் என்று குழந்தை யோசனை செய்கிறான். நம்மையும் சிந்திக்க வைக்கிறார் ஆசிரியர்.

குழந்தைகள் மனதில் எத்தனை கேள்விகள்.

சமூகத்திற்கு பயப் படும் குழந்தையின் மனநிலை. 'எந்த அம்மா?' கதையும் இன்றைய நிலைப்பாட்டை சிந்திக்க வைக்கிறது.

'ஹெட்போன்' என்றொரு கதை. அதில் ஆரா என்ற பெண்ணின் எண்ண ஓட்டங்கள். அவள் இறுதியில் 'அவன் என் தம்பி' என்று கூறும் போது நம்மை அறியாமல் அப் பெண்ணின் மனநிலையை நம்மால் உணர முடிகிறது. அவன் 'ஆட்டிசமோ', 'மன நலம் குன்றிய பையனோ தெரியுது. ஆனால் தன் தம்பி என்று ஒத்துக் கொள்கிறாள்.

எவை எல்லாம் குடும்பத்தினரால் ரகசியமாக வைக்கப் பட்டதோ அது ரகசியம் இல்லை அனைவருக்கும் தெரிய வேண்டியது என்பதை நம்மால் உணர முடிகிறது.

இந்த புத்தகத்தின் ஆசிரியர் டாக்டர் லட்சுமி பிரியா. அனைவரும் படிக்க வேண்டிய நூல். ஆசிரியை இன்னும் பல் வேறு நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். புஸ்தகா நிறுவனம் வெளியிட்டுள்ளது. அவர் பேக்கிடெர்ம் டேல்ஸ் நிறுவனத்தின் நிறுவனர். புஸ்தகம் வேண்டுவோர் அழைக்கப்படுகிறது வேண்டிய அலைபேசி எண் +919790349390

ஆக்கம்
ருக்மணி வெங்கட்ராமன்

## புத்தகம்


நாகரீக விஞ்ஞான
வளமிக்க வாழ்வில்
மறந்தோ(மா)?
மறைத்தோ(மா)?
புதைந்துப் போன
பொக்கிஷமானப்
புத்தகங்களை

கற்கால வாழ்க்கை,
காலத்தின் காட்சிகள்,
வரலாற்று நிகழ்வுகள்,
ஆன்மீக அறிவுரைகள்,
கண்முன் காட்சிப்படுத்தும்...

அறிவியல் ஆய்வுகள்,
உளவியல் சிந்தனைகள்,
உள்ளக் குமுறல்கள்,
தலைமுறை தகவல்கள்,
ஆழமான விளக்கங்கள்...

அவசர உலகில்
அறிவை சுவாசிக்க
நேரமில்லா மனிதனின்
அலட்சியத்தால் சிலந்திகள்
வலைப்பின்னி
வாசிக்கின்றன...

சரஸ்வதி பூஜையன்று
மட்டுமே சாம்பிராணிப்
போடும் பழக்கம்
தவிர்த்து தினமும் ...
திருவிழாக்
கொண்டாடுவோம்
புத்தகத் திருவிழாக்
கொண்டாடுவோம்

உள்ளம் விழைந்து
உள்ளே நுழைந்து
வாசிப்பை நேசித்து

இளைய
தலைமுறைக்கு
வசந்தத்தைப்
பரிசளிப்போம்

நா.
பத்மாவதி
கொரட்டூர்



## பித்த வெடிப்பு:

பித்த வெடிப்புகள்
பாதம் முழுவதும்
மொத்தம் உவர்க்கும்

முழுநில நீரில் அக்கறை
யின்றியேஅப்படி நடந்ததால்
அக்கரை தன்னில்
அவளும் வீழ்ந்தாள்
எப்படி ஆயினும்

உடம்பில் புரதம்
தப்பெனக்
குறைந்ததும்
இதற்குக்
காரணம்!!

வைரமணி
சென்னை

## இயற்கையெனும் இனியக்கனி தர்பூசணி.

பச்சை வண்ணத்தில்
பந்துகளைப் போல்
சாலையோர குவியல்கள்
ஆங்காங்கே...

சுட்டெரிக்கும்
சூரியனின் வெப்பத்தை
தணிக்க வந்த
சிவப்பு தண்ணீர்.

இயற்கை தந்த
இனிய கனியை
தயங்காமல் வாங்கி
விருந்தாக்கி
உண்டு மகிழ்வோமே.

நீச்சத்து தாது சத்துக்கள்
என அனைவருக்கும்
ஏற்றதாக கீற்று கீற்றாய்

சுவைப்போம்
விவசாயிகளை
ஊக்குவிப்போம்.

எறும்பூர்
கை.
செல்வகுமார்,
செய்யாறு.

## தமிழின் அழகு

திக்கெட்டும் ஒலிக்கும்
தமிழாம் மொழியழகு..
புகழ் நிறைக்கும் சீரிளமை
வனப்பழகு..
கல்தோன்றா முன்தோன்றிய
காவியச் சிறப்பழகு..
என்றென்றும் இனிக்கின்ற
இயல்பான நடையழகு..
தென்னகத்து
மென்மொழியின் திகட்டாத
சுவையழகு..
இன்னிசைத் தமிழில்
கவிபாடும் கலையழகு..
கம்பன் பாரதியின்
கவின்தமிழ் மொழியழகு..
வார்த்தைகளால்
வாயினிக்கப் பாடும்
இசையழகு..
இளமையென்றும் மாறாத
தாய்மொழியாம் தமிழழகு..

தமிழன்னை
காப்பாள்
தமிழுன்னை
என்றுமே!

ராதா பாலு
குடந்தை

## ஆற்றல் வேந்தன்

அகிலத்தில் தோன்றிய
அனைத்து உயிரினும்
அரிதினும் அரிதானவன்
மனிதன்...

விளக்கிட முடியாத
வீர்ய வரலாற்றில்
வியப்பின் உச்சம்
மனிதன்...

எண்ணவே இயலாத
எத்தனை எத்தனையோ
தடைகளை யெல்லாம்
தன்னிகரில்லா தனித்துவ
பலத்தால் தைரியத்
துணையில் தாண்டித்
தாண்டி தடம் பதித்தவன்
மனிதன்...

ஆறடி ––ஈரடி என்னும்
உயர அகலத்தின்
ஒடுக்க வடிவிலும்
அண்டம் உள்ளடக்கி
ஆச்சர்ய அதிர்வில்
ஒளிர்ந்து ஜொலிப்பவன்
மனிதன்...

அறிவியல் தளத்திலும்
ஆன்மிக தளத்திலும்
ஆய்ந்து ஆய்ந்து
நுணுகி நோக்கினும்
அறுதியிட்ட கணிப்புக்கு––
கணக்குக்கு அகப்படாத

ஆற்றல்
வேந்தன்
மனிதன்!

நெல்லை
குரலோன்
பொட்டல்
புதூர்






## குத்து விளக்கு

பெண்ணே...
நீ என் வீட்டில் காலடி எடுத்து
வைக்கும் போது ... என்
வீட்டில் இருக்கும் குத்து
விளக்கை அணைத்து
விடுகின்றேன்....



ஒரு வீட்டில்
இரண்டு குத்து
விளக்குகள்
ஆகாதாமே....!

**எம். பி.தினேஷ்.**
கோவை

## வேண்டாமை

காலம் காத்திருக்காது
தன்முனைப்பை நீக்கு
மன்னிக்கத் தயங்காதே
புதிய உத்திகள் ஏற்பாய்

நேசிக்க வேஷம் வேண்டாம்
பீறிடும் ஆனந்தம் அனுபவி
புன்னகை
அரும்ப
வைக்கும்
விஷயங்களைத்
தவிர்க்காதே!



**பி. திலகவதி,**
சென்னை.

1. தன்னம்பிக்கை
உனக்கு மேலே உள்ளவனை
பார்த்து ஏங்காதே தாழ்வு
மனப்பான்மை வரும்.
உனக்கு கீழே உள்ளவனை
பார்த்து ஏளனம் செய்யாதே
தலைக்கனம் வரும் உன்னை
யாரோடும் ஒப்பிடாமல்
நீயாக இரு தன்னம்பிக்கை
வரும்
2. அறிவுரை
ஆலோசனை என்பது
அனுபவ பகிர்வு அறிவுரை
என்பது நாம் செய்யாததை
அடுத்தவருக்கு
கூறுவது



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்
குறிச்சி



## நறுக்ஸ் நொறுக்ஸ்

அந்தரத்துக் கயிற்றில் சிறுமி
அடக்கி வாசித்தது
காற்று!

**ரிஷிவந்தியா,தஞ்சாவூர்.**

## ஒற்றுமை

ஒரு குச்சி எளிதாக
உடையும். பலக்குச்சி
இணைத்தால்
எப்படி உடையும் என பாடம்
படித்த ஒற்றுமை..

இப்போது வடிவத்துடனே
மனதில் உண்டு
குடும்ப ஒற்றுமைக்கு
தேவை......விட்டுக்
கொடுப்பதும்

நட்பு ஒற்றுமைக்கு
தேவை .....பொறுமையும்
உணர்தலும்.
உடலின் அனைத்து
உறுப்புகளும்
திடமான ஒற்றுமையாக
இயங்குவதால் தானே
நாம் ஜீவிக்கிறோம் என
உணர்ந்து

சுற்றங்களிடம் எப்போதும்
பற்று
அதிகமாகக்
கொண்டு
ஒற்றுமையுடன்
வாழ்வோம்!



**உஷா முத்துராமன்**

## மூன்றாவது...

காத்திருத்தலில்
மூன்று முக்கிய நிகழ்வுகள்
ஏற்படுகின்றன.
முதலாவது சலிப்பு.
அந்த நிமிடங்களில்
எதுவும் செய்ய முடியாத
தவிப்பும் அதோடு சேர்ந்து!
இரண்டாவது கோபம்.
இது யாருக்காகக்
காத்திருக்கிறோமோ
அந்த உறவை துளியேனும்
சேதப்படுத்தாமல்
போவதில்லை. மூன்றாவது
சுகம். இதையும்
எதிர்பார்த்திருந்ததால்
ஏமாற்றம் சற்றுமின்றி
இந்த நிமிடங்களையும்
அனுபவிக்க எத்தனையோ
வழிகளை கைவசம்
வைத்திருப்பவருக்கு.

**கே. பி. ஜனார்த்தனன்**

## போராட்டம் அனுபவ பாடமே

நீதியை நிலை நாட்டவும்
உண்மை நிலையை
எடுத்துச் சொல்லவும் ..."

புண்பட்ட மனதுக்கு
ஆறுதல் தரவும்
ஆதாரம் சேதாரம்
இல்லாமல் நீர்த்து போகாமல்
இருக்கவும் ..."

மனதின் குரல் மறைந்து
போகாமல் துளிர் விடவும்
எதிரொலிக்கவும் ....."

பிரச்சனையின்
வலி வீர்யம் வெளிப்படவும்
தனி மனித முயற்சி
எடுபடாமல் போகும் போது..."

போராட்டம்
போராட்டக் களம் கருவி
போல பயன்படுகிறது ...."

இழந்ததை மீட்க
இருப்பதை தக்க வைத்துக்
கொள்ள உரிமையை பெற..."

தேவையான ஆயுதம்
போராட்டம் பேச்சு
வார்த்தை சமரசம் ....."

போராட்டம் கடிமான
நெடு நாள் பயணமாக
இருந்தாலும் வெற்றி
மன மகிழ்ச்சி ஆறுதல்
உத்வேகம் தரும் ..."

போராடவும் தயங்காதே
முதலீடு ஆதரவு கூட்டம்
புரிதல் ....."



போராட்டம்
என்றும்
அனுபவ
பாடமே ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி.

## வாழைத்தண்டு

வாழ வைக்க வந்ததுதான்
வாழைத்தண்டு.!
தாழயிருந்து தாங்கிப் பிடித்த
வாழைத்தண்டு!
சோழநாட்டுக் காவேரி
கரைவளர்ந்து.. சொந்தமாகத்
திகழுவது வாழைத்தண்டு.!

உடல்நலத்து குறையகற்றி..
நாம்வாழக் கண்டு..
உளமகிழ்ந்து இலைதந்து
பழந்தந்து ஆதரிக்கும்
கன்று.. கறியமுது சிறுநீரக
கல்நீக்கும் மா மருந்து!
பரிமாறும் இலையினிலே..
செரிமானம் தரும்உணவு
அம்மாவாசை விருந்து!

பூ இலை காய் பழம் தண்டு..
பூமிக்கு உழவன் தந்த
உவகைமிகு பரிசு! தா
என்றே கேட்டப் பேருக்குத்
தன்னைத் தந்த தண்டு.! ஆ
நிரைகளும் அசைப்போட்டு
உண்ணும் வாழைத்தண்டு.!
பா வழங்கும் பாவலர்கள்
பாடுகின்ற ஓ..
வாழைத்தண்டு.!

**வே.கல்யாண்குமார்**

## என் இனிய தனிமையே

கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை

சொன்னது நமது
பண்டையப் பெரியோர்!

சுற்றமும் நட்பும்
சூழ்ந்திட வாழ்ந்தேன்!

போலி அன்பின்
பற்களில் வீழ்ந்தேன் !

சுயநலமே சுயமாய்
கொண்ட மனிதர்கள்

தனக்கென தின்றுக்
குதறிய மிச்சங்களில்

எனக்கென ஏதும்
காணாதைக் கண்டு

வாழ்கிறேன் எனக்காக
இன்றைய தனிமையில்

ஒற்றுமை என்றும்
பலமாம் என்றில்லை

யாருமில்லா
அறையினிலே
சந்தடியில்லா
அமைதியிலே

யாரிடமும் கிடைக்காத
மகிழ்ச்சியுமெங்கோ
மறைந்திருக்கிறது

செல்வமும் மதிப்பும்
சிதறிய பொழுதிலும்
ஊரும் உறவும்
உதறியப்பொழுதிலும்

உள் மனம் ஊமையாகி
கதறியப் பொழுதிலும்


தன்மானம் தானிருந்து
தூணாக மாறிநின்று

தனிமையை
துணையாக்குகையில்
தன்னையே
துணிவாக்குகையில்

ஆதங்க பெருமூச்சுகள்
விலகியேச் சென்றது

நிம்மதி பெருமூச்சுகள்
நினைவுகளுடனே நின்றது

தானே ஏற்றத் தனிமையிலும்
சொல்ல வியலா
இனிமையுமேதோ



இருக்கத்தான்
செய்கிறது அதிலவரவர்
அனுபவங்களின்

எதிரொலியும்
அடங்கித்தான்
இருக்கிறது

**ரேணுகா சுந்தரம்**

## மடி வேண்டி...

பிறந்த போது பெற்ற தாய்
மடி கொடுத்தாள்...


இறந்த போது பூமித் தாய்
மடி கொடுத்தாள்...

இரு தாய்க்கும்
'மடி' கொடுக்க...



மறு பிறவி
பெண் பிறவி
வேண்டி "மடி"
பிச்சை
ஏந்துகிறேன்...

**ஆறுமுகம் நாகப்பன்**



## என்னவன்

எனக்கே தெரியாமல்
நேசிக்கிறான்
அவன் உயிராக
என்னை சுவாசிக்கிறான்...
ஆனால் ஏனோ.... எதுவுமே
சொல்லாமல் மறைக்கிறான்
ஏன் என்று கேட்டால்
வதைக்கிறான்...என்ன
செய்ய...தீரா காதால்
கொண்ட அவன் திமிரழகி
அல்லவா இவள்...!!!

**த.திவ்யா.** சேலம்.

## தாய்மை

படைத்த தெய்வத்திற்கு
சுமந்த தெய்வத்திற்கும்
சிறு வித்தியாசம் தான்....
படைத்த தெய்வம் இருப்பதோ
கருவறைக்குள்...
ஆனால்கருவரையையே
தன்னுள் வைத்து
அனைத்து தெய்வங்களுக்கும
முன் திகழ்கிறாள் "அன்னை"
எனும் அன்பு தாய்...!!!

**த.திவ்யா,**சேலம்.

## கோடை வெயில்

வெயில் தகிக்கும் சித்திரை
பலரும் தொலைத்தனர்
நித்திரை..

வெப்பம் சுமந்த காற்றை..
குளிரச் செய்வார் யாரோ!

புழுக்கம் எங்கும் நிலவுதே..
அனைத்து ஜீவனும்
வதங்குதே!

குட்டி குட்டி பறவையும்..
சுருண்டு விழுந்து சாகுதே!

முடிந்தளவு தண்ணீரும்..
கொஞ்சமேனும் தானியமும்!



வைத்துஅதனை
காப்போமே!
மனிதம்மறவாமல்
வாழ்வோமே!

**உமாதேவி சேகர்**
தஞ்சை

## புத்தகம் பேசுகிறது..!

பளிச்சென்று
விளக்கைப் போடுங்கள்..
பல்லாண்டுகளாய் அடுக்கி
வைக்கப்பட்ட புத்தகம்
என்னை.. எவராது
பார்க்கட்டும்.. இளம்விரல்கள்
தீண்டட்டும்.. எடுத்துப்
புரட்டட்டுமே.!

தொடாமலே கடந்துபோன
காலங்கள்.. இனியாவது
ஒரு ஏணியை வையுங்கள்..
சின்னஞ்சிறார்கள்
ஏறிவந்து எடுக்கட்டும்!
எழுத்துக்கூட்டிப்
படிக்கட்டுமே!

கற்பாறை எழுத்தாக..
ஒற்றுஇலா பனை
யோலைக்குருத்தாக..
இருந்ததொரு நாள்கடந்து
அச்சடித்து.. பதிவேற்றம்
செய்தவரே கொஞ்சம்
கதவைத் திறந்து
வைய்யுங்கள்.. காற்றாவது
தழுவட்டுமே!

மவனமாய்த் தவமிருந்தேன்..
மனதுருக வேண்டுவது
யாதெனில்.. இருக்கும்
இப்பொழுதில் எனைப்பார்க்க
எனைப்புரட்ட.. இளங்கரங்கள்
வரும்வழியை திறந்து
விடுங்கள்! ஈங்கிவனின்
மனக்குரலை கேட்க
விடுங்களேன்!



வெகுநாட்களாக..
தீண்டப்படாதி
ருக்கும் ஒரு
புத்தகம்!
நூலகத்
திலிருந்து!

**வே.கல்யாண்குமார்.**

நல்ல நாள் குறிக்க
ஜோசியரைப்
பார்க்கப் புறப்பட்டபோது
சகுனத் தடை.


இலைகள் புடைசூழ
வீற்றிருந்த மலரின் கம்பீரம்
எட்டிப் பறித்தபின்
எங்கோ போய்விட்டது.



எல்லா
கூரைகளும்
பாதுகாப்பு
தருகின்றன.
மேலே மட்டும்.

**கே. பி. ஜனார்த்தனன்**

உன்னை தேடிய
பாதையில்
தொலைந்தது
என்னவோ
நான்தான்
காணாமல் போன என்னை
நானே தேடுகிறேன்
காணாமல் போனேன்
என்பதையும்
மறந்து...



**மனுசிய புத்திரியும் தேவனும்**
கந்தர்வகோட்டை

ஆண்டாண்டு காலம் அழுது
புரண்டாலும்

ஆகச்சிறந்த செல்வங்கள்
இருந்தாலும்

அன்னிய தேசத்தில் அழகாய்
வாழ்ந்தாலும்

மங்கிய நிலவொளி மகிழ்ந்தே
வந்தாலும்

நோய்நொடி இல்லாத
வாழ்வு இருந்தால் மட்டுமே

முழுதாய் வாழ இனிதாய்
வாழ சிறப்பாய் வாழ

உதவும் என்பதை சிந்தையில்
வைத்துவிடு

உடல் நலம் மனநலம் காக்க
உறுதி எடுப்போம்

சத்தான உணவு முத்தான
கனிகள் சாப்பிட பழகுவோம்

காய்கறிகளும்
தானியங்களும் உணவில்
அதிகம் சேர்ப்போம்

மருந்தை அகற்றி
மகிழ்ச்சியொளி ஏற்றி
வாழ்வை வசந்தமாக்குவோம்



நோயற்ற
வாழ்வே
குறைவற்ற
செல்வமென
அறிவோம்

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

நாம் விலை கொடுத்து
வாங்கும் பொருட்கள் கூட
தன் கடமையை செவ்வனே
செய்கிறது !

மின்விசிறி... குளிர்மையான
காற்றை தருகிறது !

கடிகாரம் ...
நேரத்தை காட்டி நம்மை
உயிர்ப்பிக்கிறது !

கண்ணாடி...
நம் முக , உடல் அழகை
பிரதிபலிக்கிறது !

வாகனம்....
நம்மை சேர்க்க வேண்டிய
இடத்தில் சேர்ப்பிக்கிறது....

இறைவன் ....
நம்மை பூமியில் படைத்ததும்
நன்மை எனும் கடமையை
செய்யவே...

மனிதா..
நாமும் பிறருக்கு
தீங்கிழைக்காது வாழ்ந்து
கடமையாற்றுவோம் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## சான்றிதழ்

பிறப்புச் சான்றிதழை
தந்தையும் இறப்புச்
சான்றிதழை தனயனும்
வாங்கிக்கொள்வர்.
வாழ்வுச் சான்றிதழை
நானே வாங்கிக்
கொள்கிறேன், ஓய்வூதியம்
வாங்கிடமுடியாமல்
போய்விடக்கூடும்
எனும் நிர்பந்தத்தால்.

**சாஸ்தா**

என்னை எழுதென்று
சொன்னது வானம்
பஃறொடை வெண்பா

கோடை வெயிலின்
கொடிய கனலினில்
ஆடை நனைந்திட அங்கம்
சோர்ந்திட

பால்போல் நிலவில்
பதிந்ததே பார்வையும்
கால்கள் இரண்டும்
கயத்தினை நாடிக்


கரையில் அமரக் கற்பனை
மின்ன உரைத்ததே வானும்
உணர்வை எழுதென

அன்றில் தொடங்கியே
இன்று வரையிலும்
என்றும் எழுதிட
ஏல்



**சிவ. சே. முத்து விநாயகம்**
திருநெல்வேலி

ஏக்கங்களாலே தாபங்களாலே
எந்தன் பார்வை நீளாது
வண்ணங்களாலே வடிவங்களாலே
எந்தன் பார்வை காணாது
நினைவுகளாலே கனவுகளாலே
எந்தன் பார்வை செல்லாது
செய்கைகளாலே செயல்களாலே
எந்தன் பார்வை கோர்த்ததே(நீர்)



பெண்ணின் வடிவம் கொண்டதாலே
பெண்மை சிறுமை கொள்ளுமோ
போகப்பொருளாய் போகப்பொருளாய்
காண்பது என்பது நியாயமோ
உள்ளம் கொள்ளும் ஆசைகள் யாவும்
உணர்ந்து கொள்ள வேணாமோ
அள்ளும் ஆசைகள் அலைக்கின்ற போழ்து
அமைதி கொண்டு அடங்காதோ

பயத்தைக் கண்கள் உமிழ்கின்ற போழ்தில்
பாரதி நினைவு மறக்குமோ
கோபக் கனலை உமிழ்கின்ற போழ்தில்
சக்தி பிறக்கத் தயங்குமோ
ஆசைப் படுகின்ற யாவையும் கையில்
எளிதாய் கிடைக்க ஏக்கமோ
தெளிவாய்ப் போன அறிவும் மனதில்
துணிவு கொடுக்க வேண்டாமோ

அடுத்தவர் படுகின்ற துன்பங்க ளெல்லாம்
தானே தேடும் தாபங்கள்
வெறுத்திடு வெறுத்திடு கீழ்மைகள் யாவும்
வெற்றி தந்திடும் துயரங்கள்
இன்பங் களாலும் துன்பங் களாலும்
எந்தன் பார்வை ஏங்காது
எண்ணங் களாலும் ஏற்றங் களாலும்
எந்தன் பார்வை ஏங்குமே...

**KBANUMATHINACHIAR**
SIVAGIRI



பகலவன் வரவுக்கு பயந்தேதான்
பனிப்போர்வையில் மறைந்தாயோ
மரமே நீ!

பொழுது விடியும் வரை
போர்த்திக் கொண்டிரு
பொருமையாய் காத்திரு

ஆதவன் வந்ததும் மெல்ல
மெல்ல உன் மேல் வீழ்ந்ததும்
வெண்போர்வைகள் வெட்கத்தில்
உருகி வழிந்தோடி விடும்

பச்சை பசேலென பளிச்சென தெரியும் நீ
புதுப்பொலிவு பெறுவாய் நகர முடியாத நீ நடுப்பகலிலும்
நகரத்தார்க்கு நிழலாவாய்

ஸ்டார்ச் தயாரித்து ஸ்ட்ராங்காவாய் சிலிர்க்க வைக்கிறாய்
இடம் பெயராமலேயே இன்முகம் காட்டும் உன்னை
நேசிக்கிறேன்

இயற்கை கொடுத்த வரம் நீ
தென்றல் காற்றும் காயும் கனியும் தரும் மரம் நீ விரகாய்
சமைந்து சமைக்க செய்வாய்

உன்னை வணங்குகிறேன் உன்மேல் விழுந்த பனித்துளி உன்
வேர் நனைக்கட்டும். உன் உயரம் வான் தொடட்டும்.

**வி.பிரபாவதி**, மடிப்பாக்கம்

## குடை

அதர்மம் அதிகரித்தால்
உலகில் மறுபடிஅவரிப்பதாய்
வாக்குரைத்தகண்ணா
நீ உறங்கிவிட்டாயா..

விழித்துப்பார்
கனவினை கலைத்துப்பார்..

இங்கே தர்மம் மண்மூடி
அதர்மம் வேரோடி
ஆலகால விசமாய்
அகிலமெங்கும் பரவி..
மனித சமுதாயே
மண்ணோடு மண்ணாய்
புதைவதை நீ அறிவாயா..

தீவிரவாதம் பிரசவிக்கும்
மதவாத மாக்களால்
உலகம் நிர்மூலம் ஆவதை
உணர்வாயா..

முள்கீரீடம் சூடி
ஆணி அறைந்து
உன்னையும் இவர்கள்
சிலுவையேற்றிவிடுவார்கள்..

ஆகவே..

மறவாமல் கொண்டு வா
போரெனும் குடை..!

**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்

## என் வீட்டு முற்றம்

கட்டில் இருந்தும் மெத்தை
இருந்தும்

இயற்கை காற்றைதேகம்
சுவாசிக்க விரும்பியது,

முற்றத்தில் படுக்க
இயற்கை மின்விசிறி வீசாது
போனது,,

இருக்கின்ற கொசுக்கள்
பாசத்தில் கடித்து
தொல்லைசெய்தது,

சிந்திக்கத் தோன்றியது
தெருமுனைகளில் படுத்து
உறங்குபவர்களின் நிலைமை

காட்டில் ஆடு அடைகின்ற
கூரைகூடை வீடாக்கி

மின்சாரம் இல்லாது
மண்ணெண்ணெய்
விளக்கை ஒளியாக்கி

மண்புழுதியை முற்றமாக்கி
இரவைக் கழிக்கின்ற
ஆட்டிடையர்களையும்,

இருக்க வீடு அற்ற சொந்த
நிலமற்ற
நாடோடிகளை
நடுரோட்டின் பக்கவாட்டில்
படுத்துறங்கும் சில
மனிதர்களைஎண்ண

நெஞ்சத்தில் ஓர் சலனத்தை
ஏற்படுத்தியது,,

தெருக்களையே வீடாகக்
கொண்டவர்களுக்காக
இயற்கை மின்விசிறியே
வீசுவதை நிறுத்தி விடாதே,,,

கொசுக்கள் அவர்கள்
தேகத்தோடு பேசிக்
கொண்டிருக்கும், பொழுது,,
அவர் விழிகள் மூடாது,,

இயற்கை மின்விசிறியே
பகலில் கூட நீ வீச
மறுத்தாலும் இரவில் வீச
மறுத்து விடாதே

எண்ணற்றவர்கள்
உறக்கமிழந்து இரவை
கழிக்க நேரிடும்,,

இயற்கையே உன்னை
பழிக்க நேரிடும்,

**மாணிக்கம்**

# வாசகர் கடிதம்

முகில் தினகரன் எழுதிய "வந்தாண்டா பால்காரன்" யாரையும் குறைத்து மதிப்பிடக்கூடாது என உணர்த்தியது.

ஹறிணி எழுதிய "நாணயம் செல்லும்" தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்த பின் தன்னெஞ்சே தன்னைச் சுடும் என்ற திருக்குறளை நினைவூட்டியது.



-ஸ்ரீகாந்த்
திருச்சி

பஹல்காம் தாக்குதலுக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று பாகிஸ்தான் கூறுகிறது. இது நம்பும்படியாக இல்லை. முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் இருக்கிறது.

நாங்கள் எந்த காலத்திலும் தீவிரவாதத்தை ஆதரிக்கவில்லை என்று வேறு பொய் சொல்கிறது. பாகிஸ்தான் அரசின் ஐ எஸ் ஐ அமைப்பால் ஆதரவு அளிக்கப்பட்டு வரும் ஒரு தீவிரவாத இயக்கம் இந்த சம்பவத்திற்கு பொறுப்பேற்று இருக்கிறது என்பதை பாகிஸ்தான் அரசு மறந்துவிட்டது.

காலம் காலமாக தீவிரவாத குழுக்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை தாக்குதல் நடத்த ஊக்குவித்து இந்திய எல்லைக்குள் ஊடுருவ செய்து வருவது பாகிஸ்தான் என்பது உலகறிந்த விஷயம்.

ஆறு மணி நேரத்தில் காஷ்மீரில் இருந்து 3337 பேர் விமானத்தின் மூலம் வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். இனி காஷ்மீரின் சுற்றுலா பொருளாதாரம் அதோகதியாகிவிடும். படகு வீடுகள் ஆளின்றி மிதக்கும்.
குதிரைகளுக்கு உணவளிக்க கூட வருமானம் கிடைக்காத நிலை ஏற்படலாம். உடலாலும் வாழ்க்கையாலும் இந்தியனாகவும் உள்ளத்தால் அடுத்த நாட்டிற்கு ஆதரவாளராகவும் விளங்குபவர்கள் இதை உணர வேண்டும்.

டிரம்ப் நிர்வாகத்தில் இருந்து எலான் மஸ்க் வெளியேறுவதாக கூறியிருக்கிறார். அரசின் ஒரு அங்கமாக அவர் இருப்பதால் அவரது நிறுவன பங்குகள் சரிவை சந்தித்து வருவதை தடுப்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை.

இதிலிருந்து ட்ரம்பின் அதிரடி நடவடிக்கைகளுக்கு அமெரிக்க மக்களிடம் எவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது என்பதை உணர முடிகிறது,

ட்ரம்பின் அதிரடி நடவடிக்கைகளை அவரும் அவரது குடும்பத்தினரும் வேண்டுமானால் விரும்பி ரசிக்கலாம். உலகமே அவரது திட்டங்களை அருவெறுப்புடன் பார்க்கிறது.

சிவகங்கை மாவட்டத்தில் ஒரு பள்ளியில் மாணவியை ஒருநாள் 200 தோப்பு கரணமும் மறுநாள் நான் 400 தோப்புக்கரணமும் போட செய்த ஆசிரியைக்கு மனித உரிமை ஆணையம் 2 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து இருக்கிறது. அபராத தொகையை மாணவிக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது.


சிறிது கூட இரக்கமோ மனிதாபிமானமோ கருணையோ இல்லாத இந்த ஆசிரியை மனித உருவில் உலவும் மிருகமாகவே கருதப்படுவார்.



-வெ.ஆசைத்தம்பி
தஞ்சாவூர்




தமிழ்நாடு இ பேப்பர்க்கு தலை வணக்கம் பயங்கரவாத தாக்குதலுக்கு அனைத்து கட்சிகளும் ஒரு மனதாக கண்டனம். பஹல்காம் பயங்கரவாதிகள் கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு தண்டிக்கப்படுவார்கள். ஒவ்வொரு பயங்கரவாதியையும் அவர்கள் ஆதரிப்பவர்களையும் இந்தியா அடையாளம் கண்டு கண்காணித்து தண்டிக்கும் என்று நான் முழு உலகிற்கு கூறுகிறேன். இந்த சம்பவத்தால் முழு நாடும் கோபமாக உள்ளது. அனைத்து ஊர்களிலும் காஷ்மீரில் உயிர் இழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. பாகிஸ்தானில் ஏவுகணை சோதனை எல்லையில் போர் பதற்றம். மின்சாரம் துண்டிக்கப்பட்ட விபரம் நுகர்வோருக்கு தெரிவிக்க உத்தரவு. சிறுகதை அருமை வந்தாண்டா பால்காரன் முகில் தினகரன் சார் கதை சூப்பர் சார். நாணயம் பதில் சொல்லும்' அருமையான கதை ஹரணி சார் அருமை கதை திருப்பதி கோவிலுக்கு மதிய உத்தர அமைச்சகம் எச்சரிக்கை மலை அடிவாரத்தில் தீவிர சோதனை. சிந்துநதி நீர் ஒப்பந்தம் முறிப்பு பாகிஸ்தானுக்கு வலிக்கும் இடத்தில் இருக்கிறது இந்தியா. சரியான செயல். பஹல்காம் தாக்குதல் எதிரொலி ஜம்மு காஷ்மீரில் 1500 மேற்பட்டோர் கைது. ஜனாதிபதியின் அசாம் பயணம் ரத்து. எந்த நேரமும் இந்தியா தாக்குதல் நடத்தும் வாய்ப்பு அச்சத்தில் பாகிஸ்தான். பயத்திலே இருக்க வேண்டும். எல்லையோர கிராமங்களையும் காலி செய்துள்ளது ராணுவத்தையும் ஐஎஸ்ஐயையும் உஷார் நிலையில் வைத்திருக்கிறது. இன்று பிறந்தநாள், திருமண நாள் காணும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் வாழ்க வளமுடன் உள்ளூர் செய்திகள் முதல் உலகச் செய்திகள் வரை தினமும் எங்களுக்கு தெள்ளத் தெளிவாக கொடுக்கும் எண்ணற்ற செய்திகளை கொடுக்கும் தமிழ்நாடு இ பேப்பர் ஆசிரியர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள் தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர்



-நிர்மலா ஸ்ரீதரன்
திருவண்ணாமலை

25.04.2025 'தமிழ்நாடு இ பேப்பர். காம்' வழக்கம் போல் அனைத்துச் செய்திகளையும் தாங்கிய நாளிதழாக வெளிவந்திருக்கிறது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு அனைத்து கட்சிகளும் ஒருமனதாக கண்டனம் தெரிவித்திருப்பது பாகிஸ்தானுக்கு விடுக்கும் எச்சரிக்கை.

பஹல்காம் பயங்கரவாதிகள் கற்பனைக்கும் எட்டாத வகையில் தண்டிக்கப்படுவர் என்று பிரதமர் கூறியிருப்பது இனிமேல் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு மரண அடியாக இருக்கும்.

பஹல்காம் பயங்கரவாத இறுக்கமான சூழலில் பாகிஸ்தான் ஏவுகணை சோதனை நடத்தி இருப்பது வன்மத்தின் உச்சம். இன்னும் திருந்தாத பாகிஸ்தானை ஐநா கண்டிக்க வேண்டும்.

வார விடுமுறை பற்றி தெரியாது. என்று போலீஸ்காரர் நீதி மன்றத்தில் சொல்லி இருப்பதிலேயே தெரிந்து விடுகிறது அதன் உண்மைத்தன்மை. கொஞ்சம் கூடுதலாக போலீஸ் நியமனம் செய்து சுழற்சி முறையில் வாரவிடுமுறை வழங்க வேண்டும்.


அமர்நீதி நாயனார் வரலாறு, சாஸ்தாவின் முக்கிய எட்டு அவதாரங்கள் கட்டுரைகள் ஆன்மீக அன்பர்களுக்கு வரப்பிரசாதம்.

தினம் ஒரு தலைவர்கள் வரிசையில் ம. சிங்கார வேலர் வரலாறு அன்னாரை பெருமைப்படுத்தும் விதமாக இருந்தது.

தெய்வீக அருள் தரும் ஆன்மீகக் கட்டுரைகள் அனைத்தும் சிறப்பு



-ப. தாணப்பன்
திருநெல்வேலி




வணக்கம். தமிழ்நாடு இ பேப்பர். காம் 25.4.25 அன்றைய நாளிதழின் முதல் பக்கத்தில் வந்த அரசியல் செய்திகளை படித்தவுடன் நம்ம இந்திய அரசியலை நன்றாக புரிந்து கொள்ள முடிந்தது இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புதமான வெள்ளிக்கிழமையை எனக்கு படம் பிடித்து காட்டியது.

எத்தனை முறை படித்தாலும் அலுக்காத திருக்குறளின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குறளும் பொருளும் உற்சாகமுடன் படிக்க வைக்கிறது .யானை வாகனத்தில் ஸ்ரீ நம் பெருமாள் சித்திரை வீதியில் வலம் வந்த காட்சி மிகவும் அருமை கண் கொள்ளாக் காட்சியாக பார்த்து மகிழ்ந்தேன்.

எரியுலையால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பா என்பதனை ஆய்வு செய்வதற்காக ஹைதராபாத் செல்வதை பற்றி படித்து தெரிந்து கொண்டேன். கும்பகோணத்தில் கலைஞர் பெரியார் பல்கலைக்கழகம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவிப்பு என்ற செய்தி மகிழ்ச்சியாக இருந்தது நலம் தரும் மருத்துவம் பகுதியில் ஆண்களுக்கு ஏற்படும் தைராய்டு கட்டி புற்று நோயாக மாறலாம் என்ற செய்தி அதிர்ச்சியாக இருந்தது. அதற்கு நாம் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று அறிவுரை சொன்னது பாராட்டுக்குரியது.

பாகிஸ்தானில் ஏவுகணை சோதனை என்று எல்லையில் போர் பதற்றம் பற்றிய செய்தி அதிர்ச்சியாக இருந்தது. வார முடி விடுமுறை பற்றி தெரியாது என்று நீதிபதி கேள்விக்கு போலீஸ்காரர் சொன்ன பதில் அதிசயமாக இருந்தது. மின்சாரம் துண்டிக்கப்பட்ட விவரம் நுகர்வோருக்கு தெரிவிக்க உத்தரவு மிகவும் நல்ல செய்தி.

இன்றைய தலைவர்கள் பகுதியில் . சிங்காரவேலர் பற்றிய வரலாறு மிகவும் அற்புதம். புதுமையான தலைவர்களை பற்றி தினம் தினம் அறிந்து கொள்ளும் நல்ல ஒரு வாய்ப்பினை கொடுக்கும் தமிழ்நாடு இ பேப்பருக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

பல்சுவை களஞ்சியம் பகுதி அலுக்கவே அலுகாமல் ஆர்வமுடன் படிக்க வைக்கும் மீம்ஸீம் விடுகதையும் ஜோக்ஸூம் அதனுடைய தனி வெளிப்பாடு.

தெய்வீக அருள் தரும் ஆன்மீகம் என்ற பக்கத்தில் வந்த மூன்று தத்துவங்கள் நான்கு வரிகள் மிகவும் அற்புதமான தகவல். அட்சய திருதியை அன்று பச்சரிசி வாங்குவது நல்லது என்று மிக எளிமையாக அட்சய திருதியை கொண்டாட உதவியதற்கு மிகவும் நன்றி .

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களின் வரிவிதிப்பு கொள்கைக்கு எதிராக 12 மாகாணங்கள் வழக்கு என்ற செய்தி அமெரிக்காவை கண் முன்னே கொண்டு வந்து காட்டியது. திருப்பதி கோவிலுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் எச்சரிக்கை மலை அடிவாரத்தில் தீவிர சோதனை என்று திருப்பதியில் நடக்கும் செய்தியை மிக அழகாக சொன்னது மகிழ்ச்சியாக படிக்க வைத்தது.

பேருந்துகளில் 360 டிகிரி கோணத்தில் இயங்கும் கேமராக்கள் என்று அமைச்சர் சிவசங்கர் அவர்களின் அறிவிப்பு பற்றி படித்ததும் இது நல்ல பயனுள்ள தகவல். காஷ்மீரை விட்டு 6 மணி நேரத்தில் 3337 பேர் விமானம் மூலம் வெளியேறிய செய்தி காஷ்மீரில் நடக்கும் அத்தனை தகவல்களையும் கண் முன்னே காட்டியது.

விளையாட்டு செய்திகள் மிகவும் அருமை கிரிக்கெட் பற்றிய செய்தி மிகவும் நல்ல தகவலாக ஆர்வமுடன் விளையாட்டு செய்தியை படிக்க வைத்தது.

.சமரசம் பேசுவோம் ஆனால் சரணடைய மாட்டோம் என்ற உக்கிரன் திட்டவட்டமாக சொன்ன செய்தி அதிர்ச்சியாக இருந்தது. போப் பிரான்சிஸ் உடலுக்கு பொதுமக்கள் இறுதி அஞ்சலி என்று படத்துடன் பார்த்தவுடன் நானும் அவருக்கு என்னுடைய இறுதி அஞ்சலியை செலுத்தினேன். அழகான செய்திகளை அச்சேற்றி எங்களை ஒரு புளாங்கித நிலைக்கு செல்ல வைக்கும் தமிழ்நாடு இ பேப்பரின் தலையாயப் பணியை தலை வணங்குகிறேன். உங்களுடைய பணி இதுபோல் என்றென்றும் சிறக்க இறைவனை பிரார்த்திக்கிறேன்.



-உஷா முத்துராமன்

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாக கண்டனம்#பாராளுமன்ற இணைப்பு வளாகத்தில் மைய அரசு கூட்டிய கூட்டத்தில் தீர்மானம்
பயங்கரவாதிகள் கற்பனைக்கெட்டாத அளவில் தண்டிக்கப்படுவர்#பிரதமர் மோடி
கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக் கழகம்#முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு=எல்லாவற்றிற்கும் ஒரே பெயரா?
பாகிஸ்தானில் ஏவுகணை சோதனை#எல்லையில் போர் பதற்றம்
2026 சட்டப் பேரவைத் தேர்தலுக்கு எம் எல் ஏக்களுக்கு விருந்தளித்த பழனிச்சாமி
இரண்டு சிறுகதைகளும் யதார்த்த காட்சியைப் பிட்டு வைத்தன
புத்தக விமர்சனம் அருமை
புதுக் கவிதைகள் வெகு ஜோர்
வாசகர் கடிதங்கள் சிறப்பு
டிரம்ப் வரி விதிப்பு கொள்கைக்கு எதிராக 12 மாகாணங்கள் எதிர்ப்பு
மாணவியைத் தோப்புக் கரணம் போட வைத்த ஆசிரியை#இரண்டு லட்சம் இழப்பீடு வழங்க மாநில மனித உரிமை ஆணையம் உத்தரவு
வணிக வரி வசூல் 1.38 லட்சம் கோடியாக அதிகரிப்பு
அமெரிக்க சுற்றுப் பயணத்தை பாதியில் ரத்து செய்து இந்தியா திரும்பினார் ராகுல் காந்தி#இன்று நடைபெற உள்ள முக்கிய ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க முடிவு
கடலூரில் 40 லட்சம் ஹவாலா பணம் பறிமுதல்
உபி: புது மனைவியைத் தவிக்க விட்டு, மூன்று குழந்தைகளுக்குத் தாயான பெண் போலீசுடன் வாலிபர் ஓட்டம்

திமுக அரசிடமிருந்து மக்களுக்கு விடிவு காலம் பிறக்கும்#சசிகலா

ஐபிஎல் புள்ளிப் பட்டியலில் மூன்றாமிடத்திற்கு முன்னேறிய மும்பை இந்தியன்ஸ்#கள நடுவர் இஷான் கிஷனுக்கு அவுட் கொடுத்த விவகாரம் வைரல்

மோடி, அமீத் ஷாவுக்கு ஓய்வளிக்க வேண்டும்#சுப்பிரமணியன் சாமி யோசனை

ட்ரம்ப் நிர்வாகத்திலிருந்து எலான் மஸ்க் விலகல்

ஏப்ரல் 24 ஸ்ரீசத்யபாபா நினைவு தினம்#நியூயார்க் பிரகடனம்



-பி.திலகவதி
சென்னை

# வாசகர் கடிதம்

முகில் தினகரனின் 'வந்தாண்டா பால்காரன்', ஹரணியின் 'நாணயம் செல்லும்' ஆகிய இரண்டு சிறுகதைகளையும் படித்தேன். இந்த சிறுகதைகளை எழுதிய முகில் தினகரன், ஹரணி இருவருமே பிரபலமான எழுத்தாளர்கள். நாவல்கள், கவிதைகள் என்று பல புத்தகங்களை எழுதியவர்கள். அதனால்தான் அவர்களது இந்த சிறுகதைகளில் ஒரு நயமான அழகும், உயிரோட்டமான ஒரு உணர்வும் ஏற்பட்டு அற்புதமென்று சொல்ல வைக்கிறது.

ஆன்மிக களஞ்சியத்தில் அமர்நீதி நாயனாரின் வரலாற்றை சிவ.முத்து லட்சுமணன் சுவாரஷ்யமாக எழுதியிருந்தார். கோவணக் கள்வராக வந்த சிவபெருமானின் முன்பு தராசில் தன் மனைவி, மகனுடன் ஏறி தன்னையே அவருக்கு அர்ப்பணித்து, அத்தட்டே விமானமாகச் செல்ல, சிவபதம் பெற்ற பெருமைக்குரியவர் அமர்நீதி நாயனார் என்பதை படிக்கும்போது ஒரு ஆன்மிக அற்புதத்தை உணர முடிகிறது.

எம்.அசோக்ராஜா சாஸ்தாவின் முக்கிய எட்டு அவதாரங்களையும் விளக்கி, ஒவ்வொரு அவதாரமும் எந்த ஒரு நோக்கத்திற்காக எடுக்கப்பட்டது என்பதை விளக்கமாக எழுதியிருந்தது சிறப்பாக இருந்தது. எனக்கு முதலில் சாஸ்தாவில் இத்தனை அவதாரங்கள் இருப்பதே தெரியாது. பல புதிய ஆன்மிக தகவல்களை தருவதில் தமிழ்நாடு இ.பேப்பருக்கு ஒரு தனியிடம் உண்டு.

தினம் ஒரு தகவல்கள் வரிசையில் ம. சிங்காரவேலரைப் பற்றி படித்து வியந்துப் போனேன். அவருக்கு ஆங்கிலம், தமிழ் மொழிகளை தவிர, இந்தி, உருது, பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளும் தெரியும் என்பதும், அவர் 20,000 நூல்களுக்கும் மேல் சேகரித்து வைத்திருந்தார் என்பதும், ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்வைத் தொடர்ந்து காந்தி ஒத்துழையாமை போராட்டத்திற்கு அனைத்து வழக்குரைஞர்களுக்கும் அழைப்பு விடுவித்தபோது, இவர் தனது வழக்குரைஞர் ஆடையை எரித்ததுடன், "இனி எப்போதும் வக்கீல் தொழில் பார்க்க மாட்டேன். என் மக்களுக்காகப் பாடுபடுவேன்" என்றதும், இவர் எவ்வளவு சிறந்த உயர்ந்த மனிதர் என்பதை உணரவைத்தது.

கிட்டத்திட்ட நாற்பது புதுக்கவிதைகள். எல்லாமே விதம் விதமான மலர்கள் போல வித்தியாசம் வித்தியாசமாக ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் மனதைக் கவருகின்றன. தமிழ்நாடு இ.பேப்பரில் ஒரு முக்கியமான பகுதியாக இந்த இந்த புதுக்கவிதை பகுதிகள் விளங்குகிறது.

'தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்' சிறப்பாகவும் மனதிற்கு ஒரு அமைதியை தருவதாகவும் இருக்கிறது. தமிழ்நாடு இ.பேப்பரை படித்து முடிக்கும்போது அடுத்த இதழை எதிர்பார்த்து மனம் ஏங்க ஆரம்பித்து விடுகிறது. இதுதான் நமது பத்திரிகையின் மிகப்பெரிய சிறப்பாகும்.



-சின்னஞ்சிறுகோபு, சிகாகோ

---

பயங்கரவாதத்துக்கு அனைத்து கட்சிகளும் கண்டனம் இதிலாவது ஒற்றுமையுடன் இருக்கிறார்களே அதுவரையில் சந்தோஷம். பாகிஸ்தானுக்கு செல்லும் சிந்து நதியை இந்தியா நிறுத்திவிட்டது இதனால் பாகிஸ்தானில் உள்ளவர்கள் குடிநீருக்கு கஷ்டப்படுவார்களா. பெல்காம் தீவிரவாதிகள் பயங்கரமாக தண்டிக்கப்படுவார்கள் மோடி அறிவிப்பு எப்படி சவுதி அரேபியா இந்த மாதிரி தண்டனை அளிக்கப்படுமா பாகிஸ்தான் எல்லையில் ஏவுகணை சோதனை நடத்தியது. வேண்டுமென்றே செய்யக்கூடிய செயலாகும். கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் கவர்னர் ஒப்புதல் கிடைக்குமா. ஆன்மீகம் கோவில்கள் பயணங்கள் என்ன பலவிதமான கட்டுரைகள் வெளியிட்டு அசத்துகிறீர்கள். தமிழக அரசுக்கு விரைவில் விடிவு காலம் பிறக்கும். சசிகலா நம்பிக்கை. முதலில் சசிகலாவுக்கு விடிவு காலம் பிறக்குமா. சமரசுக்கு தயார் ஆனால் சரண் அடைய மாட்டோம் என உக்ரைன் அறிவிப்பு. புதுக்கவிதைகள் கட்டுரைகள் ஆன்மீக செய்திகள் சிறுவர் மலர் பெண்கள் மலர் சினிமா செய்திகள் பல வகையிலும் ஜொலிக்கிறது தமிழ்நாடு இ பேப்பர் வாழ்த்துக்கள் சார்



-நடேஷ் கன்னா கல்லிடைக்குறிச்சி

ஆட்கள் தேவை
அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள முன்னணித் தொழிற்சாலைகளில் பணிபுரிய உடனடியாகத் தேவை
வயது வரம்பு : 18 to 30
கல்வித்தகுதி :
8th Pass, 10th (Pass/Fail), +2 (Pass/Fail), ITI (Pass/Fail), Diploma (Pass/Fail), Degree (Pass/Fail)
PF & ESI வசதிகளுடன் நல்ல சம்பளம் கிடைக்கும்
Cell : 94456 45748 / 87544 53946

❖ எலக்ட்ரிசியன் (Minimum 10 years Exp.) (லைசென்ஸ் வைத்திருப்பவர்கள் மட்டும்)
❖ பாதுகாவலர்கள்
❖ ஹவுஸ் கீப்பிங்
❖ வெயிட்டர்
❖ சப்ளையர் தேவை.
Call : 99413 87332
Send your Resume Mail to : towersclub@gmail.com
@ Anna Nagar, Chennai - 40

சென்னை வண்டலூர் அருகில் உள்ள பிரபல அசைவ உணவகத்திற்கு ஆட்கள் தேவை
• புரோட்டா /கல் மாஸ்டர்
• சவுத் இந்தியன் மாஸ்டர் (Non - Veg)
• கிச்சன் அசிஸ்டண்ட்
• கேப்டன்
• வெயிட்டர்
நல்ல சம்பளம், தங்குமிடம்
அக்ஷயா அவின்யூ, படப்பை
79040 95587 / 98416 18175

Laboratory Instructor (Electrical) Purely on Contract basis
REQUIRED at
Central Institute of Petrochemicals Engineering & Technology (CIPET)
Ministry of Chemicals & Fertilizers, Govt of India, Thiruvathavur, Madurai - 625110
Minimum Qualification :
Full Time First Class ITI / Diploma in Electricals & Electronics with a valid "B" Certificate holder with minimum 1 year experience in the relevant field.
Interested candidate submit bio data with latest photo, along with copy of relevant certificates to mail to :
manoj.praba@gmail.com
For further details Contact :
94447 96334
RKS Placements

QC SHIFT INCHARGE With CMM Knowledge
VMC PROGRAMMER With Master Cam Knowledge
CNC OPERATOR Min. 6 Month Experience
Company Located in AMBATTUR, CHENNAI - 98.
Call : 98840 52204

WANTED FEMALE PERSONAL SECRETARY
Qual: 10th - 12th
Age : 25 below
Salary: Rs.20,000 to 25,000
SRJ #139, Arcot Road, Kodambakkam, Chennai-24.
Ct: 814 814 88 55

தி.நகரில் உள்ள பிரபல ஹோட்டலுக்கு
• NORTH INDIAN COOK
• SOUTH INDIAN COOK
• CHINESE MASTER
• MAINTAINANCE INCHARGE
• FRONT DESK OFFICER (Night Shift)
Send CV to pmg22@hotmail.com
Walk-in Interview Call
99629 91234 / 99623 44567







WANTED
FEMALE ACCOUNTING STAFF
(TALLY) EXP. FRESHER
GOOD SALARY
ABHIMANYU GARDEN HOUSING INDIA PRIVATE LTD.,
10/5 2nd FLOOR, 50th STREET, ASHOK NAGAR, CHENNAI 600083
93400 48887
044 - 24718737

குருக்கள் தேவை
அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்மன் உடனுறை ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் ஆலயம்
ராஜாங்குப்பம், வானகரம் வழி, சென்னை-95.
(அப்பல்லோ மருத்துவமனை அருகில்)
ஆலயத்திற்கு நல்ல அனுபவமுள்ள ஆகம விதிகளின் படி அனைத்து பூஜைகளையும் செய்யக் கூடிய நடுத்தர வயதுடைய குருக்கள்
கிரகஸ்தர்களுக்கு தங்க வீடு வழங்கப்படும்
9381006488 / 9382884673

ஆட்கள் தேவை
CALL CENTER-ல் வேலை செய்ய முன் அனுபவமுள்ள ஆட்கள் தேவை.
RRS INFOTECH
Cell. 9443814410, 9360010801 / 8778462099

WANTED
Sr. Sales Executive
Qualification: DME / BE / Graduate
DELIVERY BOY
Qualification: ITI / DME
Location: Chennai
Experience in selling Welding Items, Lubrication & Oils to Industries
Freshers also apply
Whatsapp resume: 8925813242

டிரைவர் தேவை
Chairmanக்கு Automatic கார் ஓட்ட அனுபவமுள்ள கார் டிரைவர் தேவை
99522 61873


S.A. ENGINEERING COLLEGE
WANTED
• LADIES HOSTEL WARDEN
• ELECTRICIAN
Ht Line with C Certificate
WALK-IN @ Poonamallee - Avadi Road
Veeraraghavapuram, Thiruverkadu, Chennai - 600 077
Apply: hrd@saec.ac.in
Ph: 90030 94498

WANTED
43 years Pharma Company
❖ ACCOUNTANT
❖ CLERK
For Kodambakkam, Chennai
Mail id: drgrpharma@gmail.com
93616 42440

## 2BHK FLAT FOR SALE
Peravallur - Papermills Road
PREMIUM - READY TO OCCUPY
PRIME LOCATION
2nd Floor, West Facing
875 Sq.ft (450 UDS)
Big Covered Car Parking
CALL: 7397322399

## மனை விற்பனை
புழல் - காலிமனை
சென்னை மாநகராட்சி
எல்லைக்குட்பட்ட செயின்ட் ஜோசப் நகர் (70x30) 2115 சதுர அடி, அனைத்து ஆவணங்கள், ஒப்புதல்கள் உள்ளன
சதுர அடி 3100 மட்டும்
9710963998

## MRM GARDENS
நேமம் (ஜமீன் கொரட்டூர்)
5 Acres Vacant Land Available for Rent
7 Km from Poonamallee, 4km from Thirumazhisai Sivan Temple, on the Thiruvallur Highway
9381006488 / 9382884673

## SNR MAHALL

PADAPPAI
- CAPACITY 750-1250
- DINING HALL-50
- CENTRALIZED A/C
- AMPLE CAR PARKING

97097 07848
044-27174767
www.snrmahall.in

## ரெட்ஹில்ஸ் அருகில்
சலுகை விலையில்
400 அடி OUTER RING ROAD மிக அருகில்
ஆங்காடு
சென்னை - 600 067.
CMDA APPROVED
வீட்டு மனைகள் விற்பனைக்கு உள்ளது
1 சதுரடி ரூ.1799 முதல்
775 சதுரடி முதல் 2940 சதுரடி வரை
தொடர்புக்கு
63834 24557 / 99400 91519
73387 99694

## 11,500 SQFT FOR RENT
@ CHROMPET
No:4 Kannayiram Street, Nagalkeni
Suitable for Company & Warehouse
91766-55563

## நிலம் விற்பனைக்கு (அ) நீண்ட கால ஒப்பந்த வாடகைக்கு
விழுப்புரம் நகரில்
மிக மதிப்புள்ள 200அடி மெயின் சாலையில் நன்கு இயங்கும் 7000சதுர அடி, 3மாடி கட்டிடம், 3000 சதுர அடி தனி வீடு உள்ள 7100சதுர அடி நிலம் விற்பனைக்கு (அ) நீண்ட கால ஒப்பந்த வாடகைக்கு உள்ளது
98430 58586

## "CREST ATENA" @ ANAKAPUTHUR
2 BHK ₹.31.99 Lakhs* Onwards

For Spot Booking
1BHK - 1 Lakh
2BHK - 3 Lakhs
with Free Interiors
Till 16th Mar 2025
visit our site www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
visit our site www.crest.homes
89399 65050

## தமிழ் புத்தாண்டு திருநாளை முன்னிட்டு
CMDA APPROVED
அழகிய வீட்டுமனைகள்
வண்டலூர் - மீஞ்சூர் ORR அருகில்
அனைத்து வசதிகளுடன்
ஸ்ரீ நரசிம்மா நகர்
Near Tidel Park
பட்டாபிராம், நெமிலிச்சேரி, திருநின்றவூர்
(ரயில் நிலையம் அருகில்)
Ct: 8248401466 / 9488856961

## அரக்கோணம் அருகில்
மிக குறைந்த விலையில் அங்கீகாரம் பெற்ற வீட்டுமனைகள்
DTCP மனை சதுர அடி ரூ. 225
திருவாலங்காடு அருகில்
DTCP மனை சதுர அடி ரூ. 275
1 வாரத்தில் முன்பதிவு செய்பவர்களுக்கு பத்திரபதிவு இலவசம்
என்.கே. ரியல் எஸ்டேட்
8056253815 / 7299424193

## கிளாம்பாக்கம்
மதுரை மீனாட்சிபுரம்
New Bus Stand Back Side
Plot No 384,
2450sqft DTCP Approved
On 60 Ft Road
9500075711

## TOLET
2300 SQ.FT & 1400 SQ.FT
BUILDING
Suitable for Office / Hotel / Storage Space / Coffee Shop at Pandur Village,
Opp. to Indira Medical College - T.T National Highways,
TIRUVALLUR.
Ct: 94444 50851

## மனை விற்பனைக்கு
மடிப்பாக்கம்
விவேகானந்தா தெரு
வேளச்சேரி MRTS
5 நிமிட நடை
2400 சது. அடி
40/60 மனை
விற்பனைக்கு
Whatsapp/SMS
9443321228

## வேப்பம்பட்டு
தனி வீடு ரூ.22 லட்சம் முதல்
DTCP வீட்டு மனைகள்
ச.அடி ரூ.999/- மட்டும்
மணவூர் சதுர அடி ரூ.499/-
DTCP வீட்டு மனைகள்
9941166491 / 9940296711

## BS CONSTRUCTIONS
INDEPENDENT HOUSE 6 BHK FOR SALE

LAND AREA 1458 SQ.FT
BUILD UP AREA 3000 SQ.FT
Ready to Occupy
2.50 CR Only
Land Mark:
Kolathur, DRJ Hospital (Backside).
8838255381


அரக்கோணம் அருகில்
மிக குறைந்த விலையில் அங்கீகாரம் பெற்ற வீட்டுமனைகள்
DTCP மனை சதுர அடி ரூ. 225
திருவாலங்காடு அருகில்
DTCP மனை சதுர அடி ரூ. 275
1 வாரத்தில் முன்பதிவு செய்பவர்களுக்கு பத்திரபதிவு இலவசம்
என்.கே. ரியல் எஸ்டேட்
8056253815 / 7299424193


## அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள் விற்பனைக்கு Near Collector Office
திருவள்ளூர் - திருப்பதி
நெடுஞ்சாலையில் NH 205 ON ROAD
OM SARAVANA NAGAR
வீட்டு மனைகள்


"CREST ATENA" @ ANAKAPUTHUR
2 BHK ₹.31.99 Lakhs* Onwards



For Spot Booking
1BHK - 1 Lakh
2BHK - 3 Lakhs
with Free Interiors
Till 16th Mar 2025
visit our site www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
visit our site www.crest.homes
89399 65050


## OFFICE SPACE FOR RENT
AVADI - POONAMALLEE HIGH ROAD
8000 Sft.
Each Floor 4000 Sft.
Tailor made
1st, 2nd FLOORS
BUILDING WITH LIFT FACILITY
Call : 98844 03145
98713 10022

## போரூர் கெருகம்பாக்கம்
4000 சதுரடி
காலி இடம் வாடகைக்கு உள்ளது
குடோன் | நர்சரி | கடை | கார் சர்வீஸ் ஹோட்டல் வைக்க உகந்தது
98402 19966

## செங்கல்பட்டு
ON GST ROAD
DTCP APPROVED
Gated Community
Luxury Villa plots
2நிமிடத்தில் பஸ் & ரயில் நிலையம்
90% Bank Loan
9790917009

## CMDA PLOTS
தாம்பரம்
அருகே முடிச்சூர்
10 Mins From Tambaram Railway Station
Rs. 15 Lakhs Onwards
85 25 98 98 98


மனை விற்பனைக்கு
மடிப்பாக்கம்
விவேகானந்தா தெரு
வேளச்சேரி MRTS
5 நிமிட நடை
2400 சது. அடி
40/60 மனை
விற்பனைக்கு
Whatsapp/SMS
9443321228


## MEGA OFFER ! P.A.CONSTRUCTION
KORATTUR / AVADI
Ready to Occupy
2BHK with CCP
KODUNGAIYUR
Ready for Fitout
2BHK with CCP & Lift
9342487682 / 7810080911


வேப்பம்பட்டு
தனி வீடு ரூ.22 லட்சம் முதல்
DTCP வீட்டு மனைகள்
ச.அடி ரூ.999/- மட்டும்
மணவூர் சதுர அடி ரூ.499/-
DTCP வீட்டு மனைகள்
9941166491 / 9940296711



அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள் விற்பனைக்கு Near Collector Office
திருவள்ளூர் - திருப்பதி
நெடுஞ்சாலையில் NH 205 ON ROAD
OM SARAVANA NAGAR
வீட்டு மனைகள்

GOKUL PROMOTER
90873 03800



# பல்சுவை களஞ்சியம்




# பாட்டி பேரன் அலப்பறைகள்!

பாட்டி...எனக்கு ஒரு டவுட்டு...(நியாயம்தானே....)
பேரன் : ஏன் பாட்டி கொசு ராத்திரில மட்டும் நிறைய கடிக்கவருது....அது எப்ப பாட்டி தூங்கும்?
பாட்டி : அது தூக்கம் வரும்போது தூங்கும்...
பேரன் : எப்ப தூக்கம் வரும் பாட்டி?
பாட்டி : அது சாப்பிட்டவுடன் தூங்கும்...
பேரன் : கொசுக்கு வீடு எங்க பாட்டி?
பாட்டி : அதுக்கு வீடே இல்லை...
பேரன் : ஏன் பாட்டி அதுக்கு வீடே இல்லை?
பாட்டி : அது ரொம்ப சின்னதா இருக்கு ல அதான் வீடு ... இல்ல...
பேரன்: நான் ரொம்ப சின்ன பிள்ளைதானே எனக்கு வீடு ... இருக்கே .....
பாட்டி : இது உன் அப்பா அம்மா உனக்கு கட்டி தந்தது...
பேரன் : அப்போ கொசுவுக்கு அப்பா அம்மா இல்லையா பாட்டி..
பாட்டி : அந்த அப்பா அம்மா கொசுவும் ரொம்ப சின்னதா இருக்குமா அதான் அதுக்கு வீடு.. இல்ல...
பேரன் : கொசுவுக்கு கொசுன்னு யாரு பாட்டி பேர் வைச்சது?
பாட்டி : உம்மாச்சி (பெருமாள்)...
பேரன்: உம்மாச்சியை கொசு கடிக்குமா பாட்டி ?
பாட்டி : கடிக்காது...
பேரன் : ஏன் பாட்டி.... கடிக்காது?
பாட்டி : கடிச்சா.... உம்மாச்சி தண்டிச்சிடுவார்...
பேரன் : அப்போ உம்மாச்சிக்கு கோவம் வருமா பாட்டி ?
பாட்டி : வரும். தப்பு செய்தா உம்மாச்சி அடிப்பார்...
பேரன் :நாம..எதுக்குமே... கோப பட.. கூடாது தப்புன்னு அன்னைக்கு சொன்னியே...
பாட்டி : சரி..நீ.. தூங்கு...

பேரன் : உம்மாச்சி நல்லவரா பாட்டி?
பாட்டி : ரொம்ப நல்லவர்....
பேரன் : அப்புறம் ஏன் பாட்டி கொசுவை தண்டிக்கிறார் !
பாட்டி : அது அப்படித்தான் நீ தூங்கு...
பேரன் : கொசு ஏன்.... பாட்டி நம்மளைக் கடிக்குது?
பாட்டி : ஆகா... இவன் அம்மாக்கு மேலே கடிக்கிறானே...அதுக்கு பசிக்குது....ல்ல அதுதான் கடிக்குது....
பேரன் : கொசு இட்லி சாப்பிடுமா ? சாம்பார்..சட்னி தொட்டுக்குமா.....?
பாட்டி : அதெல்லாம் அதுக்கு ...பிடிக்காது...
பேரன் : கொசு கூல்ட்ரிங்க்ஸ் குடிக்குமா?
பாட்டி : வாயை மூடிட்டு தூங்குடா ஸ்ரீ...
பேரன் : ஒரே ஒரு கேள்வி பாட்டி?
பாட்டி : கேட்டுத் தொலை...
பேரன்: கொசுவுக்கு எத்தனை பல் இருக்கும்?

பாட்டி : அதுக்கு பல்லே இல்லை...
பேரன்: பிறகு எப்படி கடிக்கும்?
பாட்டி : அய்யோ ஏண்டா உசுர வாங்குற? இப்ப நீ வாய மூடாட்டி பேய்கிட்ட புடிச்சுக் கொடுத்திடுவேன்...
பேரன் : பேயைக் கொசு கடிக்குமா பாட்டி?
பாட்டி : ஸ்ரீ வாயை மூடிண்டு தூங்கு...
பேரன் : நாம தூங்கும் போது வாயும் தூங்குமா பாட்டி..
பாட்டி : அய்யய்யோ ..இவன் தொல்லை தாங்கலையே...அப்புடியே... அம்மா மாதிரி...தான் படவா ...108 கேள்வி...கேக்க வேண்டியது...இப்போ தூங்க போறியா.. இல்லியா...??
பேரன் :பாட்டி..கடைசி ரெண்டு கேள்விக்கு பதில் சொல்லவே இல்லையே...
பாட்டி : சரி..சரி...பேயை... கொசு கடிக்காது....தூங்கு... போ...

பேரன் : ஆனா...கொசு உன்ன கடிக்கறதே பாட்டி...
பாட்டி : ஆமா.. என்னையும்தான் கடிக்கும்...
பேரன் : இப்போ.... பேயை... கொசு கடிக்காதுன்னியே...
முந்தாநாள்...தாத்தா... எதிர்வீட்டு ரங்குடு தாத்தா கிட்டே... பேசிண்டு இருக்கச்சே.... என் தலைஎழுத்து... பொண்டாட்டிங்கர பேர்ல...ஒரு பேயை கட்டி வெச்சுட்டாங்கன்னு சொல்லிக்கிட்டு இருந்தாரே....
பாட்டி :அப்புடியா...சேதி... இந்தோ...வர்றேன்...நீ தூங்கு...எங்கே...அந்த...நீட்டு கரண்டி...
(பத்த வெச்சுட்டியே... பரட்டை.. தேரை...இழுத்து தெருவிலே...விட்டுட்டியே.... இனிமேதான்...அங்கே.. கச்சேரி..
ஆரம்பம்....ஸ்ரீ...நியாயமா... பாத்தா..உனக்கு பேரே.... நாரதர்னு...வெச்சிருக்கனுமோ ...?



# முன்வினை பாவத்தை தீர்க்கும் திருநாகலிங்க பூவின் அற்புதம்!

தமிழ்நாட்டின் சில சிவாலயங்களில் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளில் வளரக்கூடிய அபூர்வமலர் நாகலிங்க பூ. இந்த பூவின் அமைப்பே சிவனை லிங்க வடிவில் நினைவூட்டுகிறது. இது சாதாரண பூ அல்ல சிவபெருமானுக்கு வில்வம் போலவே சிறந்த பவித்திர பூ எனக்கணிக்கப்படுகிறது.
நாகலிங்க பூவை சிவனுக்கு அர்ச்சனை செய்தால் கிடைக்கும் நன்மைகள்:
பூர்வ ஜென்ம பாவங்கள் விலகி, வாழ்க்கையில் திருப்தி ஏற்படும்.
செல்வச் செழிப்பு பெருகி, வீட்டில் சக்தி வாய்ந்த பாசித்தன்மை நிலவும்.

துஷ்ட சக்திகள் விலகும்; வீட்டில் அமைதியும் ஆனந்தமும் நிலைக்கும்.

மன அமைதி, சுவாச கோளாறுகள், நுரையீரல் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும்.
முக்கிய வழிபாட்டு முறைகள்:



நாகலிங்க பூவை புனிதமாக குளித்து, சிவ பஞ்சாட்சர மந்திரம் சொல்லி எடுத்தே சமர்ப்பிக்க வேண்டும்.
காய்ந்த பிறகும் இந்த பூ சக்தி வாய்ந்ததே. எனவே குப்பையில் போடாமல் ஓடும் நீரில் விட வேண்டும்.
ஒவ்வொரு பிரதோஷமும் 21 நாகலிங்க பூவால் சிவனை வழிபட்டு, 21 பேருக்கு அன்னதானம் செய்வதால் பிரதோஷ பூஜையின் பலன் பல மடங்கு உயரும்.

மருத்துவ நன்மைகள்:
இந்த பூவின் வாசனை நுரையீரலுக்கு சுகம் தரும். வாசனை திரவிய தயாரிப்புகளிலும் இது பயன்படுகிறது.

ஆண், பெண் மலட்டுத்தன்மை, பிசிஓடி, கருப்பைச் சிக்கல்கள், வெள்ளைப்படுதல் போன்ற பிரச்சனைகளில் இது வைத்தியரீதியாக பயன்படுகிறது.

புராண ஆதாரம்:
21 மகரிஷிகள் தங்கள் தவசக்திகளை நாகலிங்க பூவிற்கு அர்ப்பணித்துள்ளனர் என புராணங்கள் கூறுகின்றன. எனவே இது ஒரு மிகுந்த தவ பலம் பெற்ற தெய்வீக பூவாகும்.

அறம் வளர்க்கும் வழி:
பாதிக்கப்பட்ட குடும்பத்தில் இந்த பூ வழிபாடு தொடர்ந்து செய்யப்படும் போது, நிச்சயம் நல்வாழ்வு நம்மை அணுகும்.
திருச்சிற்றம்பலம்!
ஒவ்வொரு பிரதோஷத்திலும் இந்த பூவால் சிவனை வழிபடுங்கள் உங்கள் வாழ்க்கை சுத்தம் அடைந்து, இறை அருள் பொங்கி வழிவகுக்கும்.

# மீம்ஸ்







# விடுகதை



| | |
|---|---|
| பொட்டுப்போல் இலை இருக்கும், பொரிபோல் பூப் பூக்கும், தின்னக்காய் காய்க்கும், தின்னாப் பழம் பழுக்கும் அது என்ன? | முருங்கைமரம் |
| என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்? | துவாரம் |
| தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன? | தொட்டா சுருங்கிச் செடி |
| அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன? | நிலா |
| பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன? | பெட்ரோல் |



# ஜோக்ஸ்

தத்துவம்
ஏழு பரம்பரைக்கு உட்கார்ந்து சாப்பிடுற அளவுக்கு சொத்து இருந்தாலும் பாஸ்ட் புட்க்கு போனா நின்னு தான் சாப்பிடணும்.
------------------------------

தோழிகள் இருவர் பேசிக் கொள்கிறார்கள்
ராதா: நேத்து உன் லவ்வரை பார்க்க கூஷநநஉh-க்கு போறதா சொன்னியே! என்ன ஆச்சு?
கீதா: அட! அத ஏண்டி கேக்குறா? வாத்தியாரை லவ் பண்ணது தப்பா போச்சு!
ராதா: ஏன்! என்ன ஆச்சு?
கீதா: கொஞ்ச நேரம் லேட்டா போனேன். அதுக்காக படகு மேல ஏறி நிற்க சொல்லிட்டாருடி!
ராதா: ஹா! ஹா! ஹா!
------------------------------

முத்தம்
கணவன்: டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா 500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?

மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?

கணவன்: ???
------------------------------

தொலைக்காட்சி விளம்பரம்
வரும் சனிக்கிழமை இரவு பத்து மணிக்கு... உங்கள் அபிமான தொலைக்காட்சியில்... அற்புதமான ஹாலிவுட் திரைப்படம்... தமிழில்

சிலந்தி அண்ணாச்சி (Spiderman)

உங்களின் விடுமுறை நாளை குதூகலமாக கொண்டாட ஞாயிற்றுகிழமை மதியம் 2 மணிக்கு

சூப்பர்ஹிட் ஹாலிவுட் திரைப்படம்

"அம்மாச்சி திரும்ப வந்தாச்சு" (Mummy Returns)

முற்றிலும் தமிழில்... காணத்தவறாதீர்கள்!!!



# வாழ்வுதரும் ஆரோக்கியம்



## பிரசவ வலியையும், சூட்டு வலியையும் எப்படி கண்டறிவது?



முதல் முறை கருவுறுதலின் போது சந்தோஷமாக உணரும் நேரத்தில் பிரசவம் குறித்தும் அதிகம் பயப்படுவார்கள். கர்ப்ப காலம் முழுக்க பிரசவ வலி, பிரசவ நேரம் குறித்த சந்தேகம் இருக்கும்.

அதே சமயம் பிரசவ வலிக்கும், பொய் வலிக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன என்பதை பற்றி கர்ப்பிணிப் பெண்கள் அறிந்து கொள்வது அவசியமானது.

பொதுவாக பிரசவ வலி என்பது மகிழ்ச்சியான எதிர்பார்ப்புடன் கவலையும் இருக்கும். பெண்ணின் கர்ப்பகாலத்தில் மூன்றாம் ட்ரைமெஸ்டர் காலங்களில் இந்த வலி உணர்வு தொடங்கும். முதல் குழந்தையை சுமக்கும் பெண்கள் அடிக்கடி பிரசவ வலி என்று மருத்துவமனைக்கு செல்லும் நிகழ்வுகளும் நடக்கும்.

பல பெண்கள் தங்களது இறுதி மூன்று மாதங்களில் பிரசவ வலி ஆரம்பித்துவிட்டதாக நினைத்து அடிக்கடி மருத்துவமனை செல்கிறார்கள். இது பொய் வலி அல்லது சூட்டு வலி என்பதை அறிந்த பிறகு வீடு திரும்புகிறார்கள்.

பொய் வலி விட்டு விட்டு இருக்காது. தொடர்ந்து இருக்கும். உட்கார்ந்தால், நின்றால், படுத்தால் என நிலை மாறும் போது வலி குறையும். இடைவிடாத வலி இருந்தாலே அது பெரும்பாலும் பொய் வலி தான்.பிரசவ வலிகள் கீழ் முதுகில் தொடங்கி பின் அடிவயிற்றில் பரவி சில சமயங்களில் கால்கள் வரை பரவும். சில சமயங்களில் வயிற்றில் வலியை உண்டாக்கும். சிலநேரங்களில் வயிற்றுப்போக்குடன் இருக்கலாம்.

கர்ப்பப்பை வாய் விரிவடைதல் மற்றும் வெளியேற்றத்தின் ஆரம்பமாக இருக்கலாம். குழந்தையின் தலை இடுப்புக்குள் இறங்கி இருக்கலாம். கர்ப்பிணியின் இடுப்பு மற்றும் மலக்குடல் மீது அதிக அழுத்தத்தின் உணர்வு இருக்கும்.

## ஆஸ்துமா ஏன் உண்டாகிறது?



ஆஸ்துமா என்பது நுரையீரலுக்கு செல்லும் சுவாசப்பாதையில் உண்டாகும் அழற்சி நோயாகும். இது சுவாசத்தை கடினமாக்குகிறது. ஆஸ்துமாவை பற்றி நீங்கள் தெரிந்துகொள்வதற்கு முன்பு சுவாசிக்கும் பாதையில் என்ன நடக்கிறது என்பதை அறிவது அவசியம்.

சுவாசத்தில் காற்று உங்கள் மூக்கு அல்லது வாய் வழியாக, உங்கள் தொண்டைக்குள் மற்றும் உங்கள் காற்றுப்பாதைக்குள் சென்று இறுதியில் நுரையீரலுக்கு செல்கிறது.

நுரையீரலில் ஏராளமான காற்றுப்பாதைகள் உள்ளன அவை காற்றில் இருந்து ரத்த ஓட்டத்திற்கு தேவையான ஆக்சிஜனை வழங்குகின்றன. காற்றுப்பாதைகளில் புறணி வீங்கி அவற்றை சுற்றியுள்ள தசைகள் இறுக்கமடையும் போது ஆஸ்துமா அறிகுறிகள் உண்டாகின்றன. சளி காற்றுப்பாதைகளை அடைத்து காற்று உள் செல்லும் அளவை குறைக்கிறது.

ஆஸ்துமாவே இல்லாமல் செய்ய முடியுமா என்றால் கண்டிப்பாக முடியாது. ஆனால் அதை கட்டுப்படுத்தி வைக்கலாம். ஆஸ்துமாவை தூண்டும் காரணங்களிலிருந்து தள்ளி இருக்கலாம்.

**அறிகுறிகள்**

ஆஸ்துமாவின் பொதுவான அறிகுறி மூச்சுத்திணறல் ஆகும். இது நீங்கள் சுவாசிக்கும் போது ஏற்படும் சத்தம் அல்லது விசில் சத்தம் என்று கூறலாம்.

* இருமல் குறிப்பாக இரவில்
* சிரிக்கும் போது அல்லது உடற்பயிற்சியின் போது மார்பில் இறுக்கம்
* மூச்சுத்திணறல்
* பேசுவதில் சிரமம்
* கவலை அல்லது பீதி
* சோர்வு
* நெஞ்சு வலி
* விரைவான சுவாசம்
* அடிக்கடி தொற்று
* தூங்குவதில் சிரமம்

## தேனின் மருத்துவ குணங்கள்





* உணவு உண்பதற்கு இரண்டுமணி நேரத்திற்கு முன்பு இரண்டு ஸ்பூன் தேன் அருந்த வேண்டும். இவ்வாறு 10 தினங்கள் தொடர்ந்து செய்து வந்தால் குடல்புண்கள் ஆறிவிடும்.
* கடுமையான வயிற்றுவலி, உள்ளவர்கள் கொதிக்கும் தண்ணீர் ஒரு கப் எடுத்து அதனுடன் ஒரு டீஸ்பூன் தேனை கலந்து ஆற்றவேண்டும். குடிப்பதற்கு போதுமான அளவு சூட்டுடன் அந்த நீரை குடிக்க வேண்டும். இவ்வாறு குடிப்பதனால் வயிற்றுவலி, நின்றுவிடும், ஜீரணக்கோளாறுகளும் குணமாகும்.
* வயிற்றில் எரிச்சல், வயிற்றில் இரைச்சல் இருந்தால் உணவுக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு இரண்டு டீஸ்பூன் தேன் அருந்த வேண்டும். தொடர்ந்து சில நாட்களுக்கு அருந்தினால் வயிற்றில் ஏற்படும் எரிச்சல், இரைச்சல் ஆகியவை குணமாகிவிடும்.
* இஞ்சியை சிறு துண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்து சிவக்கும்படி வறுக்கவேண்டும். அதில் ஒரு கப் நீரையும், இரண்டு ஸ்பூன் தேனையும் கலந்து காய்ச்சவேண்டும். சுண்டக்காய்ந்ததும் இறக்கி வடிகட்டி அருந்த வேண்டும். இப்படி இருவேளை அருந்தினால் செரிமானம் ஆகாமையால் ஏற்பட்ட பேதி நின்றுவிடும்.
* ஒரு டீஸ்பூன் மிளகை தூள் செய்து மெல்லிய துணியில் சலித்துக்கொள்ள வேண்டும். அதில் அரை டீஸ்பூன் தூள் எடுத்து அதனுடன் தேன் கலந்து உட்கொள்ளவேண்டும். செரிமாக்கோளாறுகளால் ஏற்பட்ட வயிற்றுநோய் குணமாகும்.
* அகத்திக்கீரையைக் காம்பு நீக்கி ஆய்ந்தெடுத்து ஆவியில் வேகவைக்கவேண்டும். அதை சாறுபிழிந்து எடுத்து அதனுடன் தேன் கலந்து அருந்தினால் எல்லாவித வயிற்றுக்கோளாறுகளும் குணமாகும்.
* ஆலமரத்திலிருந்து ஒரு ஸ்பூன் பால் எடுத்து அதில் 1 ஸ்பூன் தேன் கலந்து அருந்த வேண்டும். இவ்வாறு அருந்தினால் வயிற்றிலுள்ள புழுக்கள் வெளியேறும், வயிற்றுப் புண்களும் குணமாகும்.
* குப்பை மேனி செடியின் வேரை இடித்து கஷாயமாக்க வேண்டும். அந்த கஷாயத்தில் 30 மில்லி எடுத்து அதனுடன் சிறிது தேன் கலந்து அருந்தினால் வயிற்றுப் புழுக்கள் வெளியாகும்.
* பத்து கொன்றை மரப்பூக்களை 100 மில்லி பசும்பாலில் இட்டு காய்ச்சி பூ நன்றாக வெந்ததும் வடிகட்டி அதனுடன் 1 டீஸ்பூன் தேன் கலந்து அருந்தலாம். இதனால் வயிற்றுக்கோளாறுகள், வயிற்றுப்புண், குடற்புண் ஆகியன குணமாகும்.
* சீதளபேதியை குணப்படுத்த 100 மில்லி ஆட்டுபாலை ஒரு டீஸ்பூன் தேன் கலந்து அருந்தவேண்டும். 1 டம்ளர் வெந்நீரில் 1 ஸ்பூன் தேன் கலந்து பின்பு அதில் அரை எலுமிச்சை பழ சாற்றையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடல் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும்.

நுரையீரலில் சேர்ந்துள்ள சளி எல்லாம் கண் காணாத இடத்திற்கு ஓடிவிடும். குடல் மற்றும் வயிற்றுக்கோளாறுகள் நீங்கிவிடும். குளிர்ச்சியால் ஏற்படும் எல்லா வியாதிகளையும் உடல் எதிர்த்து நின்று தடுத்துவிடும்.

இதய பாதிப்புகள் நீங்கி இதயம் பலம் பெறும். புதிய இரத்தம் உடம்பில் பாய்ந்தோடும் அதிகாலையிலும், படுக்கச்செல்வதற்கு முன்பும் பருகவேண்டும்.

* நெல்லிக்காய்களைத் துண்டு துண்டாக்கி தேன், ஏலக்காய், ரோஜா இதழ்கள் சேர்த்து இரண்டு நாட்கள் வெயிலில் காயவைக்க வேண்டும். பின்பு 1 ஸ்பூன் வீதம் காலையும் மாலையும் சாப்பிட்டு வந்தால் வறட்டு இருமல் குணமாகிவிடும்.
* என்றும் இளமையுடன் இருக்க வேண்டுமென விரும்புவோர் தினமும் தேனை அருந்த வேண்டும். 40 வயதை கடந்தவர்கள் தினமும் தேனை அருந்தலாம். ஒரு டீஸ்பூன் தேனை சாப்பிட்டு வந்தால் அரை மணி நேரத்தில் நரம்புகள் சுறுசுறுப்புடன் திகழும்.
* சிலருக்கு கை, கால்கள், விரல்கள், மற்றும் உடல் நடுங்க ஆரம்பிக்கும் இவர்கள் தினமும் ஒரு டம்ளர் பாலில் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நிச்சயம் குணம் காண்பார்கள்.
* ஒரு மேஜைக்கரண்டி தேனை இரவில் படுக்கும் போது உண்டு வந்தால் அடிக்கடி சிறுநீர் கழிக்கும் நிலை மாறும்.
* நரம்புத்தளர்ச்சிக்குத் தேனைவிட சிறந்த மருந்து இல்லை.
* தேனை துளசி சாறில் கலந்து உபயோகிப்பது சளி தொண்டை வீக்கம், பிராங்டீஸ் எனப்படும் சுவாசத்தொல்லை போன்றவைகளுக்கு மிகவும் நல்லது.

## முகப்பரு பிரச்சனையா?

ஹார்மோன் மாற்றங்களால் முகப்பரு ஏற்படுகிறது. அதனால் தான் பருவ வயதினருக்கு முகப்பரு பிரச்சனை அதிகமாக இருக்கும். இந்த பருவத்தில் ஆண்ட்ரோஜன் என்ற பாலின ஹார்மோன் உடலில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது.

இது மட்டுமில்லாமல் மோசமான வாழ்க்கை முறையாலும் முகப்பரு பிரச்சனை ஏற்படுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். இது சருமத்தின் கீழ் பகுதியின் உள்ள செபாசியஸ் என்னும் சுரப்பியை தூண்டி அதிக எண்ணெயை உற்பத்தி செய்கிறது.

இதனால் சருமத்தின் எண்ணெய் பசை அதிகரிக்கும். இதனுடன் தூசி, பாக்டீரியாக்கள், இறந்த செல்கள் சேர்ந்து பருக்கள் ஏற்படுகிறது. அதிக முகப்பரு காரணமாக சிலர் நிகழ்ச்சி மற்றும் கொண்டாட்டங்களுக்கு செல்வதற்கும் போட்டோ எடுப்பதற்கும் கூட அஞ்சுகின்றனர்.


எண்ணெய் பசை சருமம் உள்ளவர்கள்:

சாதாரண சருமத்தை விட எண்ணெய் பசை சருமம் உள்ளவர்களுக்கு முகப்பரு அதிகமாக ஏற்படும். ஆகையால் எண்ணெய் பசை சருமம் இருப்பவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எண்ணெய் பசை சருமம் உள்ளவர்கள் முகத்தை ஒரு நாளைக்கு மூன்று முறை சுத்தம் செய்ய வேண்டும்.

முக்கியமாக வெளியில் சென்று விட்டு வந்தவுடன் கண்டிப்பாக முகம் கழுவ வேண்டும். இதற்கு கற்றாழையால் செய்யப்பட்ட ஃபேஸ் வாஷ்களை பயன்படுத்தலாம். முகம் கழுவும் போது முகத்தில் சிறிது மசாஜ் செய்து வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவ வேண்டும். தொடர்ந்து இதை செய்யும் போது முகப்பரு ஏற்படுவது குறையும்.

சில நேரங்களில் வெயிலில் செல்வதாலும் முகப்பரு ஏற்படலாம். எனவே பகலில் வெளியில் செல்வதற்கு முன்பு சன்ஸ்கிரீன் லோஷனை பயன்படுத்தலாம்.

கிரீன் டீ ஃபேஸ் பேக்:



கிரீன் டீயில் உள்ள ரசாயன கலவையில், சருமத்திற்கு நன்மை செய்யும் ஆன்டி-ஆக்சிடன்ட்கள் மற்றும் ஆன்டி- மைக்ரோபியல் பண்புகள் நிறைந்துள்ளது. அவை முகத்தில் உள்ள முகப்பருக்களை நீக்குவதாக கூறப்படுகிறது.ஒரு கிண்ணத்தில் கிரீன் டி தூளை போட்டு அதனுடன் சிறிது தேன் கலந்து முகத்தில் போட்டு வர முகப்பரு மற்றும் தழும்புகள் மறையும்.

ஆப்பிள் சீடர் வினிகர்:

ஆப்பிள் சீடர் வினிகரில் முகப்பருவை உண்டாக்கும் பாக்டீரியாக்களை எதிர்த்து போராடும் பண்புகள் நிறைந்துள்ளன. ஆப்பிள் சீடர் வினிகரை பஞ்சில் தொட்டு முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து முகத்தை கழுவ, முகப்பரு பிரச்சினை தீரும்.

கடல் உப்பு ஸ்க்ரப்:

பருவ வயதினர் வாரந்தோறும் முகத்தை ஸ்க்ரப் செய்வது அவசியம். ஒரு கிண்ணத்தில் சிறிது நாட்டு சர்க்கரை, காபி தூள், கடல் உப்பு மற்றும் ஓட்ஸ் ஆகியவற்றை போட்டு முகத்தில் தேய்த்து வர கரும்புள்ளிகள், பருக்கள் வராமல் இருக்கும்.

விட்டமின் ஏ அதிகம் உள்ள பழங்கள், காய்கறிகள், முட்டை, மீன் ஆகியவற்றை உணவில் எடுத்துக்கொள்ள வேண்டும். உடற்பயிற்சி, தியானம், நடைபயிற்சி போன்றவற்றை வாழ்க்கையில் நடைமுறைபடுத்திக்கொள்ள வேண்டும்.

## ஈரப்பதத்தால் துணிகளில் துர்நாற்றமா?

மழைக்காலங்களில் நம்முடைய அன்றாட வேலைகளை செய்வதில் சில சிரமங்களை சந்திக்க நேரிடுகிறது. அப்படியான ஒன்று தான், துவைத்த துணிகளை உலர்த்துவதும், ஈரப்பதத்தால் துணிகளில் இருந்து வரும் துர்நாற்றமும்.சுற்றுச்சூழலில் அதிக ஈரப்பதம் இருப்பதால் துவைத்த துணிகள் உலராமல் ஈரப்பதத்துடனே இருக்கும். இதனால், துணிகளில் இருந்து துர்நாற்றம் வீச ஆரம்பித்து விடுகின்றன. இதைத் தவிர்க்க உதவும் சில எளிய வழிகள் இதோ...

**துணிகளை காய வைப்பது எப்படி?**

முதலில், மழைக்காலத்தில் அதிக எடையுள்ள துணிகளை துவைப்பதை தவிர்க்க வேண்டும். எப்போது, எந்த நேரத்தில் எந்த துணியை துவைக்க வேண்டும் என பிரித்துக்கொள்ள வேண்டும்.

துணிகளை உலர்த்தும் முன் அதில் உள்ள தண்ணீர் முழுவதும் வடிந்துள்ளதா என்பதை கவனிக்க வேண்டும். வெளியிடங்கள் செல்வதற்கு தேவைப்படும் துணிகளை மட்டுமே துவைக்க பரிந்துரைக்கப்படுகிறது.

வீட்டிற்குள் கயிறு கட்டி காயவைப்பதை விட துணிகளை உலர்த்த உதவும்



ஸ்டாண்டுகளில் போதிய இடைவெளிவிட்டு துணிகளை உலர்த்தலாம்.மழைக்காலங்களில் வீட்டிற்குள் துணிகளை காய வைப்பதால் வீட்டில் வசிப்பவர்களின் ஆரோக்கியம் பாதிக்க வாய்ப்புகள் உள்ளது. இந்நிலையில், வீட்டில் உள்ள ஈரப்பதத்தை கட்டுப்படுத்த ஏர் பியூரிபையர் பேக் பயன்படுத்தலாம்.

மாறாக, ஒரு கைப்பிடி அளவு கல் உப்பை ஒரு துணியில் கட்டி வைப்பதால் அறையில் இருக்கும் ஈரப்பதத்தை கல் உப்பு உறிஞ்சு விடுகிறது.தொடர் மழையின் போது, இந்த தந்திரம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஹேர் ட்ரையர் அல்லது டிஹைமிடிஃபையர் மூலம் துணிகளை உலர வைக்கலாம்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

# வெள்ளி குதிரை வாகனத்தில் வண்டுலூர் சப்பரத்துடன் புறப்பாடு கண்டருளல்



திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் சுவாமி திருக்கோயில் சித்திரை தேர் திருநாள் (விருப்பன் திருநாள்) வைபவம் 8ஆம் திருநாள் சித்திரை மாதம் 12ஆம் தேதி 25.4.2025 வெள்ளிக்கிழமை. காலை 7.30 மணி : வெள்ளி குதிரை வாகனத்தில் வண்டுலூர் சப்பரத்துடன் புறப்பாடு கண்டருளல். சித்திரை வீதி வலம் வருதல். **ஸ்ரீரங்கத்திலிருந்து நா.லக்ஷ்மி நரசிம்மன்**

## வாசவி வனிதா கிளப் சார்பில் ரூ. 5 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட முதலுதவி மருத்துவ மையம்




**திருவண்ணாமமலை,ஏப்.26:** திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் வாசவி வனிதா கிளப் சார்பில் ரூ. 5 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட முதலுதவி மருத்துவ மையத்தை அருணை மருத்துவக் கல்லூரி இயக்குனர் டாக்டர் எ. வ. வே. கம்பன் மற்றும் வாசவி கிளப் சர்வதேச தலைவர் இருக்குல்ல ராமகிருஷ்ணா, ஆர்ய வைசிய சமாஜத்தலைவர் A. C மணிகண்டன் மற்றும் அனைவரும் குத்து விளக்கு ஏற்றி பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர். இதற்கான ஏற்பாடுகளை வாசவி கிளப் வனிதா கிளப் தலைவர்கள் சரண்யா தினேஷ், செயலாளர், வைஷ்ணவி, பொருளாளர் ஜெயா ராஜா ஆகியோர் செய்திருந்தனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## புதிய தியான சிவதர்ஷன் பவன் திறப்பு விழா



சென்னை மாதவரம் நடராஜன்நகர் விரிவாக்கம் குடியிருப்பு பகுதியில் பிரம்மகுமாரிகள் வித்யாலயம் சார்பில் புதிய தியான சிவதர்ஷன் பவன் திறப்பு விழா, பிரம்மகுமாரிகள் தலைவி பீனா தலைமையில் நடந்தது. மாதவரம் எம்.எல்.ஏ. சுதர்சனம் புதிய தியான சிவதர்ஷன் பவன் மூன்றடுக்கு கட்டடத்தை திறந்து வைத்து பேசினார்.

## தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதி ஆண்டு மண்ணச்சநல்லூர் குழு மாணவர்கள் சார்பாக விழிப்புணர்வு



**திருச்சி, ஏப்.26:** திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்கள் சஞ்சய்,சதீஷ் குமார், சக்தி விஷால்,சுமேந்திரன்,சுனில் பாரத், தமிழரசன், தியாகேஷ், E.விக்னேஷ், P.விக்னேஷ், விஷ்வா, சுபிர்கோகரன், சுந்தரேசன் அனைவரும் தங்களது வேளாண் அனுபவ பயிற்சி திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் வட்டத்தில் பல்வேறு செயல் விளக்கங்கள் அளித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக திருச்சிராப்பள்ளி-அழகிய மணவாளம் கிராமத்தில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பங்கேற்பு கிராம மதிப்பீடு திட்டத்தின் கீழ் கிராமத்தின் சமூக வரைபடம்,கால வரைபடம்,வெண் வரைபடம், பருவகால வரைபடம்,நாள்காட்டி வரைபடம் மற்றும் மக்களின் அன்றாட பணிகள் குறித்து வரைபடம் போன்றவை இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதி ஆண்டு மண்ணச்சநல்லூர் குழு மாணவர்கள் சார்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதில் அப்பகுதி மக்கள் பங்கேற்றனர்.

# சிறுவாபுரி முருகன் கோவிலுக்கு ரூ.16.50 கோடியில் வளர்ச்சிப்பணி

**சென்னை, ஏப். 26:** சிறுவாபுரி முருகன் கோவிலுக்கு வரும் பக்தர்களின் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும்,'' என அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார். தமிழகசட்டசபையில், நேற்று கேள்வி நேரத்தில் நடந்த விவாதம்:

**துரை சந்திரசேகரன் (காங்.)** திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தொகுதிக்கு உட் பட்ட, சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில், பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, சிறப்பு திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்படுமா?

**அமைச்சர் சேகர்பாபு:** சிறுவாபுரி முருகன் கோவிலுக்கு, செவ்வாய்க்கிழமை 50,000; வார இறுதி நாட்களில், 10,000, மற்ற நாட்களில், 2,000 பக்தர்கள் வருகின்றனர். 2022ம் ஆண்டு கோவிலில், ஒரு கோடி ரூபாயில் திருப்பணிகள் செய்யப்பட்டன. தற்போது, 16.50 கோடி ரூபாயில், பெருந்திட்ட வரைவு பணிகள் நடக்கின்றன. கோவிலுக்கு மாற்றுப்பாதை அமைக்க, 67 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் பக்தர்களின் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும்.

**துரை சந்திரசேகரன்:** திருத்தணி முருகன் கோவிலுக்கு, அடிப்படை வசதிகள் செய்யும் திட்டம் உள்ளதா?

**அமைச்சர் சேகர்பாபு:**



ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் இருந்து, பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, திருத்தணிக்கு மாற்று வழி அமைக்க, 57.50 கோடி ரூபாயை, அரசு மானியமாக முதல்வர் வழங்கி உள்ளார். வரும் காலங்களில், அனைத்து அடிப்படை வசதிகளும் நிறைவேற்றி தரப்படும்.

துரை சந்திரசேகரன்: அறுபடை வீடு அல்லாத பிற முருகன் கோவில்களில், திருப்பணிகள் நடக்கின்றனவா?

**அமைச்சர் சேகர்பாபு:** தி.மு.க., ஆட்சிக்கு வந்த பின், 110 முருகன் கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. அறுபடை வீடு அல்லாத, 143 முருகன் கோவில்களில், 284 கோடி ரூபாய் மதிப்பில், 609 பணிகள் நடக்கின்றன. ஒட்டு மொத்தமாக 1,085,65 கோடி ரூபாய் மதிப்பில், 884 பணிகள் நடந்து வருகின்றன.

இவ்வாறு விவாதம் நடந்தது.




# இளையான்குடி அரசு மருத்துவமனையில் இரவு நேரத்தில் டாக்டர் நியமிக்க பேரூராட்சிக் கூட்டத்தில் உறுப்பினர்கள் வலியுறுத்தல்

**மானாமதுரை, ஏப். 26:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி மன்றக் கூட்டம். அதன் தலைவர்நஜூமுதீன் தலைமையில் நடைபெற்றது. இதில், துணைத் தலைவர் இப்ராஹிம், செயல் அலு வலர் சண்முகம், துப்புரவு ஆய்வாளர் தங்க துரை, வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களை தலைமை எழுத்தர் முருகன் வாசித்தார். இதைத் தொடர்ந்து,5வது வார்டு திமுக கவுன்சிலர் செய்யது ஜமீமா பேசியதாவது அரசு மருத்துவமனையில் இரவு நேரங்களில் மருத்துவர்கள் இல்லாததால் பொதுமக்கள் பெரிதும் அவதி பட்டு வருகின்றனர். உடன் கூடுதல் மருத்துவர்கள் மற்றும் இரவு நேரத்தில் டாக்டர் நியமிக்க மன்றம் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். வீட்டு வரி உயர்வை நிறுத்தி வைக்க வேண்டும் என வலியுறுத்தி பேசினார். அதிமுக 17 வது வார்டு கவுன்சிலர் நாகூர் மீரா பேசியதாவது வைகை ஆற்றில் அம்ரூத் குடிநீர் திட்டத்தில் கிணறுகள் அமைக்க தடை ஏற்பட்டுள்ளது. இதற்காக நிரந்தர தீர்வு காண வேண்டும். குழாய்கள் பதித்த இடங்களில் மூடாமல் உள்ளது.இப்பணி மந்தகதியில் நடைபெற்று வருகிறது. விரைவாக முடிக்க வேண்டும். இளையான்குடி அரசு மருத்துவ மனையில் பிரேதப்பரிசோதனை அறை பயன் பாட்டில் இல்லாமல் மூடப்பட்டுள்ளது.இதனால் சிவகங்கை செல்லும் நிலை உள்ளது. இங்கேயே மூடப்பட்ட பிரேத பரிசோதனை அறையை செயல் படுத்த வேண்டும். என பேசினார். மேலும் கவுன்சிலர்கள் அல் அமீன், ஷேக், ராஜவேல், இஸ்ரின் ஆகியோர் பேசியதாவது:

இளையான்குடி பேரூராட்சி பகுதி சாலை களில் அதிக அளவில் மாடுகள் நடமாடுவ தால் விபத்து சம்பவங்கள் நடைபெறுகின் றன. எனவே அவற்றைக் கட்டுப்படுத்த வேண் டும். இளையான்குடி புதிய பேருந்து நிலையத் துக்குள் ஒரு சில பேருந்துகளே வருகின்றன. எனவே அனைத்துப் பேருந்துகளும் பேருந்து நிலையத்துக்குள் வந்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். பேரூராட்சி நிர்வாகத்துக்கு புதிதாக வாங் கும் இடத்தில் குப்பைக் கிடங்கு அமைக்கக் கூடாது. புதிய குடிநீர் திட்டப் பணிகளுக் காசு நகர் பகுதியில் சாலைகளை சேதப்படுத்தி தோண்டப்பட்டுள்ள பள்ளங்களை சீரமைக்க வேண்டும். இளையான்குடியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்றனர். உறுப்பினர்களின் கேள்விகளுக்கு தலைவர் நஜூமுதீன், செயல் அலுவலர் சண்முகம் ஆகி யோர் பதிலளித்துப்பேசினார்கள். இதைத் தொடர்ந்து இளையான்குடி பேரூ ராட்சி பகுதியில் வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்ள குறைந்த தொகைக்கு வழங்கப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை அங்கீகரிப்பது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## போப் பிரான்சிஸ் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர் ஆவடிநாசர், இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. பங்கேற்றனர்



ரோம் வாடிகனில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர் ஆவடிநாசர், இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. பங்கேற்றனர்.

## ஊரகத் திறனாய்வு தேர்வில் சாதனை படைத்த மாணவர்களுக்கு பாராட்டு விழா



வலங்கைமான் அருகே உள்ள தென்குவளவேலி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஊரகத் திறனாய்வு தேர்வில் சாதனை படைத்த மாணவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

## பொன்னேரி நூலகத்தில் புத்தக கண்காட்சி



பொன்னேரி நூலகத்தில் புத்தக கண்காட்சியை கலெக்டர் பிரதாப் திறந்து வைத்து பார்வையிட்டார்.

## பட்டு வளர்ச்சித்துறையின் செயல்பாடுகள் குறித்து கலெக்டர் அழகுமீனா ஆய்வு



குமரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித்துறையின் செயல்பாடுகள் குறித்து கலெக்டர் அழகுமீனா நேற்று ஆய்வு செய்தார்.

## அனைத்து ஆசிரியர்கள் பணி நிறைவு பாராட்டு விழா



போளூர் ஊராட்சி ஒன்றிய அனைத்து ஆசிரியர்கள் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது.

## தீவிரவாதி தாக்குதலில் பலியானோர்களுக்கு அஞ்சலி




திருவண்ணாமலை 24.4. 2025 காஷ்மீரில் தீவிரவாதி தாக்குதலில் பலியானோர்களுக்கு அஞ்சலி வாசவி கிளப் இன்டர்நேஷனல் கவர்னர் திருவண்ணாமலை வாசவி கிளப் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு மெழுகுவர்த்தி ஏந்தி மௌன ஊர்வலம் நடத்தினார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## முப்பெரும் விழா



பென்னாகரத்தை அடுத்துள்ள செங்கனூர் ஊராட்சிக்குட்பட்ட சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் முப்பெரும் விழா நடைபெற்றது. விளையாட்டு விழா, எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பாராட்டு விழா, கதை சொல்லுதல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா என முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் மா. பழனி தலைமை தாங்கினார்.

# சமூக வலைதளங்களை பயன்படுத்த 16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தடை விதிக்க வேண்டும்: காங்கிரஸ் எம்எல்ஏ கோரிக்கை

சென்னை, ஏப்.26:

தமிழகத்தில் 16 வயதுக்குட்பட்ட பதின்பருவத்தினர் சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என காங்கிரஸ் எம்எல்ஏ ராமச்சந்திரன் கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் நேற்று பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் காங்கிரஸ் எம்எல்ஏ எஸ்.டி.ராமச்சந்திரன் (அறந்தாங்கி) பேசியதாவது:

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு பிரத்யேக பயிற்சி அளிக்க வேண்டும். பதின்ம வயது குழந்தைகளிடம் சமூக வலைதளங்கள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பல்வேறு நாடுகளில் 16 வயதுக்கு குறைந்த குழந்தைகள் ஸ்மார்ட்போன் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதேபோல், நமது மாநிலத்திலும்



16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும்.

நகர்ப்புற, மேல்தட்டு மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு 'குட் டச்', 'பேட் டச்' தொடர்பான பாலியல் புரிதல்களை விளக்கி விடுகிறார்கள்.

ஆனால், கிராமப்புற மக்களிடம் இதுகுறித்த போதிய விழிப்புணர்வு இல்லை. எனவே, பாடப்புத்தக அட்டையின் உட்புறத்தில் 'குட் டச்', 'பேட் டச்' தொடர்பான விளக்கப் படங்களையும், வெளிப்புறத்தில் குழந்தைகளுக்கான 1098 போன்ற உதவி மைய எண்களையும் அச்சிட்டு வழங்க வேண்டும். மகளிர் பள்ளிகள் உட்பட அனைத்து பள்ளிகளிலும் கழிவறைகள் வசதிகள் செய்து தரவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதற்கு பதிலளித்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ், "நலம் நாடி என்ற செயலி மூலமாக 21 வகையான குறைபாடுகளை கண்டறிந்து வருகிறோம். அந்தவகையில் 96,082 பேர் கண்டறியப்பட்டனர். அதில் மிகவும் கண்காணிப்பு தர வேண்டிய 17,676 பிள்ளைகளுக்கு இயன்முறையில் அவர்களின் வீடுகளுக்கே சென்று மருத்துவத்தையும் வழங்கி வருகிறோம்.

அனைத்து பள்ளிகளிலும் கழிப்பறை வசதிகள் உறுதி செய்யப்படும்'' என்று தெரிவித்தார்.

# அரசு மருத்துவமனையில் மின் கசிவால் தீ விபத்து: பாதுகாப்பான கட்டிடத்துக்கு மாற்றப்பட்ட குழந்தைகள், பெண்கள்

தஞ்சாவூர், ஏப்.26:

தஞ்சாவூர் ராசா மிராசுதார் அரசு மருத்துவமனையில் நேற்று ஏசி இயந்திரத்தில் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது. தஞ்சாவூர் ராசா மிராசுதார் அரசு மருத்துவமனையில் தற்போது மகப்பேறு சிகிச்சை பிரிவு, குழந்தைகள் நலப் பகுதி, கண் சிகிச்சை பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

இந்த மருத்துவமனைக்கு தஞ்சாவூர் மட்டுமின்றி சுற்றியுள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்து கணிசமான அளவில் பெண்கள் மகப்பேறு சிகிச்சைக்கு வருகின்றனர். இந்நிலையில், இந்த மருத்துவமனையில் நேற்று பகல் 11.30 மணியளவில் கர்ப்பிணி பெண்கள் அவசரகால அறுவை சிகிச்சை அரங்கம் உள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் உள்ள ஒரு அறையில் ஏசி இயந்திரத்தில் தீ விபத்து நேரிட்டது. அந்த அறையில் யாரும் இல்லாததால் அசம்பாவிதம் ஏற்படவில்லை.



மருத்துவமனை பணியாளர்கள், விரைந்து செயல்பட்டு தீயணைப்பு கருவிகளைப் பயன்படுத்தி தீயை அணைத்தாலும், அக்கட்டிடம் முழுவதும் புகை சூழ்ந்திருந்து. இதையடுத்து, முதல் மற்றும் தரை தளங்களில் சிகிச்சையில் இருந்த பச்சிளம் குழந்தைகள் உட்பட மொத்தம் 54 பேரும் உடனடியாக அருகில் இருந்த ஒருங்கிணைந்த பேறுகால அவசர சிகிச்சை மற்றும் சிசு தீவிர சிகிச்சை மையத்துக்கு பாதுகாப்பாக இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இதுகுறித்து தகவலறிந்த தஞ்சாவூர் தீயணைப்பு வீரர்கள் வந்து கட்டிடத்தின் மின் இணைப்பைத் துண்டித்து, புகை வெளியேற்றும் கருவியை இயக்கி கட்டிடத்தில் இருந்த புகையை வெளியேற்றினர். தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.ராஜாராம் ஆகியோர் மருத்துவமனைக்கு விரைந்து தீ விபத்து நேரிட்ட கட்டிடத்தைப் பார்வையிட்டனர்.

பின்னர், ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் செய்தியாளர்களிடம் கூறியது: மகப்பேறு பிரிவு முதல் தளத்தில் ஏசி இயந்திரம் தீப்பற்றி, தீப்பிழம்பு கீழே விழுந்ததில் மெத்தையிலும் தீப்பற்றிக் கொண்டது. தீ விபத்து நேரிட்ட முதல் தளத்தில் இருந்த 24 பேர் மற்றும் தரை தளத்தில் இருந்தவர்கள் உட்பட கட்டிடத்தில் இருந்த 54 பேரும் பாதுகாப்பாக வேறு கட்டிடத்துக்கு இடம்மாற்றப்பட்டனர். யாருக்கும் காயமோ, உயிர்ச்சேதமோ நேரிடவில்லை.

தீயை அணைக்க முயன்ற மருத்துவமனை பணியாளர்கள் 2 பேருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு, அவர்களுக்கும் உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டு 2 பேரும் நலமுடன் உள்ளனர் என்றார்.

இதுகுறித்து மாவட்ட தீயணைப்பு நிலைய அலுவலர் ச.குமார் கூறுகையில், "மருத்துவமனையில் தீ விபத்து நேரிட்ட உடன் அங்கிருந்த பணியாளர்கள் உடனடியாக செயல்பட்டு தீயை அணைத்துள்ளனர். அவர்கள் சாதுரியமாக செயல்பட்டதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது" என்றார்.

# 3 மாதத்தில் கொலைகள் குறைந்தன: டி.ஜி.பி., சங்கர் ஜிவால் அறிக்கை

சென்னை, ஏப்.26:

'முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக, மூன்று மாதத்தில் கொலைகள் குறைந்துள்ளன' என, டி.ஜி.பி., சங்கர் ஜிவால் கூறியுள்ளார்.

இதுகுறித்து, டி.ஜி.பி., அலுவலகம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகத்தில் நடந்த கொலை வழக்குகள் குறித்து பகுப்பாய்வு செய்ததில், 2017 - 2020ம் ஆண்டுகளில் கொலைகள் அதிகம் நடந்துள்ளது தெரியவந்தது. அதிகபட்சமாக, 2019ல் மாநிலம் முழுதும், 1,745 கொலை வழக்குகள் பதிவாகி உள்ளன. 2021க்கு பின், ஒவ்வொரு ஆண்டும் கொலைகள் குறைந்து வருகின்றன, கடந்த, 12 ஆண்டுகளில், எந்த ஒரு ஆண்டையும் விட, 2024ல் குறைந்த அளவாக, 1,563 கொலை வழக்குகள் மட்டுமே பதிவாகி உள்ளன.

ரவுடிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் காரணமாக,




ஆறு ஆண்டுகளில், அவர்கள் தொடர்பான கொலைகளும் குறைந்து உள்ளன. கடந்தாண்டு, ஜனவரி முதல் மார்ச் வரை, 354 கொலைகள் நடந்துள்ளன. போலீசாரின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக, இந்த ஆண்டில் அதே மூன்று மாத காலத்தில், 340 கொலைகளாக குறைக்கப்பட்டுள்ளன.

மற்ற ஆண்டுகளை காட்டிலும் அதிகபட்சமாக, 2024ல், 3,645 ரவுடிகள், குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டனர். ஏ பிளஸ், ஏ, பி, சி வகை ரவுடிகளின் எண்ணிக்கையும், 50 சதவீதம் குறைந்துள்ளது. நீதிமன்றங்கள் வாயிலாக, 242 ரவுடிகளுக்கு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது. 68 ரவுடிகளின் ஜாமின் ரத்து செய்யப்பட்டு உள்ளது. இது, 12 ஆண்டுகளில் செய்யப்பட்ட அதிகபட்ச ஜாமின் ரத்தாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# டாஸ்மாக்'கில் ரூ.1000 கோடி ஊழல் புகார்

## இயக்குனர், பொது மேலாளர்களுக்கு 'சம்மன்'




சென்னை, ஏப்.26:

'டாஸ்மாக் நிறுவனத்தில், 1,000 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்திருப்பது கண்டறியப்பட்டு உள்ளதால், அது தொடர்பான விசாரணைக்கு ஆஜராக வேண்டும்' என, அந்நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் பொது மேலாளர்களுக்கு, அமலாக்கத்துறை அதிகாரிகள், 'சம்மன்' அனுப்பி உள்ளனர்.

தமிழகத்தில், அமைச்சர் செந்தில் பாலாஜி கட்டுப்பாட்டில், 'டாஸ்மாக்' நிறுவனம் செயல்படுகிறது. இந்நிறுவனம் மது ஆலைகளில் இருந்து, மதுபானங்களை கொள்முதல் செய்து, மாநிலம் முழுதும், 4,830 சில்லரை கடைகள் வாயிலாக விற்கிறது.

இந்நிறுவனத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக, தமிழக லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அதன் அடிப்படையில், அமலாக்கத்துறை அதிகாரிகளும், சட்டவிரோத பண பரிமாற்றம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து உள்ளனர்.


அதன் அடிப்படையில், கடந்த மாதம் சென்னை எழும்பூரில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப்பற்றினர். இச்சோதனையில், டாஸ்மாக்கில், 1,000 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்திருப்பது கண்டறியப்பட்டு உள்ளதாக அமலாக்கத்துறை அதிகாரிகள் அதிகாரப்பூர்வமாக அறிவித்தனர்.

அமலாக்கத்துறை சோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழக அரசு மற்றும் டாஸ்மாக் நிறுவனம் சார்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இம்மனுக்களை நீதிமன்றம் தள்ளுபடி செய்து, டாஸ்மாக் ஊழல் தொடர்பாக அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணையை தொடரலாம் என்று உத்தரவிட்டது.

இதையடுத்து, டாஸ்மாக் ஊழல் குறித்த விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் என, அதன் இயக்குநர் விசாகன், பொது மேலாளர்கள் சங்கீதா, ராமதுரை முருகன் ஆகியோருக்கு, அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று சம்மன் அனுப்பி உள்ளனர்.

# பஹல்காம் தாக்குதலில் தொடர்புடைய 2 லஷ்கர் பயங்கரவாதிகளின் வீடுகள் குண்டுவீசி அழிப்பு

புதுடெல்லி, ஏப்.26:



பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் தொடர்புடைய 2 லஷ்கர் பயங்கரவாதிகளின் வீடுகளை பாதுகாப்புப் படையினர் குண்டுவீசி அழித்தனர். அந்த வீடுகளுக்குள் வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருந்ததாக வட்டாரங்கள் தெரிவித்தன.

காஷ்மீரின் பஹல்காம் மலைப் பகுதியில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் கடந்த 22-ம் தேதி தாக்குதல் நடத்தினர். இதில் வெளிநாட்டினர் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பா ஆதரவு அமைப்பான டிஆர்எப் பொறுப்பேற்றது.

இந்நிலையில், இந்த தாக்குதலில் தொடர்புடைய லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாதிகளான அடில் உசேன் தோக்கர் மற்றும் ஆசிப் ஷேக் ஆகிய இருவரின் வீடுகள் ஜம்மு காஷ்மீரில் நடந்த தனித்தனி குண்டுவெடிப்புகளில் வியாழக்கிழமை இரவு அழிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்களின் வீடுகளுக்குள் வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

அடில் உசேன் தோக்கர் அனந்த்நாக் மாவட்டத்தையும், ஆசிப் ஷேக் புல்வாமாவையும் சேர்ந்தவர்கள். ஹாஷிம் மூசா என்கிற சுலேமான் மற்றும் அலி பாய் என்கிற தல்ஹா பாய் ஆகியோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் குறித்து துப்பு கொடுப்பவர்களுக்கு ரூ.20 லட்சம் பரிசு வழங்கப்படும் என்றும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

# வீடு புகுந்து நண்பரை வெட்டிக் கொன்ற வழக்கு: இளைஞருக்கு இரட்டை ஆயுள் தண்டனை

தென்காசி, ஏப்.26:

தென்காசி மாவட்டம் ஆய்க்குடியில் வீடு புகுந்து நண்பரை வெட்டிக் கொன்ற வழக்கில் இளைஞருக்கு வியாழக்கிழமை இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆய்க்குடி காவல் சரகத்துக்குள்பட்ட கம்பிளி தெற்குத் தெருவைச் சேர்ந்த வேல்சாமி-முப்பிடாதி தம்பதியின் மகன் தேவா என்ற மகாதேவன் (25). அதே ஊா பள்ளிவாசல் தெருவில் வசித்து வரும் அழகையா மகன் மகாதேவன் என்ற வரிப்புலி (25). நண்பா்களாக இருந்த இவா்களிடையே சிறுசிறு பிரச்னைகளால் முன்விரோதம் ஏற்பட்டதாம்.

கடந்த 2021 ஜூன் 19ஆம்



தேதி தேவா தனது வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தாா். அப்போது, மகாதேவன் என்ற வரிப்புலி அவரது வீடு புகுந்து அரிவாளால் வெட்டினாா். இதில், தேவா நிகழ்விடத்திலேயே உயிரிழந்தாா். மகாதேவனை தேவாவின் பெற்றோரும் சகோதரரும் பிடிக்க முயன்றனா். அவா்களுக்கு மகாதேவன் கொலை மிரட்டல் விடுத்துவிட்டு தப்பியோடினாா். ஆய்க்குடி போலீஸாா் வழக்குப் பதிந்து, மகாதேவனைக் கைது செய்தனா்.

இந்த வழக்கு மாவட்ட கூடுதல் அமா்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கை நீதிபதி மனோஜ்குமாா் வியாழக்கிவமை விசாரித்து, மகாதேவனுக்கு இரட்டை ஆயுள் தண்டனை, தேவாவின் பெற்றோா்-சகோதரருக்கு கொலை மிரட்டல் விடுத்ததற்காக 7 ஆண்டு சிறைத் தண்டனை, ரூ. 10 ஆயிரம் அபராதம் விதித்துத் தீா்ப்பளித்தாா்; தண்டனையை ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க உத்தரவிட்டாா்.

இந்த வழக்கில் அரசுத் தரப்பில் கூடுதல் மாவட்ட வழக்குரைஞா் சு. வேலுச்சாமி ஆஜரானாா்.

# காவல் உதவி ஆய்வாளர் தேர்வில் கல்வி தகுதி கட்டுப்பாடுகளை நீக்க கோரி வழக்கு

மதுரை, ஏப்.26:



தமிழகத்தில் நேரடி உதவி காவல் ஆய்வாளர்கள் பணிக்கான கல்வித் தகுதி கட்டுப்பாடுகளை நீக்கக் கோரிய வழக்கில், சீருடைப் பணியாளர் தேர்வாணையம் பதில் அளிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மதுரை வண்டியூரைச் சேர்ந்த கோபால், இப்ராஹிம் கலிபுல்லா, சுரேஷ் ஆகியோர் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் 1,299 உதவி காவல் ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை ஏப்.4-ம் தேதி வெளியிட்டது.

இப்பணியிடங்களுக்கு ஆன்லைன் வழியாகவே விண்ணப்பிக்க முடியும். அறிவிப்பாணையில் 9-ம் வகுப்பு படிக்காமல் நேரடியாக 10-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், பிளஸ் 1 படிக்காமல் நேடியாக பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது. இது இயற்கை நீதிக்கு எதிரானது. அவ்வாறு படித்தவர்கள் நேரடியாகத் தேர்வு எழுதித்தான் வெற்றிபெற்றுள்ளனர்.

எனவே, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் உதவி காவல் ஆய்வாளர் பணிக்கு விண்ணப்பிக்க விதிக்கப்பட்ட கல்வித்தகுதி கட்டுப்பாடுகளை நீக்கி உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி பட்டு தேவானந்த் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில், "கடந்த முறை காவல் உதவி ஆய்வாளர்கள் பணித் தேர்வில் நேரடியாக 10-ம் வகுப்பு படித்தவர்களை தேர்வு செய்துள்ளனர். இந்தாண்டு முதல் புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, இந்தக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டும்" என வாதிடப்பட்டது.

அரசுத் தரப்பில், "இதே கோரிக்கையுடன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதே கோரிக்கை தொடர்பான பொதுநல மனு, மதுரை அமர்வில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் நலன் கருதியே அறிவிப்பாணையில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டது.

# கோடை வெயிலின் தாக்கம் எதிரொலி: டாஸ்மாக் கடைகளில் 'பீர்' விற்பனை அமோகம்

பனி, மழை, வெயில் என எந்த பருவநிலை நிலவினாலும் உற்சாகமுடன் இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள் மதுப்பிரியர்கள். உணவுப் பிரியர்கள் பருவகால மாற்றத்துக்கு ஏற்ப எப்படி விதவிதமான உணவு வகைகளை சாப்பிடுகிறார்களோ? அதேபோல மதுப்பிரியர்களும் அந்தந்த பருவநிலைக்கு ஏற்ப மதுபானங்களை வாங்கி குடிப்பதை வழக்கமாக வைத்திருக்கின்றனர்.



இதில், கொளுத்தும் கோடை வெயிலுக்கு இதமாக புத்துணர்வை கொடுக்கும் 'பீர்' வகைகள் தான் மதுப்பிரியர்களின் தேர்வாக உள்ளது. அதனாலேயே ஒவ்வொரு ஆண்டும் கோடைகாலம் தொடங்கியதுமே மற்ற மதுபான வகைகளை வாங்கி பருகுவதை குறைத்துவிட்டு 'பீர்' வகைகளை அதிக அளவில் வாங்கி பருகுகின்றனர். அதிலும் குளிரூட்டப்பட்ட 'பீர்' வகைகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் கோடை காலத்தில் 'பீர்' விற்பனை பலமடங்கு அதிகரிக்கும்.

அதன்படி, கடந்த மார்ச் மாத தொடக்கம் வரை 'பீர்' வகைகளின் விற்பனை சற்று குறைவாகவே இருந்தது. மார்ச் மாத இறுதியில் இருந்து 'பீர்' விற்பனை அமோகமாக நடந்துவருகிறது. வெயிலின் தாக்கத்தை சமாளிக்க முடியாமல் பொதுமக்கள் இளநீர், தர்ப்பூசணி, நுங்கு மற்றும் குளிர்பானங்களை தேடிச்சென்றனர். ஆனால் மதுப்பிரியர்களோ 'பீர்' வகைகளை அதிக அளவில் வாங்கி பருக தொடங்கியுள்ளனர். இதன் காரணமாக டாஸ்மாக் கடைகளில் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 10 ஆயிரத்துக்கு மேல் 'பீர்' வகைகள் விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறது.

# காஷ்மீரில் இருந்து தமிழர்களை மீட்கும் பணியில் தீவிரம் காட்டும் தமிழக அரசு

சென்னை, ஏப்.26:

காஷ்மீரில் இருந்து டெல்லி வந்த 6 தமிழர்களை தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் குமார், தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி ஏ.கே.விஜயன் ஆகியோர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.



காஷ்மீரின் பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் அப்பகுதியில் இருந்த 200-க்கும் மேற்பட்ட தமிழர்களில் இருவர் தவிர மற்ற அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இவர்களை மீட்கும் பணியில் தமிழ்நாடு அரசு தீவிரம் காட்டி வருகிறது. இதற்காக காஷ்மீரியான புதுக்கோட்டை துணை ஆட்சியரை அங்கு அனுப்பி வைத்துள்ளது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22-ல் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 28 பேர் உயிரிழந்தனர். இந்த சுற்றுலாப் பகுதியில் 200-க்கும் மேற்பட்ட தமிழர்களும் கூடியிருந்தனர். இவர்களில் சென்னையின் டாக்டர் பரமேஸ்வன் சந்துரு ஆகிய இருவர் மட்டும் பாதிக்கப்பட்டனர்.

இவர்களில் முதியவர் சந்துரு சம்பவத்தை பார்த்த அதிர்ச்சியில் மயங்கி விழுந்தார். இவர் அனந்தநாக் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தோளில் துப்பாக்கிச்சூடு காயம் அடைந்த பரமேஸ்வரன் டெல்லிக்கு விமான ஆம்புலன்ஸில் அழைத்து வரப்பட்டு, எய்ம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காஷ்மீரில் இருந்து தமிழர்கள் அனைவரையும் பத்திரமாக தமிழகம் அழைத்துவர தமிழ்நாடு அரசு தீவிரம் காட்டுகிறது. இதற்காக, டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் கட்டுப்பாடு அறை திறக்கப்பட்டு உதவி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணிக்காக காஷ்மீரியான புதுக்கோட்டை துணை ஆட்சியர் அப்தாப் ரசூல், சிறப்பு அதிகாரியாக காஷ்மீருக்கு இரு தினங்களுக்கு முன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அவருடன் இணைந்து டெல்லி தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுரை ஆணையர் ஆஷிஷ் குமார் மீட்புப் பணி மேற்கொண்டு வருகிறார்.

காஷ்மீரிலிருந்து தமிழர்கள் டெல்லிக்கு விமானத்தில் அழைத்து வரப்பட்டு, தமிழ்நாடு இல்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். பிறகு இவர்கள் சென்னைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். இவர்களில் 6 தமிழர்கள் துப்பாக்கிச் சூடு சம்பவத்தை மிக அருகிலிருந்து பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். செஞ்சியை சேர்ந்த சையது உஸ்மான், சயது ரஹமான், சையது காஜா மொய்னுத்தீன், ஷபியூர் ரஹ்மான், சாதிக் பாஷா, ராஜா ரங்கநாதன் ஆகிய 6 நண்பர்களும் நேற்று விமானத்தில் டெல்லி வந்து சேர்ந்தனர். இவர்களை தமிழ்நாடு இல்ல உள்ளுரை ஆணையர் ஆஷிஷ் குமார், தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.விஜயன் ஆகியோர் வரவேற்று விவரம் கேட்டறிந்து ஆறுதல் கூறினர்.

இதுகுறித்து 'இந்து தமிழ் திசை' நாளிதழிடம் ஏ.கே. விஜயன் நேற்று கூறும்போது, "பஹல்காமிலிருந்து தமிழர்கள் அனைவரையும் பத்திரமாக அழைத்து வர தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார். இதுவரை கட்டுப்பாட்டு அறையை தொடர்புகொண்ட 122 பேர் டெல்லிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்கள் இன்று மாலை சென்னைக்கு புறப்படுகின்றனர். நாளை மேலும் 28 பேர் காஷ்மீரிலிருந்து வர உள்ளனர். அனைவர் பற்றியும் நமது முதல்வர் போனில் பேசி தெரிந்து கொண்டபடி உள்ளார்" என்றார்.

இதற்கிடையில் காஷ்மீருக்கு சுற்றுலா சென்ற 40 பேர் கொண்ட ஒரு தமிழர் குழு, பயணத்தை பாதியில் முடித்துக் கொண்டு ஜம்முவிலிருந்து திரும்பியது. டெல்லி வரை பேருந்தில் வந்த இவர்கள் தமிழ்நாடு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டு, நேற்று முன்தினம் ரயில் மூலம் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# உயர்கல்வி நிறுவனங்களில் யு.பி.ஐ. பரிவர்த்தனையை உறுதி செய்ய வேண்டும் - யு.ஜி.சி. அறிவுறுத்தல்,

சென்னை, ஏப்.26:

பல்கலைக்கழக மானியக்குழு (யு.ஜி.சி.) செயலாளர் மணீஷ் ஆர்.ஜோஷி, அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-




டிஜிட்டல் சார்ந்த அறிவாற்றலை சமூகத்தில் அனைவரும் பெற்றிருக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், அறிவுசார் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மத்திய அரசு டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை ஊக்குவித்து வருகிறது.

பணப்பரிமாற்றத்தை குறைத்து, அனைத்து உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கிய தொலைநோக்கு பார்வையுடன் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. தற்போது, நாட்டில் யு.பி.ஐ மூலம் பாதுகாப்பான, விரைவான பணப்பரிமாற்றம் செய்யும் வசதி உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.

கிராமப்புற மாணவர்கள் கல்வி கட்டணம், தேர்வு கட்டணம், பாடப்புத்தகங்கள் உள்பட பல்வேறு கட்டணங்களை யு.பி.ஐ. மூலம் செலுத்துவதை விரும்புகின்றனர். மேலும், இது அவசியமாகிறது. எனவே, உயர்கல்வி நிறுவனங்கள், கல்வி சார்ந்த பணப்பரிமாற்றங்களை மாணவர்கள் ஆன்லைன் மற்றும் நேரடியாக எளிதில் கையாளும் வகையில், யு.பி.ஐ மற்றும் 'க்யூஆர் கோர்டு' வசதிகளை கல்வி நிறுவன வளாகத்தில் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# டி.என்.பி.எஸ்.சி. நடத்தும் தேர்வுகளின் ஓ.எம்.ஆர் விடைத்தாளில் புதிய மாற்றம்

சென்னை, ஏப்.26:





தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் (டி.என்.பி.எஸ்.சி.) தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் ஜான்லூயிஸ் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஓ.எம்.ஆர் விடைத்தாளில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. புதிய ஓ.எம்.ஆர். விடைத்தாளின் மாதிரி படிவம், www.tnpsc.gov.in பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. தேர்வர்கள் 4 இலக்க வினாத் தொகுப்பு எண்ணை அதற்குரிய வட்டங்களில் கருமை நிற பந்துமுனை பேனாவை பயன்படுத்தி கருமையாக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், ஓ.எம்.ஆர் விடைத்தாளின் பக்கம் 1, பகுதி-2ல் தேர்வர்கள் உறுதிமொழி அளித்து கையொப்பமிட வேண்டும். மேலும் தேர்வாணையத்தால் நடத்தப்பட இருக்கும் இனி வரும் அனைத்து ஓ.எம். ஆர். முறை தேர்வுகளிலும், பங்கேற்க உள்ள தேர்வர்கள், புதிய மாதிரி ஓ.எம்.ஆர். விடைத்தாளினை நன்கு பார்த்து அறிந்துக் கொண்டு தேர்வு எழுத வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆன்லைன் மோசடியில் ரூ. 2 லட்சத்தை இழந்த கல்லூரி மாணவர்



நீலகிரி, ஏப்.26:

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 20 வயது வாலிபர், நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஒரு கல்லூரியில் படித்து வருகிறார். கல்லூரி விடுதியில் தங்கி பயின்றுவரும் அந்த மாணவர் படிக்கும்போதே தொழிலில் ஈடுபட்டு பணம் சம்பாதிக்க எண்ணியுள்ளார். இதற்காக ஆன்லைனில் தொழில், வருமான வாய்ப்புகள் உள்ளதான என பார்த்துள்ளார்.

இதுதொடர்பாக இன்ஸ்டாகிராமில் விளம்பரம் வந்துள்ளது. அதில், பணத்தை முதலீடு செய்தால் இருமடங்கு லாபம் கிடைக்கும் என கூறப்பட்டிருந்தது. இதை நம்பிய மாணவர் ஆன்லைன் செயலி மூலம் பணத்தை சிறுதி சிறிதாக ரூ. 2 லட்சம் வரை முதலீடு செய்துள்ளார்.

இதையடுத்து, முதலீடு செய்த ஆன்லைன் நிறுவனத்திடம் பணத்தை திரும்பி தரும்படி மாணவன் கேட்டுள்ளார். ஆனால், பல்வேறு காரணங்களை கூறி முதலீட்டு தொகையை அந்நிறுவனம் திருப்பி செலுத்தவில்லை. இதனால், தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த மாணவன் கடந்த 2 நாட்களாக கல்லூரி விடுதி அறையிலேயே இருந்துள்ளார்.

பின்னர், நண்பர்களிடன் கடனாக வாங்கிய பணத்தை திருப்பி செலுத்த வேண்டும் என்பதாலும் தான் ஏமாற்றப்பட்டதாலும் விரக்தி அடைந்த அந்த மாணவன் நேற்று விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். இதை கண்ட விடுதியில் இருந்த சக மாணவர்கள் அவரை மீட்டு ஊட்டி மருத்துவமனையில் அனுமதித்தனர். தற்போது மேல் சிகிச்சைக்காக மாணவன் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சாலையில் கிடந்த பையில் ரூ. 2 லட்சம்: போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்த கட்டிட தொழிலாளிக்கு பாராட்டு



சென்னை, ஏப்.26:

சென்னை நங்கநல்லூரை சேர்ந்த கட்டிட தொழிலாளி உமாபாரதி. இவர் நேற்று அப்பகுதியில் உள்ள சாலையில் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது, சாலையில் சந்தேகத்திற்கு இடமான வகையில் பை கிடந்தது. அந்த பையை உமாபாரதி எடுத்து பார்த்தார். அதில் ரூ. 2 லட்சம் பணம் இருந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த உமாபாரதி பணப்பையுடன் அருகில் உள்ள போலீஸ் நிலையத்திற்கு சென்றார்.

பணப்பையை போலீசாரிடம் ஒப்படைத்தார். இதையடுத்து, பணப்பையில் இருந்த செல்போன் எண்ணை தொடர்பு கொண்ட போலீசார், பணத்தை உரியவரிடம் பத்திரமாக ஒப்படைத்தனர்.

மேலும், சாலையில் பையில் கிடந்த ரூ. 2 லட்சம் பணத்தை போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்த கட்டிட தொழிலாளி உமாபாரதிக்கு போலீசார் சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர்.

# பிரதமர் மோடி மே 3ல் சென்னை வருகை?

சென்னை, ஏப்.26:



ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் பாம்பனில், 550 கோடி ரூபாயில் கட்டப்பட்டுள்ள புதிய ரயில் பாலத்தை, பிரதமர் நரேந்திர மோடி கடந்த 6ம் தேதி திறந்து வைத்தார்.

அதையடுத்து, செங்கல்பட்டு மாவட்டத்தில், தனியார் பல்கலையில் நடக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க, பிரதமர் மோடி, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் நட்டா ஆகியோர், மே 3ம் தேதி சென்னை வர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலில், அப்பாவி மக்கள் 27 பேர் உயிரிழந்தனர். அதற்கு காரணமான பயங்கரவாதிகளுக்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கை தொடர்பாக, ராணுவம், வெளியுறவுத் துறை அதிகாரிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தி வருகிறார்.

எனவே, 'மோடியின் சென்னை பயணம் கடைசி நேர மாறுதலுக்கு உட்பட்டது' என, தமிழக பா.ஜ.,வினர் தெரிவித்தனர்.




# க்ரைம் கார்னர்

## பஹல்காம் தாக்குதல் மத்திய அரசின் தோல்வியா?..

## கேள்வி கேட்ட பத்திரிகையாளரை தாக்கிய பாஜக தொண்டர்கள்



கதுவா, ஏப்.26:

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக ஜம்மு-காஷ்மீரின் கதுவாவில் பாஜக நடத்திய போராட்டம் குறித்து செய்தி சேகரிக்க வந்த பத்திரிகையாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. தாக்கப்பட்டவர் டைனிக் ஜாக்ரன் செய்தியாளர் ராகேஷ் சர்மா.

26 பேர் உயிரிழந்த பஹல்காம் பயங்கரவாத தாக்குதலைக் கண்டித்து ஜம்மு காஷ்மீர் பாஜக எம்எல்ஏக்கள் தேவிந்தர் மான்யால், ராஜீவ் ஜஸ்ரோதியா, பாரத் பூஷன் ஆகியோர் தலைமையில் நேற்று கதுவாவில் போராட்டம் நடைபெற்றது.

அப்போது டைனிக் ஜாக்ரன் செய்தியாளர் ராகேஷ் சர்மா உள்ளிட்டோர், எல்லை தாண்டி ஊடுருவலைத் தடுக்க புலானாய்வுத் துறை, மத்திய அரசு தோல்வி அடைந்ததன் பிரதிபலிப்பாக பயங்கரவாதத் தாக்குதல் உள்ளதா? என்று பாஜக எம்எல்ஏக்களிடம் கேட்டனர். இதனால் அவர்கள் கோபமடைந்தனர்.

இதற்கிடையில், ராகேஷ் சர்மாவை பாஜக தொண்டர்கள் தலைவர்கள் முன்னிலையில் தாக்கினர். போலீசார் வந்து அவரை அழைத்துச் செல்லும் வரை அடி தொடர்ந்தது. இந்த தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கதுவாவில் உள்ள ஷாஹிதி சவுக் மற்றும் ஜம்மு பத்திரிகையாளர் மன்றத்தில் ஊடக ஊழியர்கள் போராட்டம் நடத்தினர். இந்த சம்பவம் தொடர்பாக கதுவா போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## போலி சான்றிதழ்கள் கொடுத்து சிஐஎஸ்எப் படையில் சேர முயற்சி: 8 பேர் மீது போலீசில் புகார்

அரக்கோணம், ஏப்.26:

போலி சான்றிதழ்கள் கொடுத்து சிஐஎஸ்எப் துணை ராணுவப்படையில் சேர முயற்சி செய்ததாக அஸ்ஸாமைச் சேர்ந்த இரு பெண்கள் உள்பட 8 பேர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தக்கோலம் காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

அரக்கோணத்தை அடுத்த தக்கோலம் அருகே உள்ள நகரி குப்பத்தில் மத்திய தொழிற் பாதுகாப்பு படையின் மண்டல பயிற்சி மையம் உள்ளது. நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் துணை ராணுவப்படையான மத்திய தொழிற் பாதுகாப்பு படையில் சேர தேர்வு செய்யப்படும் உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் என இருபாலருக்கும் இந்த பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.


இந்த படையில் சேர கடந்த மார்ச் மாதம் நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் ஆண்,பெண் படைவீரர்கள் தேர்வுநடைபெற்றது. இதில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அரக்கோணத்தை அடுத்த நகரி குப்பத்தில் உள்ள மண்டல பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கும் வகுப்பு தொடங்கப்பட உள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் தேர்வு செய்யப்பட்டவர்கள் தற்போது மையத்திற்கு வரத் தொடங்கி உள்ளனர். இவர்களது சான்றிதழ்கள் சரிபார்ப்பு நடைபெற்ற உடன் உண்மைத்தன்மை சோதனைக்காக அந்தந்த மாநில அரசுகளுக்கு அனுப்பப்படுகிறது. அந்த முடிவுகள் வரும் வரை பயிற்சியில் சேர வருவோர் மையத்திலேயே தங்க வைக்கப்படுகின்றனர்.

இதுபோன்று அஸ்ஸாம் மாநிலத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்ட சில்சார் மாவட்டத்தை சேர்ந்த கே.எம்.நிஷா, கடாரியா ருஜிதா தேவி ஆகிய இரு பெண்கள், அஜய் யாதவ், முகேஷ் மவுரியா, சந்திரிகா சிங், அமித் குமார், எம்.டி,தன்வீர், நரேந்திர சிங் ஆகிய எட்டு பேருடைய சான்றிதழ்களின் உண்மை தன்மை அறிய அசாம் மாநிலம் சின்சார் மாவட்ட நிர்வாகத்துக்கு அனுப்பப்பட்டது. இதில் அந்த எட்டு பேரின் சான்றிதழ்களும் போலி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்த எட்டு பேர் மீதும் பயிற்சி மைய ஆய்வாளர் ராஜேஷ் தக்கோலம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இப்புகார் குறித்து வழக்கு பதிந்த காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## போக்சோ வழக்கில் வாலிபருக்கு 'ஆயுள்'



தூத்துக்குடி:சிறுமியை பாலியல் வன்புணர்ச்சி செய்ததாக, போக்சோ வழக்கில் வாலிபருக்கு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருகே, நடுநாலுமூலைகிணறு பகுதியைச் சேர்ந்தவர் அருள் செல்வம், 25. அப்பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமியை பாலியல் வன்புணர்ச்சி செய்ததாக, 2019ல் திருச்செந்தூர் போலீசார், அவரை கைது செய்தனர்.

விசாரணை தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. விசாரித்த நீதிபதி சுரேஷ், அருள் செல்வத்திற்கு ஆயுள் தண்டனையும், 15,000 ரூபாய் அபராதமும் விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு 5 லட்சம் ரூபாய் வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

# மத்திய அரசு எடுக்கும் எந்த முடிவையும் ஆதரிப்போம் - பஹல்காம் தாக்குதல் பற்றி ஓவைசி

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் கடந்த செவ்வாய்க்கிழமை பயங்கரவாதிகளால் சுற்றுலாப் பயணிகள் உட்பட 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பாவின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் பிரண்ட் பொறுப்பேற்றுள்ளது. இந்த தாக்குதல் பாகிஸ்தான் இந்தியா இடையே விரிசலை ஏற்படுத்தியுள்ள நிலையில் இரு நாடுகளும் முப்படைகளை தயார் நிலையில் வைத்துள்ளன.

இதற்கிடையே நேற்று மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றது. இதன்பின் மத்திய அரசின் எதிர் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் தெரிவித்தன.

அந்த வகையில் கூட்டத்தில் கலந்துகொண்டபின் தங்கள் நிலைப்பாடு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஏஐஎம்ஐஎம் கட்சித் தலைவர் அசாதுதீன் ஓவைசி, பயங்கரவாதக் குழுக்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாட்டின் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க முடியும்.

பாகிஸ்தானுக்கு எதிராக தற்காப்புக்காக வான்வழி மற்றும் கடற்படை முற்றுகையை மேற்கொள்ளவும், ஆயுத விற்பனையில் பாகிஸ்தானுக்கு தடைகளை விதிக்கவும் சர்வதேச சட்டம் அனுமதிக்கிறது. தாக்குதல் நடந்த பைசரன் புல்வெளியில் சிஆர்பிஎஃப் ஏன் நிறுத்தப்படவில்லை?. குழு அங்கு செல்ல ஒரு மணி நேரம் எடுத்துக்கொண்டது ஏன்?

பயங்கரவாதிகள் மதத்தைக் கேட்டு மக்களைச் சுட்டுக் கொன்றனர். இதில் காஷ்மீரிகள் மற்றும் காஷ்மீர் மாணவர்களுக்கு எதிரான பொய்ப் பிரச்சாரத்தை நிறுத்த வேண்டும். பயங்கரவாதிகள் மதத்தைப் பற்றிக் கேட்டு மக்களைக் கொன்ற விதத்தை நான் கண்டிக்கிறேன். சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது மிகவும் நல்லது, ஆனால் தண்ணீரை எங்கேவைத்திருப்போம்?. மத்திய அரசு எடுக்கும் எந்த முடிவையும் நாங்கள் ஆதரிப்போம். இது ஒரு அரசியல் பிரச்சினை அல்ல. என்று தெரிவித்தார்.

# போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் பங்கேற்க வாடிகன் புறப்பட்டார் ஜனாதிபதி முர்மு

டெல்லி, ஏப்.26:

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் (வயது 88) உடல்நலக்குறைவால் கடந்த 21ம் தேதி உயிரிழந்தார். அவரின் மறைவிற்கு உலகின் பல்வேறு நாடுகளின் தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, போப் பிரான்சிஸ் உடல் வாடிகன் நகரில் உள்ள புனித பீட்டர் பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்றும், நாளையும் பொதுமக்கள், உலக நாடுகளின் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் இந்தியா சார்பில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பங்கேற்கிறார். இதற்காக அவர் இன்று டெல்லியில்



இருந்து தனி விமானம் மூலம் வாடிகன் புறப்பட்டு சென்றார். ஜனாதிபதியுடன் மத்திய மந்திரிகள் கிரன் ரிஜிஜு, ஜார்ஜ் குரியன், கோவா சட்டசபை துணை சபாநாயகர் ஜோஸ்வா டி சுசா ஆகியோரும் வாடிகன் புறப்பட்டு சென்றனர்.

## விளையாட்டு செய்திகள்

# மாட்ரிட் ஓபன் டென்னிஸ்: கோகோ காப் முதல் சுற்றில் வெற்றி



மாட்ரிட், ஏப்.26:

மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் கோகோ காப், உக்ரைனின் டயானா யஸ்ட்ரீம்ஸ்கா உடன் மோதினார். இதில் முதல் செட்டை 0-6 என இழந்த கோகோ காப், சுதாரித்துக் கொண்டு அடுத்த இரு செட்களை 6-2, 7-5 என்ற செட் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

# ஐ.பி.எல்.2025: முதல் அணியாக வெளியேறிய ராஜஸ்தான் ராயல்ஸ்..?



பெங்களூரு, ஏப்.26:

ஐ.பி.எல். தொடரில் நேற்றிரவு பெங்களூரு சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்த 42-வது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி பீல்டிங்கை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்கு 205 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக விராட் கோலி 70 ரன்களும், படிக்கல் 50 ரன்களும் வீழ்த்தினர். ராஜஸ்தான் அணி தரப்பில் சந்தீப் ஷர்மா 2 விக்கெட்டுகள் கைப்பற்றினார்.

பின்னர் 206 ரன்கள் இலக்கை நோக்கி ஆடிய ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 194 ரன்களே எடுத்தது. இதனால் பெங்களூரு அணி 11 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ராஜஸ்தான் தரப்பில் ஜெய்ஸ்வால் 49 ரன்கள் அடித்தார். பெங்களூரு அணி தரப்பில் ஹேசில்வுட் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். ஹேசில்வுட் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

நடப்பு தொடரில் 9-வது லீக் ஆட்டத்தில் ஆடிய ராஜஸ்தான் அணிக்கு இது 7-வது தோல்வியாகும். வெறும் 4 புள்ளிகள் மட்டுமே பெற்று புள்ளி பட்டியலில் 8-வது இடத்தில் உள்ளது.

இனி வரும் அனைத்து போட்டிகளில் (5 போட்டிகள்) வெற்றி பெற்றாலும் அந்த அணி 14 புள்ளிகள் மட்டுமே பெற முடியும். அதுவும் நல்ல ரன்ரேட்டில் வெற்றி பெற வேண்டும். அவ்வாறு நடந்தாலும் மற்ற அணிகளின் முடிவுகள் முடிவு ராஜஸ்தானுக்கு சாதகமாக அமைய வேண்டும். இதனால் அந்த அணியின் அடுத்த சுற்று வாய்ப்பு கேள்விக்குறியாகி இருக்கிறது.

# மேகதாது திட்ட பணிகளை தொடங்க தயார்

## முதல்–மந்திரி சித்தராமையா, பேட்டி

சாம்ராஜ்நகர், ஏப்.26:

முதல்-மந்திரி சித்தராமையா, மலை மாதேஸ்வரா கோவிலில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் கூறியதாவது:-

பயங்கரவாதிகளை ஒடுக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உள்ளது. பயங்கரவாத செயலை வன்மையாக கண்டிக்கிறேன். புல்வாமா தாக்குதலும் அதே மாவட்டத்தில் தான் நடந்துள்ளது.

அங்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருக்க வேண்டும். மத்திய அரசின் உளவுத்துறை தோல்வி அடைந்துள்ளது. சம்பவம் நடைபெற்ற பிறகு நடவடிக்கை எடுப்பது வேறு.

சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டும். அது தான் முக்கியம். இதை மத்திய



அரசு செய்திருக்க வேண்டும். புல்வாமாவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 40 ராணுவ வீரர்கள் வீர மரணம் அடைந்தனர். தற்போது பொதுமக்கள் 26 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் நடைபெறாமல் தடுத்திருக்க வேண்டும். இனி இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டியது அவசியம்.

பயங்கரவாதிகள் எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களை ஒடுக்க வேண்டியது மத்திய அரசின் பொறுப்பு.

அதற்கு தேவையான ஒத்துழைப்பை நாங்கள் வழங்க தயாராக உள்ளோம். மத்திய அரசு ஒப்புதல் வழங்கினால் மேகதாது திட்ட பணிகளை உடனே தொடங்க தயாராக உள்ளோம்.

இதுகுறித்து பிரதமர் மோடி, உள்துறை மந்திரி அமித்ஷா ஆகியோரை நேரில் சந்தித்து பேசினோம்.

இதனால் எந்த பலனும் இல்லை. பத்ரா மேலணை திட்டத்திற்கு ரூ.5 ஆயிரத்து 300 கோடி வழங்குவதாக மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை அந்த நிதியை வழங்கவில்லை. இது அரசியல் பழிவாங்கும் செயல் ஆகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அடுத்த 6 போட்டிகளிலும் நிச்சயம் வெல்வோம்

## ஆர்சிபியை சுட்டிக்காட்டிய ஸ்டீபன் பிளெமிங்

சென்னை, ஏப்.26:

ஐபிஎல் தொடரின் 43-வது லீக் ஆட்டம் சென்னையில் இன்று மாலை நடைபெறுகிறது. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதுகின்றன. இந்நிலையில், சி.எஸ்.கே. அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன்



பிளெமிங் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: அடுத்து வரும் 6 போட்டிகளையும் வென்று பிளே ஆப் சுற்றுக்கு செல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இப்படியொரு நிலையிலிருந்து எப்படி வெல்வது என்பதற்கான புளூ பிரிண்டை ஆர்சிபி அணி கடந்த ஆண்டு அமைத்துக் கொடுத்துள்ளது.

ஒருவேளை நாங்கள் தகுதிபெறாவிட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதிலும் தெளிவாக இருக்கிறோம். கடந்த காலங்களிலும் இதே மாதிரியான நிலையில் இருந்திருக்கிறோம். பிரச்சனைகளை சரிசெய்து அடுத்த ஆண்டே சாம்பியனும் ஆகியிருக்கிறோம்.

அடுத்து வரும் அத்தனைப் போட்டிகளையும் எங்களை சரிசெய்து கொள்வதற்கான வாய்ப்பாகத்தான் பார்க்கிறோம். எந்த வாய்ப்பையும் தவறவிடமாட்டோம் என தெரிவித்தார்.

# சத்ய சாய்பாபா உருவம் பொறித்த 100 ரூபாய் நினைவு நாணயம்

புதுடில்லி, ஏப்.26:

சத்ய சாய்பாபாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மத்திய அரசு சார்பில் அவரது உருவம் பொறித்த, 100 ரூபாய் நாணயம் வெளியிடப்பட உள்ளது. இதற்கான உத்தரவு சமீபத்தில் அரசிதழில் வெளியிடப்பட்டது.

ஸ்ரீ சத்ய சாய்பாபா ஆந்திர



மாநிலம், புட்டபர்த்தியில் கடந்த 1926, நவ., 23ல் பிறந்தார். அவரது நினைவாக வெளியிடப்பட உள்ள 100 ரூபாய் நாணயத்தின் ஒரு பக்கத்தில் அசோக சின்னம் பொறிக்கப்பட்டுஇருக்கும்.

மறுபக்கத்தில் சத்ய சாய்பாபாவின் உருவம் பொறிக்கப்பட்டு, 1926 -- 2026 என்றும், 'சத்ய சாய்பாபாவின் ஜென்ம சதாப்தி' என்ற வாசகமும் பொறிக்கப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பஹல்காம் தாக்குதல் எதிரொலி

# பாகிஸ்தானுடன் விளையாட மாட்டோம் - பி.சி.சி.ஐ. உறுதி




மும்பை, ஏப்.26:

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு விளையாட்டு பிரபலங்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதன் எதிரொலியாக இனி வரும் காலங்களில் பாகிஸ்தானுடன் இரு தரப்பு தொடர்களில் விளையாட மாட்டோம் என்று பி.சி.சி.ஐ. உறுதி அளித்துள்ளது.

இது குறித்து பி.சி.சி.ஐ. துணை தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில், "இனி வரும் நாட்களிலும் இருதரப்பு போட்டிகளில் பாகிஸ்தானுடன் கண்டிப்பாக விளையாட மாட்டோம். பாதிக்கப்பட்டவர்களுடன் நாங்கள் இருக்கிறோம். எங்கள் அரசாங்கம் என்ன சொன்னாலும், நாங்கள் செய்வோம். அரசாங்கத்தின் நிலைப்பாடு காரணமாக இருதரப்பு போட்டிகளில் பாகிஸ்தானுடன் விளையாடுவதில்லை. இனி வரும் காலங்களிலும் இருதரப்பு போட்டிகளில் பாகிஸ்தானுடன் விளையாட மாட்டோம். ஆனால் ஐ.சி.சி. போட்டிகளை பொறுத்தவரை, ஐசிசி வற்புறுத்தலின் காரணமாக நாங்கள் விளையாடுகிறோம்" என்று கூறினார். அத்துடன் ஐ.சி.சி. தொடர்களில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒரே குழுவில் சேர்க்க வேண்டாம் என ஐ.சி.சி.-க்கு பி.சி.சி.ஐ. கடிதம் எழுதியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் எல்லை பிரச்சினை காரணமாக கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருதரப்பு தொடர்களில் விளையாடவில்லை. ஐ.சி.சி. தொடர்களில் மட்டுமே விளையாடி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்படும் தீவிரவாத முகாம்கள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்த திட்டம்

புதுடெல்லி, ஏப்.26:

பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடையோருக்கு கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு தண்டனை வழங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து மத்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறியதாவது: பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்படும் தீவிரவாத முகாம்கள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்த இந்திய ராணுவம் திட்டமிட்டு உள்ளது.

கடந்த 2016-ம் ஆண்டு செப்டம்பர் 18-ம் தேதி காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டம், உரியில் உள்ள ராணுவ முகாம் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதைத் தொடர்ந்து 2016-ம் ஆண்டு செப்டம்பர் 28-ம் தேதி இந்திய இந்திய கமாண்டோ படை வீரர்கள் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிக்குள் தரைவழியாக நுழைந்து தீவிரவாத முகாம்களை அழித்தனர். இதில் ஏராளமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கடந்த 2019-ம் ஆண்டு



பிப்ரவரி 14-ம் தேதி காஷ்மீரின் புல்வாமாவில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில் 40 சிஆர்பிஎப் வீரர்கள் உயிரிழந்தனர். இதற்கு பதிலடியாக கடந்த 2019-ம் ஆண்டு பிப்ரவரி 26-ம் தேதி இந்திய போர் விமானங்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்து தீவிரவாத முகாம்கள் மீது சக்திவாய்ந்த குண்டுகளை வீசின. இதில் சுமார் 300 தீவிரவாதிகள் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகின.

தற்போது பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடையோருக்கு கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு தண்டனை வழங்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து மத்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறியதாவது:

பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் சுமார் 40-க்கும் மேற்பட்ட தீவிரவாத முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. அந்த முகாம்களில் பயிற்சி பெறும் பாகிஸ்தான் தீவிரவாதிகள் காஷ்மீர் எல்லைக்குள் ஊடுருவி அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஏற்கெனவே இரு முறை பாகிஸ்தானுக்கு தகுந்த பாடம் கற்பிக்கப்பட்டு உள்ளது.

இந்த முறை பாகிஸ்தானில் செயல்படும் தீவிரவாத முகாம்களை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தப்படலாம். இல்லையெனில் ட்ரோன்கள் மூலம் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்படும் தீவிரவாத முகாம்கள் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படலாம். இவ்வாறு பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏவுகணை சோதனை: இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் சூரத் போர்க்கப்பல் தற்போது குஜராத் கடல் பகுதியில் முகாமிட்டு உள்ளது. இந்த போர்க்கப்பலில் இருந்து நேற்று ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது. கப்பலில் இருந்து சீறிப் பாய்ந்த ஏவுகணை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை வெற்றிகரமாக தாக்கி அழித்தது என்று கடற்படை தெரிவித்துள்ளது. ஐஎன்எஸ் சூரத் போர்க்கப்பலில் பிரம்மோஸ், பராக் 8 ரக ஏவுகணைகள் பொருத்தப்பட்டு உள்ளன.

இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து பிரம்மோஸ் ஏவுகணைகளை தயாரித்து வருகின்றன. இந்த ஏவுகணைகளை உக்ரைன் போரில் ரஷ்ய ராணுவம் பயன்படுத்தி வருகிறது. இதுகுறித்து உக்ரைன் ராணுவ வட்டாரங்கள் கூறும்போது, "அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அதிநவீன ஏவுகணைகள் எங்களிடம் உள்ளன.

இந்த ஏவுகணைகள் மூலம் ரஷ்யாவின் அனைத்து ஏவுகணைகளையும் எங்களால் இடைமறித்து அழிக்க முடியும். ஆனால் பிரம்மோஸ் ஏவுகணையை மட்டும் எங்களால் தடுத்து நிறுத்த முடியாது. அந்த ஏவுகணை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மிகத் துல்லியமாக தாக்கி அழிக்கும். பிரம்மோஸை எங்களால் இடைமறித்து அழிக்க முடியாது" என்று தெரிவித்தன.

இந்த சூழலில் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்படும் தீவிரவாத முகாம்கள் மீது பிரம்மோஸ் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தப்படலாம் என்று கூறப்படுகிறது. ராணுவ தளபதி ஸ்ரீநகர் பயணம்: ராணுவ தளபதி உபேந்திர திவிவேதி இன்று காஷ்மீரின் ஸ்ரீநகருக்கு செல்கிறார். அங்கு ராணுவ மூத்த தளபதிகளுடன் அவர் முக்கிய ஆலோசனை நடத்த உள்ளார். பஹல்காம் தாக்குதலால் இந்தியா, பாகிஸ்தான் இடையே பதற்றம் எழுந்திருக்கும் சூழலில் ராணுவ தளபதி உபேந்திர திவிவேதியின் ஸ்ரீநகர் பயணம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

# சீனா: பஸ்சுக்கு காத்திருந்த மாணவர்கள் மீது மோதிய கார் - 5 பேர் காயம்

பீஜிங், ஏப்.26:



சீனாவின் ஜெஜியாங் மாகாணம் ஜின்ஹுவா நகரில் தொடக்கப்பள்ளி உள்ளது. இதில், 300க்கும் மேற்பட்ட மாணவ - மாணவிகள் பயின்று வருகின்றனர்.

இந்நிலையில், பள்ளி முடிந்து நேற்று மாலை மாணவ-மாணவியர் பஸ்சுக்கு காத்திருந்தனர். அப்போது சாலையில் வேகமாக வந்த கார், பஸ்சுக்கு காத்திருந்த மாணவர்கள் மீது மோதியது. இந்த சம்பவத்தில் 3 மாணவர்கள் உள்பட 5 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், விபத்தை ஏற்படுத்திய கார் டிரைவரை கைது செய்தனர். மேலும், காயமடைந்த 5 பேரையும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும்,

அமெரிக்கர்கள் யாரும் ஜம்மு-காஷ்மீருக்கு பயணிக்க வேண்டாம் என்று அந்நாட்டு மக்களுக்கு அமெரிக்க அரசு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் பயங்கரவாதிகளால் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் இந்த அறிவுரையை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதத் தாக்குதலால் ஜம்மு-காஷ்மீரில் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது. ராணுவ தரப்பில் பயங்கரவாதிகளுக்கு எதிரான தீவிரமான பதிலடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிகிறது. எனவே, அமெரிக்கர்கள் ஜம்மு- காஷ்மீருக்கு பயணம் மேற்கொள்ள வேண்டாம். அதேபோல மோதல் ஏற்படும் சூழல் இருப்பதால் இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் இருந்து 10 கிலோமீட்டருக்கு அப்பால் மட்டுமே அமெரிக்கர்கள் பயணிக்க வேண்டும். ஏனெனில் அங்கும் மோதலுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனம்

## மோடியுடன் இஸ்ரேல் பிரதமர் தொலைபேசியில் பேச்சு

ஸ்ரீநகர், ஏப்.26:



ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதல் குறித்து, பிரதமர் மோடியிடம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொலைபேசியில் பேசினார்.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து, பிரதமர் நரேந்திர மோடியிடம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொலைபேசியில் பேசினார். இந்திய மண்ணில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு இஸ்ரேல் பிரதமர் கடும் கண்டனத்தை தெரிவித்தார். இது இஸ்ரேல் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையே உள்ள உறவை வலுப்படுத்தியது.

இது குறித்து இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை: இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, பிரதமர் மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். பயங்கரவாதத் தாக்குதல் குறித்து பிரதமர் மோடியிடம் கேட்டறிந்தார். குற்றவாளிகளையும், அவர்களின் ஆதரவாளர்களையும் நீதியின் முன் நிறுத்துவோம் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் இந்திய மண்ணில் நடந்த பயங்கரவாத தாக்குதலை கடுமையாக கண்டித்தார். இந்திய மக்களும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கும் இஸ்ரேல் ஆதரவளிக்கும் என உறுதியளித்தார். எல்லை தாண்டிய பயங்கரவாத தாக்குதலின் காட்டுமிராண்டித்தனமான தன்மையை பிரதமர் மோடி பகிர்ந்து கொண்டார். இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தென் கொரிய முன்னாள் அதிபர் மூன் ஜே-இன் மீது லஞ்ச புகார்

சியோல், ஏப்.26:

தென் கொரியா முன்னாள் அதிபர் மூன் ஜே- இன் ஆட்சியில் இருந்த போது, விமான நிறுவனம் ஒன்றிடமிருந்து தன் மருமகன் வாயிலாக 1.2 கோடி ரூபாயை லஞ்சமாக பெற்றதாக அந்நாட்டு அரசு வழக்கு பதிந்துள்ளது.

முன்னாள் அதிபர் மூன் ஜே- இன் மீது தற்போது அரசு சார்பில் லஞ்ச வழக்கு பதியப்பட்டுள்ளது. தென்கொரியாவின் ஈஸ்டர் ஜெட் விமான நிறுவனம் 2019ல் தாய்லாந்து முதலீட்டாளர்களின் கூட்டு முயற்சியுடன், தாய் ஈஸ்டர் ஜெட் என்ற பெயரில் விமான சேவையை துவங்க திட்டமிட்டது.

இந்த நிறுவனத்தில் 2018 முதல் 2020 வரை தென்கொரிய முன்னாள் அதிபர் மூனின் மருமகன் பல லட்ச ரூபாய் சம்பளத்தில் பணியமர்த்தப்பட்டார்.

அவருக்கு விமான தொழிலில் எந்த முன் அனுபவமும் இல்லை என்றும், லஞ்ச பணத்தை முன்னாள் அதிபர் மூன், இவரது பெயரில் பெற்றதாகவும் தற்போது அரசு வழக்கு பதிந்துள்ளது. தென் கொரியாவில் விரைவில் தேர்தல் நடக்க உள்ள நிலையில், முன்னாள் அதிபர் மீதான லஞ்ச வழக்கு அக்கட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

# சிந்து நதிநீர் பங்கீட்டை இந்தியா நிறுத்துவது 'போர் நடவடிக்கை'யே: பாகிஸ்தான்

*இஸ்லாமாபாத், ஏப்.26:*



சிந்து நதிநீர் பங்கீட்டு ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்திவைக்க இந்தியா எடுத்துள்ள முடிவு, 'போர் நடவடிக்கை' ஆக கருதப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் அருகேயுள்ள பைசரன் பள்ளத்தாக்கில், தடை செய்யப்பட்ட லஷ்கர்-இ-தொய்பா எனும் பயங்கரவாத அமைப்பின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் (TRF) கடந்த 22-ம் தேதி சுற்றுலா பயணிகளைக் குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தி ஈடுபட்ட பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். லஷ்கர்-இ-தொய்பா அமைப்பு பாகிஸ்தானில் இருந்து இயங்குகிறது. பஹல்காமில் தாக்குதல் நடத்தியவர்களில் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களும் இருந்ததாக ஜம்மு காஷ்மீர் காவல் துறை தெரிவித்துள்ளது.

இந்த பின்னணியில், பிரதமர் மோடி தலைமையில் நேற்று (ஏப்.23) நடைபெற்ற பாதுகாப்புக்கான அமைச்சரவை கூட்டத்தில், எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்தும் வரை, இந்தியா-பாகிஸ்தான் இடையே கடந்த 1960-ஆண்டு செய்து கொண்ட சிந்து நதிநீர் பங்கீடு ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படும் என்பது உட்பட 5 முக்கிய முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பாகிஸ்தானியர்களுக்கான விசா சேவைகள் உடனடியாக நிறுத்தி வைக்கப்படுவதாக வெளியுறவு அமைச்சகம் இன்று தெரிவித்தது.

இந்தியாவின் இந்த நடவடிக்கை தொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான தேசிய பாதுகாப்புக் குழு கூட்டம் இஸ்லாமாபாத்தில் இன்று ஆலோசனை நடத்தியது. இதில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது. அவை வருமாறு:

சிந்து நதிநீர் பங்கீட்டு ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதற்கான இந்தியாவின் அறிவிப்பை பாகிஸ்தான் கடுமையாக எதிர்க்கிறது. இந்த ஒப்பந்தம் உலக வங்கியால் மத்தியஸ்தம் செய்யப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். மேலும், ஒருதலைப்பட்சமாக நிறுத்தி வைப்பதற்கான எந்த ஏற்பாடும் இதில் இல்லை. சிந்து நதிநீர் பாகிஸ்தானின் தேசிய நலனுக்கு மிகவும் முக்கியமானது, பாகிஸ்தானின் 24 கோடி மக்களுக்கு அது உயிர்நாடி.

சிந்து நதிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்த எத்தகைய விலையையும் பாகிஸ்தான் கொடுக்கும். சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின்படி பாகிஸ்தானுக்குச் சொந்தமான நீரின் ஓட்டத்தைத் தடுப்பது அல்லது திசைதிருப்புவது, ஆற்றின் கீழ் பகுதியின் உரிமைகளை அபகரிப்பதாகும். இது ஒரு போர்ச் செயலாகக் கருதப்படும். சிந்து நதிநீர் நிறுத்தப்பட்டால் பாகிஸ்தான் தனது முழு பலத்தையும் பயன்படுத்தி பதிலளிக்கும்.

# புதின், நிறுத்துங்கள்..! கீவ் மீதான தாக்குதலுக்கு டொனால்டு டிரம்ப் கண்டனம்

*கீவ், ஏப்.26:*



உக்ரைன் தலைநகர் கீவில் ரஷியா நடத்திய தாக்குதலில் 12 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, இதுபோன்ற தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு ரஷிய அதிபர் விளாதிமீர் புதினிடம் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

இந்தப் போர் விவகாரத்தில் ரஷியாவை டிரம்ப் இவ்வளவு காட்டமாக விமர்சிப்பது மிகவும் அரிதானது என்று கூறப்படுகிறது.

இது குறித்து தனது ட்ரூத் சோஷியல் ஊடகத்தில் அவர் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கீவ் நகரில் ரஷியா நடத்தியுள்ள ஏவுகணைத் தாக்குதல் கண்டனத்துக்குரியது. தேவையே இல்லாத இந்தத் தாக்குதல், அமைதி முயற்சிகள் நடைபெறும் இந்த நேரத்தில் நடத்தப்பட்டுள்ளது தவறான செயல்.

விளாதிமீர் புதின் அவர்களே, இத்தகைய தாக்குதலை உடனடியாக நிறுத்துங்கள். ஒவ்வொரு வாரமும் 5,000 வீரர்கள் உயிரிழந்து வருகின்றனர். அதை நிறுத்தி, உக்ரைனுடன் போர் நிறுத்தம் மேற்கொள்ளுங்கள் என்று தனது பதிவில் டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, கீவ் நகரிலுள்ள குடியிருப்புக் கட்டடமொன்றில் ரஷியா புதன்கிழமை இரவு நள்ளிரவு நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் அந்தக் கட்டடம் உருக்குலைந்தது. இதில் 12 பேர் உயிரிழந்ததாகவும் சுமார் 90 பேர் காயமடைந்ததாகவும் மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

பல மாதங்களுக்குப் பிறகு கீவ் நகரில் ரஷியா நடத்தியுள்ள மிக மோசமான தாக்குதல் இது. இந்தத் தாக்குதலுக்கு பல நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. கீவ் நகரில் நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் மூலம் ரஷியா ஓர் ஆக்கிரமிப்பு சக்தி என்பது நினைவுபடுத்தப்பட்டுள்ளதாக பிரிட்டன் பிரதமர் கியெர் ஸ்டாமர் விமர்சித்துள்ளார்.

உக்ரைன் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டே, அமைதியை விரும்புவதாக பொய் கூறுவதை விளாதிமீர் புதின் நிறுத்த வேண்டும் என்று பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் சாடியுள்ளார்.

ரஷியாவுக்கு போர் நிறுத்தத்தில் துளியும் நாட்டமில்லை என்பதை இந்தத் தாக்குதல் மிகத் தெளிவாக உணர்த்துவதாக டென்மார்க் பிரதமர் மெட்டே பிரெடெரிக்சன் கூறியுள்ளார். உக்ரைன் போரில் தாக்குதல்கள் தொடர்வது மிகவும் கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ள தென் ஆப்பிரிக்க அதிபர் சிறில் ராமபோசா, போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இந்தச் சூழலில், விளாதிமீர் புதினிடம் அதிபர் டிரம்ப் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

எனினும், ரஷியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த தாங்கள் தயாராக இருந்தாலும், அந்த நாட்டிடம் ஒருபோதும் சரணடையமாட்டோம் என்று உக்ரைன் துணை பிரதமர் யூலியா ஸ்விரிடென்கோ புதன்கிழமை திட்டவட்டமாகத் தெரிவித்தார். மேலும், ரஷியாவால் கடந்த 2014-ஆம் ஆண்டு ஒருதலைபட்சமாக இணைத்துக் கொள்ளப்பட்ட கிரீமியா தீபகற்பத்தை அந்த நாட்டுப் பகுதியாக அங்கீகரிக்க முடியாது என்று அவர் உறுதியாகக் கூறினார்.

இதற்கு டிரம்ப் எதிர்ப்பு தெரிவித்த சூழலில், கீவ் நகரில் ரஷியா நடத்திய தாக்குதலுக்குப் பிறகு அவர் அதிபர் புதினுக்கு எதிரான கருத்துகளை தற்போது பதிவிட்டுள்ளார்.

# சொந்த விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அனுப்பிய சீனா



*தனது சொந்த விண்வெளி நிலையத்துக்கு 3 வீரர்களை சீனா வியாழக்கிழமை அனுப்பியது.*

*இது குறித்து அந்த நாட்டு அரசு ஊடகம் தெரிவித்துள்ளதாவது:*

*சீனாவின் தியான்காங் விண்வெளி நிலையத்தை நோக்கி மூன்று வீரர்களுடன் ஷென்ஷோ-20 விண்வெளி ஓடம் கோபி பாலைவனத்தில் அமைந்துள்ள ஜிகுவான் ஏவுதளத்திலிருந்து வியாழக்கிழமை விண்ணில் செலுத்தப்பட்டது (படம்).*

*அந்த விண்வெளி ஓடத்தில் சென் டாங், சென் ஷாங்ருயி, வாங் ஜீ ஆகியோர் இருந்தனர். அந்த விண்வெளி ஓடம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டதாக அதிகாரிகள் அறிவித்தனர். விரைவில் அது தியான்காங் விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்படும். அங்கு ஏற்கெனவே ஆறு மாதங்களாகப் பணியாற்றிவந்த மூன்று விண்வெளி வீரர்கள் ஷென்ஷோ-20 ஓடம் மூலம் பூமிக்குத் திரும்புவார்கள். தற்போது விண்வெளி நிலையம் செல்லும் மூவரும், வரும் அக்டோபர் மாதம் பூமி திரும்புவார்கள் என்று அந்த ஊடகம் தெரிவித்தது.*

*ஷென்ஷோ-20 விண்வெளி ஓடத்தை செலுத்தியதன் மூலம் சீனா 35-ஆவது முறையாக மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. தியான்காங் விண்வெளி நிலையத்துக்கு வீரர்கள் அனுப்பப்படுவது இது 5-ஆவது முறை.*

# டிரம்ப்பின் வரி விதிப்புக்குப் பிறகு 'அமெரிக்காவுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளும் முதல் நாடு இந்தியா'



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் பரஸ்பர வரி நடவடிக்கைக்குப் பிறகு இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளும் முதல் நாடாக இந்தியா இருக்கும் என்று அந்நாட்டு நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட் தெரிவித்தார்.

இந்திய ஏற்றுமதிப் பொருள்கள் மீது 26% பரஸ்பர வரி விதிக்கும் டிரம்ப்பின் அறிவிப்பு 90 நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது ஜூலை 8-ஆம் தேதியுடன் முடிவுக்கு வரும் நிலையில் அமெரிக்கா-இந்தியா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

செப்டம்பர்-அக்டோபரில் முதல்கட்ட ஒப்பந்தம் கையொப்பமாக வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. இந்நிலையில் இது தொடர்பாக அமெரிக்க நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட் பேசியது குறித்து நியூயார்க் போஸ்ட் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை விரைவில் முடியும் நிலையில் உள்ளது. இந்தியா அதிக வரிவிதிப்பை விரும்பவில்லை.

இந்தியாவுடன் ஒப்பந்தம் மேற்கொள்வது அமெரிக்காவுக்கும் மிகவும் எளிதான விஷயமாகவே உள்ளது. ஏனெனில் இந்தியாவுடன் குறைந்த எண்ணிக்கையில்தான் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உள்ளது. இந்தியா தன்னிச்சையாக ரூபாய் மதிப்பை மாற்றியமைப்பதில்லை. வரி விதிப்பு விஷயத்தில் பிற நாடுகளும் இதேபோல நடந்து கொள்ள வேண்டும் என்று அதிபர் டிரம்ப் விரும்புகிறார் என்றார்.

அமெரிக்காவின் மொத்த இறக்குமதியில் இந்தியாவின் பங்களிப்பு 3 சதவீதமாக உள்ளது. இந்தியாவுடனான அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை 4,500 கோடி டாலர் (ரூ.3.9 லட்சம் கோடி) என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.